விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 11 ஞாயிற்றுக்கிழமை (25.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 096

## ஜெனிவா தீர்மானத்தை தாமதப்படுத்தினால்

# கடுமையான விளைவுகளை இலங்கை எதிர்கொள்ளும்

## இரா. சம்பந்தன் அரசுக்கு எச்சரிக்கை



(கொழும்பு) போருக்கு பின்னரான இலங்கையின் செயற்பாடுகள் குறித்த ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவதில் மேலும் தாமதப் படுத்தினால், அதன் கடுமையான விளைவுகளை இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கை பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார். (15-ம் பக்கம்...)

## கொழும்பில் தமிழ் இளைஞனை காணவில்லை



(யாழ்ப்பாணம்) கொழும்பு வத்தளையில் வசிக்கும் தமிழ் இளைஞன் ஒருவரை காணவில்லை என வத்தளை பொலிஸ் நிலையம் மற்றும் வத்தளை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவரது 15

## படுகாயங்களுடன் வீதியில் கிடந்தவர் பொலிஸாரால் மீட்பு

படுகாயமடைந்த நிலையில் வீதியில் அநாதரவாக கிடந்தவர் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

வயிற்றில் காயம் ஏற்பட்டு குடல் வெளியே வந்த நிலையில் மிருசுவிலுக்கும் எழுதுமட்டுவாழுக்கும் இடைப்பட்ட பிரதான வீதியோரத்தில், கிடந்த ஆண் ஒருவரை நேற்று அதிகாலை கொடிகாமம் பொலிஸார் மீட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதித்தனர். 16

## நாடளாவிய ரீதியில் திடீர் சுற்றிவளைப்பு

### 2,879 பேர் கைது

(கொழும்பு)

நேற்று அதிகாலை நாடளாவிய ரீதியில் வீதித் தடைகளை ஏற்படுத்தி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்-சுற்றிவளைப்பில் மொத்தமாக 2ஆயிரத்து 879 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் இந்த சுற்றிவளைப்பு சம்பவம் மூலம் 7ஆயி 16

## யாழ்ப்பாண மாநகர சபைக்கு

## இரகசிய வாக்கெடுப்பின்மூலம் முதல்வர் தெரிவாகவுள்ளார்

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாநகர சபைக்கு இரகசிய வாக்கெடுப்பின் மூலம் முதல்வர் தெரிவாகவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்.மாநகர சபை மற்றும் சாவகச்சேரி நகர சபைக்கான முதல்வர் தெரிவு நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்த தெரிவின் போது பெரும் குழப்பங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

யாழ்.மாநகர சபையின் முதல்வர் தெரிவுக்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சட்டத் 15

## தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின்

## விடுதலையை வலியுறுத்தி யாழில் கையெழுத்து பதிவு



(யாழ்ப்பாணம்)

ஆயுள்தண்டனை விதிக்கப் பட்ட தமிழ் அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்புவதற்கான கையெழுத்துப் போராட்டமொன்று நேற் 16

## இராணுவ வாகனம் மோதியதில் இளைஞன் ஸ்தலத்திலேயே பலி

### சாவகச்சேரியில் நேற்று இரவு கோரம்



(சாவகச்சேரி)

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென நிறுத்தப்பட்ட காரில் மோதுண்டு வீதியில் தூக்கி வீசப்பட்ட இளைஞனை பின்னால் வந்த இராணுவத்தினருடைய பேருந்து மோதியதில் குறித்த இளை 15

## ஐ.ஓ.சி பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிப்பு

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலைகளில் எந்த மாற்றமும் இல்லை

(கொழும்பு)

இலங்கையில் நேற்று முன் தினம் நள்ளிரவு திடீரென அதிகரிக்கப்பட்ட லங்கா ஐ.ஓ.சி நிறுவன பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபன எரிபொருள் விலையைப் பாதிக்கப்போவதில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பான தகவலை இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் தம்மிக்க ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பெற்றோல் மற்றும் டீசல் விலைகளை லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் அதிகரித்துள்ளது. ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 9 ரூபாயினாலும், ஒரு லீற்றர் டீசலின் விலை 5 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக 15

## யாழ். மாநகர சபை முதல்வர் தெரிவில்

### ஆனோல்ட்டுக்கு பதில் சிறில்?

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை முதல்வருக்கான தெரிவில் தமிழரசுக்கட்சி மாற்றம் செய்ய திட்டமிட்டுள்ளதாக தமிழரசுக்கட்சி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ் மாநகர சபை மேயராக தமிழரசுக்கட்சி ஆனோல்ட்டை தெரிவு செய்திருந்தது. இந்த நிலையில் யாழ் மாநகர சபை 15

## ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை வரவுள்ள நிலையில்

### வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 69-வது பிறந்தநாள் நேற்றாகும். அவருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவா 15



## மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்துக்கு வரும் வாய்ப்பு

### இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழ் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து மூன்று வருடங்களின் பின்னர் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்திற்கு வரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பாரிய வெற்றியை பெற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரியளவிலான வெற்றிக்கான ஈர்ப்பை பெற்றுள்ளதாகவும், அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த 15

## வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்



அருள் மிகு வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலய புனராவர்த்தன நவகுண்டபக்ஷ மஹாயாக மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவானது ஏவிளம்பி வருஷம் பங்குனிமாதம் 16ஆம் நாள் வெள்ளிக்கிழமை (30.03.2018) காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரையான சுபவேளையில் இடம்பெறுவதற்கு அம்மன் திருவருள் கூடியுள்ளது.
அம்மன் அடியார்கள் வருகை தந்து அம்மன் அருள் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.

**கர்மாரம்பம்**
26.03.2018 திங்கட்கிழமை
காலை 6.00 மணிக்குமேல்

**எண்ணெய்க்காப்புச் சாத்துதல்**
27.03.2018 செவ்வாய் காலை 5.30 மணி முதல்
29.03.2018 வியாழன் மாலை 2.00 மணி வரை

தொடர்புகள்:- 024 3243558, 077 0891776, 077 6725943, 077 7394140

(C-1984)

வற்றாப்பளை, முள்ளியவளை

தலைவர்
வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயப் பரிபாலன சபை


# சத்தியப்பிரமாண நிகழ்வில் தன்னைத்தானே செருப்பால் அடித்துக் கொண்ட வேட்பாளர்கள்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் சத்தியபிரமாண நிகழ்விற்கு முன்னதாக, ஒன்றுகூடிய அதே கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர்கள் சிலர், அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் செருப்பால் தன்னை தானே அடித்துக் கொண்டுள்ளனர்.

சிரேஷ்ட சட்டத்தரணியும், நுவரெலியா மாவட்ட பதில் நீதவானுமான ஏ.பி.கணபதிபிள்ளை முன்னிலையில் நேற்று ஹட்டன் கிருஷ்ணபவான் கலாசார மண்டபத்தில் இடம்பெறவிருந்த சத்தியபிரமாண நிகழ்விற்கு முன்னதாகவே இந்த அசம்பாவிதம் அரங்கேறியுள்ளது.

இதில் நேரடியாக போட்டியிட்டவர்களுக்கு ஆசனம் கிடைக்கவில்லையெனவும், குறித்த சத்தியபிரமாண நிகழ்வுக்கு அழைப்புவிடுக்கவில்லையெனவும் தெரிவித்தே ஏனைய வேட்பாளர்கள் இடையூறு விளைவித்ததாக பதில் தரப்பில் கூறப்படுகின்றது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் சிலர் வேட்பாளராக போட்டியிட்டனர். இதில் போட்டியிட்டவர்கள் அனைவரும் 200 இற்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்றதனால் அக்கட்சிக்கு ஒரு பட்டியல் ஆசனம் கிடைக்கப் பெற்றது. இந்த பதவியினை பகிர்ந்தளிப்பதில் ஏற்பட்ட குழப்ப நிலையிலேயே இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது.

எனினும், இந்த இடையூறு காரணமாக வேறு ஒரு இடத்தில் வைத்து குறித்த சத்தியப் பிரமாணம் நிகழ்வு இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)


நாற்புறமும் தோட்டக் காணிகள் சூழ்ந்த இரம்மியமான சூழலில் குடும்பமாகவோ, குழுவாகவோ தங்கக்கூடிய யாழின் ஒரே தொடர்மாடி வீட்டுத் தொகுதி

நாள் / கிழமை / மாத **வாடகைக்கு**



தளபாடங்களுடன் 2/3 அறை, வரவேற்பறை, சாப்பாட்டறை, குசினியுடன் கூடிய வீடுகள்...
கேபிள் தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, குழந்தைகள் பூங்கா, நீச்சல் தடாகம், கருத்தரங்க/கொண்டாட்ட மண்டபம், மொட்டை மாடி, A/C, WiFi, Telephone, Intercom

Managed By: SIKARAM ACADEMY, School of Hospitality

அழையுங்கள்:
076 864 0726 | 021 450 3861

கொட்டைக்காடு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்
www.shakthiholidayhome.com

## சேவை முகவர்
### வீடு, காணிகள் விற்பனைக்கு

ஊரெழு 12, நுணாவில் 21 பரப்பில் 100 தென்னம்பிள்ளைகள், B.M.C லேன், கொக்குவில் ஆகிய இடங்களில்
யாழ்+நல்லூரில் விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்.
V.சுந்தரம்-
0774819801
(3367)

## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள கௌரவமான தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலைக்குப் பணிப்பெண் தேவை.
தொடர்பு:0777427568
(335)

## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. கால்நடை வளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் இருப்பதுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஆரம்ப சம்பளம் மாதம் வழங்குவதுடன் பிற சலுகைகளும் உண்டு.
தொ.பே:0771681697, 0766205322


### திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் ஸ்ரீ சாயி சேவா நிலையத்தில் இன்று அதிகாலை 4 மணிமுதல் திருவாசக முற்றோதல் இடம்பெறும். (ந)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகர் சுண்டுக்குளி, கொக்குவில் ஆகிய பகுதிகளில் சிறிய உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகட்கு:
0766282683

## நோயாளிகள்/ வயோதிபர்கள் பராமரிப்பு சேவை

■ உங்கள் வீடுகளுக்கே வந்து எமது பயிற்சி பெற்றவர்கள் பராமரிப்பு சேவை செய்யப்படும்.

■ எங்கள் நிலையத்திலேயே உங்கள் வயோதிபர்கள் / நோயாளிகளையும் வைத்திய நிலையங்களில் இருந்து வெளியேறும் வயோதிப நோயாளர்களுக்கு சிறிது காலத்துக்கு வைத்திய சேவையுடன் பாராமரிப்பும் செய்யப்படும்.

0778730129
(3366)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## மரண அறிவித்தல்



# இராசேந்திரம் மதனராஜ் (நந்தன்) (கனடா)

*யாழ்.அளவெட்டி தம்மளையை பிறப்பிடமாகவும் கனடா பிறம்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் மதனராஜ் அவர்கள் கடந்த 19.03.2018 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம்-புவனேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு புத்திரனும், லோகேந்திரன்-லோகேந்திரராணி (புவிதாஸ் றெக்ஸ் ரைல்ஸ்--பருத்தித்துறை வீதி, இருபாலை) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், புவிதா அவர்களின் பாசமிகு கணவரும், அனோஜ், அபர்ணா, அஸ்வின் ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம், கமலேஸ்வரியின் (குஞ்சுக்கமலம்) பெறாமகனும், காலஞ்சென்ற அரியகுட்டியின் மருமகனும், காலஞ்சென்ற புவன்ராஜ் மற்றும் ரவிராஜ், ரஜனி, சிவறூபன், நிகேதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், புஸ்பராணி, சிவபாலேஸ்வரி, சிவகுமார், கவிதா, பாலவதனி, புவிந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், துஸ்யந்தினி அவர்களின் சகோதரரும், வேணுஜன், சஜனி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், மிதுன், மிர்த்திகா, அனுஸ், அபிஷன், சாயினி ஆகியோரின் பாசமிகு மாமனும், மயூரா, மதுஷா, துஷாந்தன், ரதுஷன், லக்ஷயன், தபிசன், தர்மிகா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனடா செண் ஜோன்ஸ் டிக்சி கல்லறைத்தோட்டத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

முகவரி-மெமோறியல் லேன்,
மானிப்பாய்.

தகவல்:சகோதரி
(0777351179)

(3361)

## துயர் பகிர்கின்றோம்



### திருமதி யோகேஸ்வரி போகீந்திரன்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ரேவதி மோகன்ராஜ் அவர்களுடைய பாசமிகு தாயார் திருமதி யோகேஸ்வரி போகீந்திரன் அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/தாவடி இந்து த.க பாடசாலை,
தாவடி, கொக்குவில்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்

## அப்பாவின் விடுதலையைக் கோரி

# ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் ஆளுநருடன் கொழும்பில் சந்திப்பு





(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் நேற்று அவர்களது உறவினர்கள் சகிதம் வட மாகாண ஆளுநரை சந்தித்து தந்தையின் விடுதலை தொடர்பில் கலந்துரையாடினர்.

கொழும்பில் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது ஆனந்த சுதாகரனின் இரு பிள்ளைகளுடன் விசன் அறக்கட்டளையின் தலைவர் மற்றும் உறவினர்கள் கலந்துகொண்டு நிலைமையை எடுத்துக்கூறினர்.

இதனைச் செவிமடுத்த வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று ஆவன செய்வதாக தெரிவித்துள்ளதாக குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்தனர். (இ-7)

# நாட்டைக் குழப்பி ஆட்சியைப் பிடிக்க சில அரசியல் தலைமைகள் முயற்சி



(கொழும்பு)

அரசியல் இலாபத்திற்காக, நாட்டை குழப்பி ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவதற்காக சில அரசியல் தலைமைகள் செயற்பட்டு வருவதாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவர்களின் கனவுகளை முறியடிக்க அனைத்து மக்களும் ஒன்றிணைந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாண்டியடி சங்கமன் கிராம 50வது மாதிரி வீட்டுத் திட்டத்தினை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவே இலங்கையின் அடுத்த சிறந்த தலைவர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# இலங்கையில் பயங்கரவாதத்தை தோற்கடிக்க பாக். உதவி ஐ.நாவில் ஒத்துழைப்பு; ஜனாதிபதி மைத்திரி பாராட்டு

## உறவைப் பலப்படுத்தி இணைந்து பயணிக்க இரு நாட்டு தலைவர்களும் உறுதி









(இஸ்லாமாபாத்)

நீண்டகாலமாக பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையில் இருந்துவரும் இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தி பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கு சகோதர நாடுகள் என்ற வகையில் இணைந்து பயணிக்க இரு நாடுகளின் தலைவர்களும் உறுதியளித்தனர்.

பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பாகிஸ்தான் ஜனாதிபதி மம்னூன் ஹுசைனுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முற்பகல் இடம்பெற்றது. இச் சந்திப்பின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இஸ்லாமாபாத் நகரிலுள்ள ஜனாதிபதி அலுவலகத்திற்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பாகிஸ்தான் ஜனாதிபதி மகிழ்ச்சியுடன் வரவேற்றார். தலைவர்களுக்கிடையிலான சுமுகமான சந்திப்பைத் தொடர்ந்து இருதரப்பு கலந்துரையாடல் ஆரம்பமானது.

தனது உத்தியோகபூர்வ அழைப்பையேற்று பாகிஸ்தானுக்கு வருகை தந்தமைக்காக ஜனாதிபதிக்கு தனது நன்றியைத் தெரிவித்த பாகிஸ்தானிய ஜனாதிபதி தனது நாட்டுக்கு இது பெரும் கௌரவமாகும் எனத்தெரிவித்தார்.

இலங்கைக்கு வழங்கும் புலமைப்பரிசில்கள் மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்களை அதிகரிக்குமாறு ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பாகிஸ்தான் ஜனாதிபதி எதிர்காலத்தில் அச்சந்தர்ப்பங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

உலக பயங்கரவாதத்திற்கெதிராக அணிசேர வேண்டியதன் அவசியம் குறித்து இரு நாடுகளின் தலைவர்கள் விரிவாகக் கலந்துரையாடியதுடன், கடந்த யுத்த காலத்தில் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக இலங்கைக்கு பாகிஸ்தான் வழங்கிய உதவிகளை ஜனாதிபதி பாராட்டினார்.

ஐ.நா.மனித உரிமை கூட்டத் தொடர்களின் போது பாகிஸ்தான் இலங்கைக்காக வழங்கிவரும் ஒத்துழைப்பையும் ஜனாதிபதி பாராட்டினார்.

இலங்கைக்கு தேவையான சந்தர்ப்பத்தில் உதவுவதற்கு பாகிஸ்தான் தயார் என்றும் பாகிஸ்தானை சகோதர நாடாக ஏற்றுக்கொள்ளுமாறும் ஜனாதிபதியிடம் தெரிவித்த பாகிஸ்தான் ஜனாதிபதி, அடுத்த சார்க் விழாவை பாகிஸ்தானில் நடத்துவதற்கு இலங்கை உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இரு நாடுகளுக்கும் இடையில் இருந்து வரும் வெளிநாட்டு, பாதுகாப்பு, வர்த்தக மற்றும் முதலீட்டு தொடர்புகளை மேலும் உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதியின் இந்தப் பயணம் உதவியுள்ளதாக பாகிஸ்தான் ஜனாதிபதி மம்னூன் ஹுசைன் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் முகம்கொடுக்க நேரிட்ட கவலைக்குரிய நிகழ்வுக்கு பின்னர் 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டியின் போது இலங்கை கிரிக்கெட் அணியை பாகிஸ்தானுக்கு அனுப்பிவைக்க இலங்கை அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை பாகிஸ்தான் ஜனாதிபதி பாராட்டினார்.

பாகிஸ்தானிய ஜனாதிபதி மம்னூன் ஹுசைனின் பேரப்பிள்ளைகளுடன் ஜனாதிபதி மைத்திரி புகைப்படத்திலும் தோற்றினார். (இ-7)

# இலங்கை-பாகிஸ்தான் இடையே 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்




(இஸ்லாமாபாத்)

இளைஞர் அபிவிருத்தி, இராஜதந்திரிகள் மற்றும் அரச அதிகாரிளுக்கு பயிற்சி வழங்குதல் ஆகிய துறைகளில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவை மேம்படுத்தும் வகையில் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாகிஸ்தான் பிரதமர் அப்பாஸி ஆகியோர் முன்னிலையில் பாகிஸ்தான் பிரதமர் அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் வெளிநாட்டுச் சேவை நிறுவனத்திற்கும், இலங்கை பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்திற்கும் இடையிலான முதல் ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளரும், இலங்கை சார்பில் வெளியுறவுத்துறை இராஜாங்க அமைச்சரும் கையெழுத்திட்டுள்ளனர்.

இளைஞர் அபிவிருத்தி குறித்த இரண்டாவது ஒப்பந்தம் இலங்கையின் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சிற்கும், பாகிஸ்தானின் மாகாண ஒருங்கிணைப்பு அமைச்சிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் பொதுக் கொள்கைக்கான தேசிய பாடசாலை மற்றும் நிர்வாக அபிவிருத்திக்கான இலங்கை கல்வி நிறுவனம் ஆகியவற்றிற்கிடையே மூன்றாவது ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# வீதிகளில் கழிவுகளை வீசுவதை மக்கள் தவிர்க்க வேண்டும்

## முதலமைச்சர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வீதிகளில் கழிவுகளை வீசுவோர் தொடர்பில் பொது மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு தடுப்பதற்கு முன்வர வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் மீன் சந்தை கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எத்தனையோ தடவைகள் மீண்டும் மீண்டும் நாம் அறிவுறுத்துகின்ற போதும் கோப்பாய் - கைதடி வீதியின் கரையோரங்களில் உரப்பைகளில் தலைமுடிக் கழிவுகளையும் இறைச்சிக் கழிவுகளையும் மற்றும் இன்னோரன்ன கழிவுப் பொருட்களையும் எதுவித மனக்கிலேசமும் இன்றி கொண்டு வந்து வீசி எறிந்துவிட்டு செல்வதை எம்மக்கள் தவிர்க்க வேண்டும்.

இவ்வாறு வீசுபவர்களை இப்பகுதியில் உள்ள மக்கள் இனங்கண்டு அவர்களின் தவறான செயற்பாடுகளை அவர்களுக்கு உணர்த்தி அதனை வெளிக்கொண்டு வந்தாலன்றி எத்தனை சட்டங்களினூடாகவும் இவற்றைத் தடுத்து நிறுத்துவது கடினமானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மரண அறிவித்தல்



மலர்வு
18.02.1930

உதிர்வு
23.03.2018

# சபாபதிப்பிள்ளை கதிரவேலு

யாழ் உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் இல.451, 6ம் யூனிற் இராமநாதபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை கதிரவேலு கடந்த 23.03.2018 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை- சின்னம்மா தம்பதியரின் மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, தங்கம்மா மற்றும் மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், தியாகராசா (வெற்றி) மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் புஸ்பமலர் (கிளி), விஜயலட்சுமி (வேவி), கெங்கேஸ்வரன், சிவனேஸ்வரன், ஜெகதீஸ்வரன், விக்கினேஸ் வரன், குமரேஸ்வரன், சுரேஸ்வரன் (ராசன்), இராமநாதபுரம் இலங்கேஸ்வரன் (அப்பன் இராமநாதபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தேவராசா மற்றும் சிவசுப்பிரமணியம், சாந்தி, வதனி, கௌரி, சுமதி, காயத்திரி, தனலக்ஷ்மி, கீதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.451, யூனிற் - 06.
இராமநாதபுரம், கிளிநொச்சி.

தகவல்:- குடும்பத்தினர்
ராசன் - 077 042 9306, அப்பன் - 077 886 0863

(C-1993)



"The Guide" இளைஞர்களின் எதிர்காலத்திற்கான வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இளைஞர்களின் எதிர்காலத்துக்கு உதவியாக ஈ.ஆர்.பிரணவா, ஏ.கொன்சன் சேவியர் ஆகியோரால் தயாரிக்கப்பட்ட 'The Guide' எனும் கல்வி, தொழில்வாய்ப்பு மற்றும் பொதுப்பரீட்சைக்கான வழிகாட்டி நூலின் வெளியீட்டு விழாவில் மதகுருக்கள், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், பேராசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- பொ.சோபிகா)

# இனவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குறிக்கோள்

## அமைச்சர் எஸ்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டில் இன - மத வாதத்தை முடிவுக்கு கொண்டுவந்து அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை உருவாக்குவதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான குறிக்கோள் என அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக அரசியல்வாதிகளே இன - மத வாதத்தை போசித்து வருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள அமைச்சர் திஸாநாயக்க இந்த நிலைமை நாட்டுக்கு நல்லதல்ல என்றும் எச்சரித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்காக போட்டியிட்டு வெற்றி பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பதவிப் பிரமாண நிகழ்வு நேற்று கண்டியில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பதவிப் பிரமாணத்தை அடுத்து அவர்கள் முன்னிலையில் உரையாற்றிய அமைச்சர் திஸாநாயக்க,

எமது நாட்டை இனவாதத்திற்குள் தள்ளிவிடாது நாம் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டியது அவசியம். ஏனெனில் இந்த நாட்டில் இனவாதத்தைத் தூண்டியது அரசியல்வாதிகள்.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவே அரசியல்வாதிகள் இனவாதத்தை தூண்டி போசித்தனர். எமது நாட்டில் மாத்திரமல்ல உலகம் முழுவதும் இனவாதமும் கடும் போக்குவாதமும் அதிகாரத்தை மையப்படுத்தியே போசிக்கப்பட்டுள்ளது.

இதனால்தான் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவுகளும் எமது நாட்டு மக்களும் தமது அன்றாட வாழ்க்கையில் இனவாதத்தையும் பொய்யான தேசப்பற்றையும் ஒரு அங்கமாக இணைத்துக் கொண்டுள்ளனர் என்பது தெளிவாக வெளிப்படுத்தி இருக்கின்றன. இது நாட்டுக்கு நல்லதல்ல.

தற்போதைய மைத்திரி - ரணில் தலைமையிலான அரசாங்கம் தொடர்பில் மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதாகவும் குறிப்பிட்டஅமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அதனாலேயே நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளும் பிரதான கட்சிகள் இரண்டையும் மக்கள் தோற்கடித்ததாகவும் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றும் வகையில் அரசாங்கத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதனால் ஏற்பட்டுள்ள சில குழப்பங்கள் விரைவில் முடிவுக்கு வந்துவிடும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுளளார். (இ-7)

# தொண்டராசிரியர்கள் டக்ளஸ் எம்.பி.சந்திப்பு



(கொழும்பு)

தமது நியமனங்களை உறுதிசெய்து தருமாறு கோரி தொண்டராசிரியர்கள் ஒரு தொகுதியினர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே தொண்டராசிரியர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தொண்டராசிரியர் நிரந்தரமாக்கலுக்கான நேர்முகத்தேர்வில் ஆவணங்கள் ரீதியாக உள்வாங்கப்பட்ட 182 தொண்டராசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் தாமும் குறித்த நேர்முகத் தேர்வுக்கு தகுதி பெற்றிருந்தும் கடந்த யுத்த அனர்த்தங்கள் காரணமாக தாங்களால் சில ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாது போனதால் தாங்கள் குறித்த நிரந்தரமாக்கலில் தெரிவு செய்யப்படவில்லை என்று தெரிவித்த அவர்கள்,

நீண்டகாலமாக ஊதியங்களைக்கூட எதிர்பாராது தாம் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் குறித்த தொழிலையே தமது எதிர்காலமாக நம்பியிருப்பதாகவும் தற்போது தமக்கு வயது அதிகரித்துச் சென்றுள்ள நிலையில் குறித்த நியமனம் கிடைக்காது போனால் தமது குடும்பநிலை பாதிக்கப்படும் என்றும் தெரிவித்த அவர்கள் தமக்கும் குறித்த 182 தொண்டராசிரியர்களுடன் சேர்த்து நிரந்தர நியமனங்களை வழங்க ஏற்பாடுகள் செய்து தர வேண்டும் என்றும் இது டக்ளஸ் தேவானந்தாவால் மட்டுமே இயலுமான காரியம்என்றும்தெரிவித்துள்ளனர்.

குறித்த தொண்டராசிரியர்களின் கோரிக்கைகளை செவிமடுத்த டக்ளஸ் எம்.பி. கல்வி அமைச்சின் செயலாளருடன் தொடர்பை ஏற்படுத்தி தொண்டராசிரியர்களுடன் உரையாடலை மேற்கொண்டு காலக்கிரமத்தில் குறித்த தொண்டராசிரியர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் செய்வதாக உறுதியளித்தார். (இ-7)

# கோவிலுக்குச் சென்றோரிடம் கொள்ளை; தாக்குதலில் பொலிஸ் அதிகாரி பலி!

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - மைலம்பாவெளி ஆலய வழிபாட்டிற்கு நேற்று முன்தினம் காரில் சென்று வரும் போது கொள்ளையர் குழு ஒன்று கொள்ளையடிக்க முற்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் பலியாகியுள்ளார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய குருநாகல் - அலாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் எம்.ஹேரத் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

உயிரிழந்த குறித்த பொலிஸ் அதிகாரி சாவகச்சேரியிலுள்ள அவரது குடும்ப நண்பர்களுடன் மட்டக்களப்பிற்கு ஆலயங்களை வழிபாடு செய்ய கடந்த வியாழக்கிழமை கார் ஒன்றில் புறப்பட்டுச் சென்று மட்டக்களப்பிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் உள்ள மைலம்பாவெளி ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை முடித்து விட்டு ஆலயத்திற்கு முன்னாள் உள்ள வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் ஏற முற்பட்ட போது கொள்ளையர் குழு ஒன்று கூரிய ஆயுதங்களை காட்டி அவர்களிடமிருந்து பணம் நகைகளை கொள்ளையிட முயற்சித்த போது மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலில் பொது மக்களும் இணைந்து கொள்ளையர்கள் மூவரை மடக்கிப் பிடித்ததோடு கொள்ளையர்களின் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் அதிகாரியை மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில்அனுமதித்துள்ளனர்.

குறித்த பொலிஸ் அதிகாரியை வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட கொள்ளையர்கள் மூவரும் ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மடக்கி பிடிக்கப்பட்ட கொள்ளையர்கள் ஏறாவூர் தன்னாமுனையைச் சேர்ந்தவர்கள் எனவும் கொள்ளைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கூரிய ஆயுதங்களையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் உடல் பிரேத பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என மட்டக்களப்பு வைத்திய சாலை பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** ரோக பயமுண்டு, எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், உடல் நலன் சீராகும், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மேடம்:** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு, தொழில் வளர்ச்சியுண்டு.

**மிதுனம்:** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியத்தில் சிறு மாற்றங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியத்தில் ஆர்வம் காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சூரி,சுக். புத. | | | சந் |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் கேட்டை | | ராகு |
| கேது | | | |
| சனி, செவ் | குரு | | |

**25.03.2018**

பங்குனி 11, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு

அட்டமி முற்பகல் 7.51 மணிவரை

நவமி பின்னிரவு 5.27 மணிவரை

திருவாதிரை பிற்பகல் 2.01 மணிவரை

சுபநேரம் 9.15-10.45 மணிவரை

இராகுகாலம் 4.45-6.15 மணிவரை

ஸ்ரீராம நவமி

வளவன்

**கடகம்:** இடமாற்றத்தால் இனிய மாற்றங்கள் ஏற்படலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், சயனசுகக் குறைவான நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படலாம்.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுணங்கிய காரியத்தில் முன்னேற்றமுண்டு.

**கன்னி:** செல்வாக்கு மேலோங்கும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

# நிர்க்கதியாகி நிற்கும் பிஞ்சுகளின் தந்தை; அரசியல் கைதி

# ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு நேற்று 1000 கருணை மனுக்கள்





படங்கள்:- மகாலிங்கம்

(கரணவாய்)

தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி வடமராட்சியில் இருந்து 1000 கருணை மனுக்கள் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பப்பட்டன.

போதைக்கு எதிரான அமைப்பும், வடமராட்சி இளைஞர்களும் இணைந்து இம்மனுக்கள் அனுப்பும் செயற்பாட்டை மேற்கொண்டிருந்தனர்.

காலை 9 மணியளவில் நெல்லியடி பேருந்து நிலையத்தில் வைத்து கருணை மனு அனுப்பப்பட்டது.

இதில் மாகாண சபை உறுப்பினர்களான எஸ். சுகிர்தன், எஸ். அகிலதாஸ், வர்த்தக சங்கத்தினர், பொது மக்கள் எனப் பலர் கையொப்பம் இட்டு மனுக் களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர்.

இதேவேளை முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறை பேருந்து தரிப்பு நிலையத்திலும் வர்த்தகர்கள், தனியார் போக்குவரத்து துறையினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு கையொப்பங்களை இட்டனர்.

நிர்க்கதியாகி நிற்கும் பிஞ்சுகளின் தந்தைக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு கோரி அனுப்பப்பட்டுள்ள கருணை மனுவில் பிஞ்சுகளின் நலனில் அக்கறை கொண்டு ஒரு தலைவன் என்ற வகையில் கவிதரன், சங்கீதா ஆகிய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனின் ஆயுள் தண்டனையை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிறைவேற்று அதிகார முள்ள ஜனாதிபதி என்ற தற்துணிவின் அடிப்படையில் பொதுமன்னிப்பாக மாற்றி அவரை விடுதலை செய்யுமாறு தயவன்புடன் வேண்டு கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-9-60)




கோப்பாய் சந்திப் பகுதியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு அமைவாக நவீன வசதிகளைக் கொண்ட மீன் சந்தைக் கட்டடம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் விசேட நிதி ஒதுக்கீடான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மற்றும் பிரமாண அடிப்படையிலான நிதியின் கீழ் வடக்கு மாகாண கல்வி அமைச்சரால் ஒதுக்கப்பட்ட இருபது இலட்சம் ரூபாய் செலவில் இந்த சந்தைக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் செயலாளர் ஜெலிடான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கே.சர்வேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். பொதுமக்களின் நன்மை கருதி இது இரவு நேர சந்தையாகவும் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (படங்கள்:-பொ.சோபிகா)

# 'காச நோயற்ற தேசத்தை நோக்கி' பருத்தித்துறையில் விழிப்புணர்வுப் பேரணி




(கரணவாய்)

"காசநோயற்ற தேசத்தை நோக்கி" எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வுப் பேரணியும் கருத்துரைகளும் பருத்தித்துறையில் நடைபெற்றது. நேற்று சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் பருத்தித்துறை கிராமக் கோட்டுச் சந்தியில் இருந்து இவ் விழிப்புணர்வுப் பேரணி ஆரம்பமானது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி கடம்நாதனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் பேரணியில் வடமாகாண சுகாதாரப்பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், யாழ்.மாவட்ட காசநோய் தடுப்புப்பிரிவு வைத்திய அதிகாரி மாணிக்கவாசகர், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஜி.செந்தூரன், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதோஸ்குமார், பருத்தித்துறை சுகாதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி குகதாசன், பிராந்திய தொற்றா நோய் பிரிவு வைத்திய அதிகாரி றஜீவ், மாகாண சபை உறுப்பினர்களான கே.தர்மலிங்கம், வி.சிவயோகன் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பருத்தித்துறை பிரதேச சபையினர், சுகாதார பரிசோதகர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை நலன் புரிச் சங்கத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் பேரணி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நிறைவடைந்ததையடுத்து விழிப்புணர்வு கருத்துறைகள் வழங்கப்பட்டதுடன் துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது. போக்குவரத்து ஒழுங்கை பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டனர். (இ-9-60)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

இரத்ததானம் ஒரு உன்னத கொடை எனும் தொனிப்பொருளில் அமரர் சபாரத்தினம் கனகநாத் நினைவாக இன்று ஞயிற்றுக்கிழமை குருதிக்கொடை முகாம் இடம்பெறும்.

யாழ். வடலியடைப்பு சனசமூக நிலையத்தில் இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை குருதி சேகரிப்பு இடம்பெறும் இந் நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை குருதி வங்கி பொறுப்பதிகாரியும் பதில் வைத்திய அத்தியட்சகருமான மா. பிரதீபன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டு குருதி சேகரிப்பர். (இ-7)

## புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாதிரிப்பரீட்சை நாளை 26 ஆம் திகதி திங்கட் கிழமை, 12 கல்வி வலயங்களின் கீழ் உள்ள பாடசாலைகளிலும் இடம்பெறும் என வடக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப்பிரிவு) எஸ்.சற்குணராசா அறிவித்துள்ளார். (9-7)

## சிரமதானம் இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அமைப்பினராலும் கிறீன் பீல்ட் ச.ச.நிலையமும் கிறீன் கிங் விளையாட்டுக் கழகம் மற்றும் கே.பி.ஆர் இளைஞர் மன்றமும் இணைந்து யாழ். மரியாள் பேராலய கதிர்றல் வீதி சுற்றாடல் சிரமதானம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் என பிரதிநிதி வி.வி.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (7)




## சிவபெருமான் கருணை சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு கிரஞ்சியம்பதி ஸ்ரீமீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரசிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை 5 ஆம் நாள் உற்சவத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப் புலவர் செஞ்சொற்வேந்தர் எஸ். ரீ.குமரன் சிவபெருமான் கருணை என்னும் தலைப்பில் சொற்பொழிவினை வழங்குவார். (7-10)

## சிவதொண்டன் நிலையத்தின் ஏற்பாட்டில் யோகர் சுவாமிகளின் 54 ஆவது குருபூசை

(யாழ்ப்பாணம்)

யோகர் சுவாமிகளின் 54 ஆவது குருபூசை தினம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் கொழும்புத்துறை சமாதிக் கோவிலிலும் சிவதொண்டன் நிலையத்திலும் இடம்பெறும் நிகழ்வினைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (7)

## குருத்தோலை ஞாயிறுதின ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருக்குடும்ப சனசமூக நிலைய குருத்தோலை ஞாயிறு தின ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மாணவர்களின் ஆக்கத்திறன் போட்டிகளும் இடம்பெறவுள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (7)

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

வட்டு. கிழக்கு துளட்டிப்பனை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான நூதன பஞ்சதள இராஜகோபுர மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் முதலாம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சித்தன்கேணி மஹா கணபதி பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ.ச. ஸ்ரீமதுசூதனக் குருக்கள் தலைமையில் இடம் பெறும். பிற்பகல் 6 மணியளவில் அம்பிகை வீதி வலம் வரும் காட்சி இடம்பெறும். (7)

# தமிழ் அரசியல் கைதி சுதாகரனை விடுதலை செய்யக்கோரி கல்முனையில் கையெழுத்து வேட்டை

## மதகுருமார்கள் பங்கேற்பு




(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி கல்முனை இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாபெரும் கையெழுத்து வேட்டை நேற்று கல்முனை அம்பலத்தடி விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது கல்முனை பிரதேசத்தினை மையப்படுத்திய கல்முனை ஸ்ரீமுருகன் தேவஸ்தான இந்துமத குரு சிவஸ்ரீ சச்சிதானந்தசிவம், கல்முனை திரு இருதயநாதர் தேவாலயத்தின் பங்குத் தந்தை ஜேசுதாசன் அடிகளார், இஸ்லாமிய மதகுருவான கல்முனை நகர பள்ளிவாசல் பேசிமாம் ஏ.எல்.எம். இக்பால் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு கையொப்பம் இட்டனர்.

அத்துடன், கல்முனை வாழ் பொது மக்கள், இளைஞர்கள், வர்த் தக சங்க உறுப்பினர்கள், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகள், பல்கலைக் கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு தமது கையெழுத்துக்களை யிட்டு அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் விடுதலைக்கு ஆதரவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முன்னணி உறுப்பினர் சத்தியப்பிரமாணம்





(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த புதன்கிழமை மாலை 4 மணியளவில் தியாகி திலீபனின் நினைவுத் தூபிமுன் இடம்பெற்ற வணக்க நிகழ்வினைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற சத்தியப்பிரமாண நிகழ்வில் ஈகச்சுடரினை மாவீரர் குலேந்திரனின் மகளான நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் குலேந்திரன் பிருந்தா ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து மாவீரர் நினைவுக் கல்லறைக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் மலர்மாலை அணிவித்தார். இதன்போது மாமனிதர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு வணக்க நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் முன்னிலையில் உள்ளூராட்சி உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (இ-4)

## நகரசபை உறுப்பினர்கள் இருவர் தந்தை முன் பதவிப்பிரமாணம்





(கொழும்பு)

சிலாபம் நகரசபைக்கு தெரிவாகி உள்ள 2 உறுப்பி னர்கள் தந்தை முன்னிலை யில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சிலாபம் நகரசபைக்கு மெல்புர வட்டாரத்தில் போட்டியிட்ட சத்துரங்க அபே சேகர மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேலதிக பட்டியலில் தெரிவான டிலான் பெரேரா ஆகியோரே இவ்வாறு தமது தந்தையர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

துஷான் அபேசேகர தனது தந்தையான புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த சிசிர அபேசேகர முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

டிலான் பெரேரா, தனது தந்தையான முன்னாள் அமைச்சர் நியோமல் பெரேரா முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். (இ-7)


### மணமகன் தேவை

1990, 1995இல் பிறந்த அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மணமகள்மாருக்கு பல்கலைக் கழகத்தில் படித்த மணமகன்மார் தேவை.

தொடர்பு: 0094 7725 0144, 077 900 7091

### சாரதி தேவை JCB EXPECT MORE

சாரதி அனுமதிப்பத்திரம் உடைய JCB வாகனம் ஓட்டக்கூடிய சாரதி தேவை.

தொடர்புகளுக்கு: 077 151 1727, 077 387 9022, 077 667 2417



(3353)

### தேவை

பொதிப் போக்குவரத்து சேவை நிலையத்திற்கு கணக்கு பதிவுநர் (ஆண், பெண்) தேவை.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (சி-1970)

தொடர்புகளுக்கு: 077 756 0682

### கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி.பா:36
உயரம்: 6'
தகைமை/தொழில்:B.COM, AAT, CA/தனியார் தொழில்
தொ.இ: B/8365

பிறப்பு: 19 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 16
தகைமை/தொழில்:ஆசிரியர்
தொ.இ: B/8366

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 24செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:B.COM, CIMA/ வங்கிமுகாமையாளர்
தொ.இ: B/8367

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/8368

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 17 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BBA/ அரசதொழில்
தொ.இ: G/6794

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 62
தகைமை/தொழில்: HND
தொ.இ: G/6797

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/6806

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 17
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc
தொ.இ: G/6810

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

### மணமகள் தேவை

1974இல் பிறந்த கனடாவில் வசிக்கும் மனைவி இறந்த 2 பிள்ளைகளின் தகப்பனுக்கு மணமகள் தேவை. (ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா, இலங்கையிலுள்ள பல்கலைக்கழகத்தில் படித்தவர்)

தொடர்பு: 0094 7725 0144, 077 900 7091

# சிறையில் கணவருக்கு போதைப்பொருள் கொண்டு சென்ற மனைவி அதிரடிக்கைது

(கொழும்பு)

கைக்குழந்தையின் ஆடையில் மறைத்து சிறையிலுள்ள கணவருக்கு போதைப்பொருள் கொண்டு சென்ற மனைவி கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி, உத்தரானந்த மாவத்தையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிடைத்த தகவலுக்கமைய 11 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 3 பிள்ளைகளின் தாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் விற்பனையாளரான அவரது கணவர் கடந்த 5 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவருக்கு தொடர்ந்தும் மனைவி போதைப்பொருள் வழங்குவதாகவும் ஒரு பக்கட் 4000 ரூபாய்க்கு சிறைச்சாலையினுள் விற்பனை செய்யப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள பெண் 35 வயதான 3 பிள்ளைகளின் தாய் எனவும் அவரது கணவர் ஹெரோயினுக்கு கடுமையாக அடிமையான ஒருவர் எனவும் கூறப்படுகின்றது.

அவரிடம் கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் பெறுமதி கிட்டத்தட்ட 2 இலட்சம் ரூபாய் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (7-10)

# வெளிநாட்டு மதுபானங்களுடன் நபர் ஒருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

சுமார் 5 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட வெளிநாட்டு மதுபானங்களுடன் நபர் ஒருவரை கொட்டாஞ்சேனையில்வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றுக்கு அமைவாக திடீர் சுற்றிவளைப்பொன்றினை முன்னெடுத்து வெளிநாட்டு மதுபான போத்தல்களைக் கைப்பற்றியதாகவும் அது தொடர்பில் அங்கிருந்த 44 வயதான ஒருவரையும் கைது செய்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.



பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றுக்கு அமைவாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கே.சி.சிறில் சீ. பெரேரா மாவத்தையில் உள்ள இடமொன்றே இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டது. இதன் போது அந்த கட்டடத்தில் ஷம்பெய்ன் போத்தல்கள் மற்றும் வைன் போத்தல்கள் என 15,431 வெளிநாட்டு மது பான போத்தல்கள் இருந்துள்ளன.

இந்நிலையிலேயே இந்த வெளிநாட்டு மதுபானப் போத்தல்களை வைத்திருந்ததாகக் கூறப்படும் 44 வயதான கொள்ளுப்பிட்டி யூ. ஆர். டி. மெல் மாவத்தையைச் சேர்ந்த சந்தேக நபரை பொலிஸார் கைது செய்து பிணையில் விடுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-10)

# தனித்து ஆட்சியமைக்க ஐ.தே.க. தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தனித்து அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஆயத்தமாகி வருவதாக வார இறுதி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நம்பிக்கையில்லா தீர்மான யோசனை சமர்ப்பிக்கப்பட முன்னதாக தனியான அரசாங்கமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நம்பிக்கையில்லா தீர்மானத்தை முறியடிப்பதற்கும் கட்சியின் பலத்தை உறுதி செய்வதற்கும் இதுவே சிறந்த தீர்வுத் திட்டம் எனவும் பரிந்துரை செய்துள்ளனர்.

இந்த யோசனைகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிச்சயமான பதில் எதனையும் அளிக்கவில்லை என கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனியான அரசாங்கமொன்றை அமைப்பதற்கு பிரதமரை வலியுறுத்தப் போவதாக பின்வரிசை உறுப்பினர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (7-10)

# நூதனமான முறையில் மாடுகளை களவாடிய நபர் கைது

(கொழும்பு)

குருநாகலில் நூதனமான முறையில் பல மாடுகளை களவாடிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிரிபாவ, பஹல, கிரிபாவ பிரதேசத்தில் மாடு ஒன்றை திருடிய நபரை மாடு ஒன்று வசமாக மாட்டிக் கொடுத்துள்ளது.

சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மாட்டினை களவாடிய நபர், அதன் மீது கலர் சாயங்களை பூசி உருமாற்றம் செய்துள்ளார்.

எனினும் குறித்த மாட்டின் உரிமையாளர் கொடுத்த முறைப்பாட்டுக்கு அமைய அவரின் வீட்டினை சோதனையிட்ட போது உண்மை தெரிய வந்துள்ளது.

முறைப்பாட்டாளரின் மாட்டிற்கு சமமான மாடு ஒன்று இஹலவெல, வராவெவ பிரதேச வீட்டிற்கு பின்னால் உள்ளதாகவும், எனினும் தனது மாட்டின் நிறத்தை விடவும் இது வேறுபட்டதாக உள்ள தென முறைப்பாட்டாளர் பொலிஸில் குறிப்பிட்டுள்ளார்.

முறைப் பாட்டாளருடன் பொலிஸார் குறித்த வீட்டிற்கு சென்று சோதித்த போது மாடு அதன் பாதங்களை எச்சிலால் துடைத்து கொண்டிருந்ததனை அவதானித்துள்ளனர்.

பின்னர் மாட்டினை நன்கு சோதித்த போது அதன் உடலில் இருந்த கறுப்பு நிற சாயம் மறைய ஆரம்பித்துள்ளது.

அதன் உடலின் பல இடங்களில் வேறு நிற சாயங்கள் பூசப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாட்டினை திருடியவர் மேலும் பல மாடுகளை திருடி இவ்வாறு உருமாற்றம் செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

அதற்கமைய கைது செய்யப்பட்ட நபர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (7-10)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

03.2018 25

- 1655 - டைட்டான் என்ற சனிக்கோளின் மிகப்பெரிய சந்திரனை கிறிஸ்டியான் ஹைஜன்ஸ் கண்டுபிடித்தார்.
- 1807 - அடிமைகளை வர்த்தகம் செய்வது ஐக்கிய இராச்சியத்தில் சட்டம் மூலம் தடை செய்யப்பட்டது.
- 1821 - (ஜூலியன் நாட்காட்டி) ஓட்டோமான் பேரரசுக்கு எதிராக கிரேக்கர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். கிரேக்க விடுதலைப் போர் ஆரம்பமானது.
- 1857 - பிரெஞ்சுக்காரரான லியோன் ஸ்கொட் ஒலியை பதிவு செய்யும் கருவிக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1918 - பெலாரஸ் மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: அச்சு அணி நாடுகள் அமைப்பில் யூகொஸ்லாவியா இணைந்தது.
- 1947 - இலினோயில் நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு விபத்தில் 111 பேர் கொல்லப்பட்டனர்.
- 1949 - எஸ்தோனியா, லாத்வியா மற்றும் லித்துவேனியா ஆகியவற்றைச் சேர்ந்த 92,000 பேர் சோவியத் அதிகாரிகளினால் சோவியத் ஒன்றியத்தின் பல ஒதுக்குமான இடங்களுக்கு கட்டாய வேலைக்காக அனுப்பப்பட்டனர்.
- 1954 - முதலாவது வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை RCA நிறுவனம் வெளியிட்டது. (12" திரையளவு, விலை: $1,000).
- 1954 - இலங்கையைச் சேர்ந்த மு. நவரத்தினசாமி பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை புரிந்தார்.
- 1957 - மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, மற்றும் லக்சம்பேர்க் ஆகியன இணைந்த ஐரோப்பிய பொருளாதார சமூகம் உருவாக்கப்பட்டது.
- 1965 - மனித உரிமைவாதி மார்ட்டின் லூதர் கிங் தனது 4-நாள் 50-மைல் எதிப்புப் பயணத்தை முடித்துக் கொண்டார்.
- 1975 - சவுதி மன்னர் பைசால் தனது மருமகனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1992 - சோவியத் விண்வெளிவீரர் செர்கே கிரிக்காலொவ் மீர் விண்வெளி நிலையத்தில் 10 மாதங்கள் தரித்திருந்துவிட்டு பூமி திரும்பினார்.

**பிறப்புகள்**

- 1347 - சியன்னா நகர கத்ரீன், இத்தாலிய மெய்யியலாளர், இறையியலாளர், புனிதர் (இ. 1380)
- 1914 - நார்மன் போர்லாக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க மனித நேயர் (இ. 2009)
- 1920 - உசா மேத்தா, இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (இ. 2000)
- 1927 - ப. சண்முகம், புதுச்சேரி மாநிலத்தின் 13வது முதல்வர் (இ. 2013)
- 1945 - ந. மணிமொழியன், தமிழகத் தமிழறிஞர், தொழிலதிபர் (இ. 2016)

**இறப்புகள்**

- 1857 - வில்லியம் கோல்கேட், ஆங்கிலேயத் தொழிலதிபர் (பி. 1783)
- 1931 - கணேஷ் சங்கர் வித்யார்த்தி, இந்திய இதழியலாளர், அரசியல்வாதி (பி. 1890)
- 1975 - முசிரி சுப்பிரமணிய ஐயர், கர்நாடக இசைப் பாடகர் (பி. 1899)
- 1989 - சி. எல். ஆனந்தன், தமிழகத் திரைப்பட நடிகர்
- 1996 - ம. மு. உவைஸ், இலங்கை இஸ்லாமியத் தமிழறிஞர், கல்வியாளர் (பி. 1922)
- 2014 - தி. க. சிவசங்கரன், தமிழக மார்க்சிய திறனாய்வாளர் (பி. 1925)


**சிறப்பு நாள்**

- இயேசு பிறப்பின் முன்னறிவிப்பு
- கலாசாரத் தொழிலாளர் நாள் (உருசியா)
- அன்னையர் நாள் (சுலோவீனியா)
- சர்வதேச தடுத்து வைக்கப்பட்ட, காணாமற்போன பணியாளர்களுடன் கூட்டு ஒருமைப்பாடு நாள்
- புரட்சி நாள் (கிரேக்கம், 1821)
- அடிமை வணிகத்தால் பாதிக்கப்பட்டோரை நினைவுகூரும் பன்னாட்டு நாள்

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம்? சுன்னாகம்? (மருதங்கேணி) | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 45 | 50 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 70 | 80 | 85 |
| பச்சைமிளகாய் | 50 | 45 | 45 | 60 | 60 | 35 |
| தக்காளி | 30 | 30 | 20 | 40 | 40 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 50 | 40 | 35 |
| கோவா | 30 | 30 | 30 | 60 | 50 | 30 |
| கரட் | 80 | 80 | 80 | 80 | 120 | 70 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 25 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 25 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 120 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 55 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 200 | 35 | 140 | 180 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 65 | 80 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | - | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 140 | 100 | 70 | 80 | 80 | 120 |
| லீக்ஸ் | 150 | 160 | 10 | 160 | 160 | 130 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 50 | 50 | 25 |
| கறிமிளகாய் | 100 | 80 | 40 | 80 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 410 | 400 | 600 | 500 |
| போஞ்சி | 140 | 200 | 65 | 80 | 60 | 140 |
| கத்தரித்தும்பிள்ளை | 60 | 30 | | 60 | 60 | 40 |
| கீரை - பிடி | 30 | 20 | 20 | 40 | 40 | 50 |
| தேசிக்காய் | 80 | 80 | 110 | 80 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 30-90 | 90 | 75 | 90 |
| இராவள்ளி | 180 | 160 | 120 | 150 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 120 | 120 | - | 120 | 160 | 140 |
| முள்ளங்கி | 40 | 120 | 30 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 10 | 40 | 30 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 40 |
| சீரப்பலா | 80 | 100 | - | 60 | 130 | - |

# சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தை பாகிஸ்தானில் திறந்து வைத்தார் மைத்திரி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் தூதரக வளாகத்திலுள்ள புனர்நிர்மாணம் செய்யப்பட்ட சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாகிஸ்தானிய ஜனாதிபதி மம்னூன் ஹுசைனின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று பாகிஸ்தானுக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, அந்நாட்டிலுள்ள ஒரே ஒரு பௌத்த விகாரையான சர்வதேச பௌத்த மத்திய நிலையத்திற்கு நேற்று முன்தினம் பிற்பகல் விஜயம் செய்தார்.

முதலில் சமயக் கிரியைகளில் ஈடுபட்டு ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, அவ்விகாரை வளாகத்தைச் சுற்றிப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்துடன் நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து பௌத்த மத்திய நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

மேல் மாகாண தலைமை சங்கநாயக்க தேரர் கலாநிதி சங்கைக்குரிய அகுரட்டியே நந்த தேரர், சங்கைக்குரிய பகமுனே சுமங்கல தேரர், பேராசிரியர் சங்கைக்குரிய நாபிரித்தன்கடவல ஞானரத்ன நாயக்க தேரர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நேபாளம், இந்தியா, மியன்மார், கொரியா, தாய்லாந்து, இந்தோனேஷியா, சீனா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி தூதுவர்களும் உயர் ஸ்தானிகர்களும் கலந்து கொண்டனர். (7-10)

# பாரதிய ஜனதா கட்சியுடன் சிறந்த உறவைப்பேண விருப்பம் -மகிந்த

(கொழும்பு)



மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சியுடன் சிறந்த உறவைப் பேண விரும்புவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்திய நாளிதழ் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பதவிக்கு வந்த பின்னர் தமது அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் சிறந்த புரிந்துணர்வைக் கொண்டிருக்கவில்லை என்றும் அதற்கு போதிய காலமும் இருக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-10)

# மாணிக்கக்கல் அகழ்வு இருவர் கைதாகினர்

(கொழும்பு)

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவை பொகவானை தோட்டத் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுவந்த இரண்டு பேரை பொகவந்தலாவை பொலிஸார் கைது செய்யதுள்ளனர்.

இருவரையும் நேற்று சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் மாணிக்கக்கல் வகைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொகவந்தலாவை ஆரியபுர பகுதியைச் சேர்ந்த ஒருவரும் பொகவானை தோட்டப் பகுதியைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யபட்டுள்ளனர். (7-10)

# வெளிநாட்டில் இறந்தவர்களின் சடலங்களை எடுத்துவர புதிய நடைமுறை அறிமுகம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உயிரிழக்கும் இலங்கையர்களின் சடலங்களை சிரமமின்றி எடுத்து வருவதற்கான புதிய வசதிகளை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு முன்னெடுத்துள்ளது.

வெளிநாடுகளில் மரணித்த இலங்கையர்களின் உறவினர்கள் சடலங்களை நாட்டிற்கு கொண்டு வருவதற்கு அல்லது இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கு தேவையான அடையாள ஆவணங்கள், சத்தியக்கடதாசிகள் மற்றும் ஏனைய ஆவணங்களை நாடளாவிய ரீதியிலுள்ள பிரதேச செயலகங்களினூடாக சமர்ப்பிப்பதனை இயலுமாக்கும்புதியமுறைமையொன்றை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து அறிமுகம் செய்துள்ளது.

இதுவரையிலும், மரணித்த நபரின் உறவினர்கள் சடலத்தை நாட்டிற்கு கொண்டு வருவதற்காக அல்லது வெளிநாட்டில் இறுதிக்கிரியைகளை மேற்கொள்வதனை அங்கீகரிப்பதற்காக குறித்த ஆவணங்களை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் அலுவல்கள் பிரிவிற்கு சமர்ப்பிக்கவேண்டியிருந்தது.

புதிய முறைமையின் கீழ், மரணித்த நபரின் உறவினர்கள் தேவையான ஆவணங்களை அருகிலுள்ள பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்க முடிவதுடன், அவை மேலதிக நடவடிக்கைகளுக்காக கொன்சியூலர் அலுவல்கள் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படும்.

உள்நாட்டலுவல்கள்அமைச்சின் செயலாளர் இந்த திட்டத்தினை முறையாக நடைமுறைப்படுத்துவதற்காக அனைத்து பிரதேச செயலாளர்களையும் அறிவுறுத்தும் வகையிலான சுற்றுநிருபம் ஒன்றை ஏற்கனவே வெளியிட்டுள்ளார்.

மரணித்த நபரின் உறவினர்கள் தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்காக கொழும்பிலுள்ள கொன்சியூலர் அலுவல்கள் பிரிவிற்கு அல்லது யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்திற்கு பிரயாணங்களை மேற்கொள்வது, அருகிலுள்ள பிரதேச செயலகத்தில் அவற்றை செயற்படுத்திக் கொள்வதனை இந்த புதிய முறைமை இயலுமாக்கின்றது.

வெளிநாட்டில் மரணம் ஒன்று இடம்பெற்றால், கொழும்பு அல்லது யாழ்ப்பாணத்திற்கு நீண்ட பிரயாணங்களை மேற்கொள்வதனையும், தேவையற்ற காலதாமதங்கள் மற்றும் செலவீனங்களையும் தவிர்க்கவும், இந்த புதிய ஏற்பாட்டினால் நன்மையடைவர் எனவும் இதுதொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (7-10)

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து மகிந்த - மைத்திரி கலந்துரையாடல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையில் தொலைபேசியில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் மகிந்தவிற்கும் மைத்திரிக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பின் வார இறுதி ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்ட புதன்கிழமையும் அதற்கு முதல் நாளும் ஜனாதிபதிக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கும் இடையில் தொலைபேசி ஊடாக கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த தொலைபேசி உரையாடல்களில் பேசப்பட்ட விடயங்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படாத போதிலும் நாட்டுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடிய சில சட்டமூலங்களை கொண்டு வரக் கூடாது என மகிந்த கோரியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-10)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிப்பது கடினம் - ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)



தமக்கு நடந்த நம்பிக்கை மோசடிகளை பார்க்கின்ற போது, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இனியும் இணைந்து பயணிப்பது என்பது மிகவும் கஷ்டமான விடயம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கட்சியின் சார்பாக தெரிவான உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார் என கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 3 வாரங்களாக சிறிகொத்தாவில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

எனினும், அதன் பின்னர் நடந்த விபரீதங்களையும் வைத்துப் பார்க்கின்ற போது, இனியும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிப்பது என்பது மிகவும் கஷ்டமான விடயம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் வெற்றியீட்டிய சபைகளில் தம்மை புறந்தள்ளிவிட்டு மாற்று அணிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைத்தால் அரசியல் ரீதியாக அதற்கு தகுந்த பதிலடி கொடுப்போம் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை கட்சித் தலைவருடன் இடம்பெற்றது.

அதன் இறுதி முடிவுகள் இன்னும் ஓரிரு தினங்களில் எடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி நாடுதிரும்பியவுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவின் பின்னர்தான் இறுதித் தீர்மானங்கள் எட்டப்படும்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மாவட்ட தலைமைகள் ஆட்சியமைப்பது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர்.

இதற்கான முடிவுகளை விரைவில் அறிவிக்கவுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (7-10)

# மின்சாரம் தாக்கியதில் காட்டு யானை உயிரிழப்பு

(கொழும்பு)

வெல்லவாய், ரன்தெனிய பிரதேசத்தில் நேற்று அதிகாலை மின்சாரம் தாக்கியதில் காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்தய யானை மற்றொரு காட்டு யானையுடன் இணைந்து பாரிய மரம் ஒன்றை வீழ்த்த முயற்சித்த போது அருகில் இருந்த உயர் அழுத்த மின் கம்பி ஒன்றுடன் இணைந்து மரம்விழுந்துள்ள போது யானை மீது உயர் அழுத்த மின்சாரம் தாக்கியுள்ளது. உயிரிழந்த யானை 15 இற்கும் 25 இற்கும் இடைப்பட்ட வயதையுடையது என்று வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிருந்தைகங்கைக்கு மேலால் இந்த உயர் அழுத்த மின் விநியோக கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதுடன், இதனால் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக அந்த கங்கையில் மீன்கள் உயிரிழந்து மிதப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸ் மற்றும் வெள்ளவளை தள வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (7-10)

# நல்லைக்குருமணியின் 37வது குருபூசைத்தினம் இன்று

உலக நாடுகளில் சைவத்தையும் தமிழையும் அழிய விடாது நிலைபெறச் செய்து சைவமக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற சைவப் பெருந்தகை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனஸ்தாபகர் நல்லை குருமணியின் 37 ஆவது குருபூசைத்தினம் பங்குனி 11ஆம் திகதி (25.03.2018) இன்று ஞாயிற்றுக்கிழமை மேற்கு வீதியிலுள்ள அவரின் சமாதி கோவிலிலே நினைவுகூர்ந்து சிறப்பு வழிபாடுகளும் அபிஷேகங்களும் வெகு சிறப்பாக இடம்பெறுகின் றது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ காலங்களில் கிட்டத்தட்ட 40 வருட காலத்திற்கு முன்பு 25 நாட்களும் நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலில் இரவு 9 மணியில் இருந்து தொடர் கதாப்பிரசங்கம் செய்து மக்கள் மனதிலே அழியா இடம் பிடித்து மணி ஐயர் எனும் புனைப்பெயர் பெற்றவர்.

இவரின் கதாப்பிரசங்கத்தை கேட்க முதியவர்கள் உட்பட அனைவருமே ஒன்றுகூடி விடுவார்கள். திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், இராமாயணம், மகாபாரதம், திருத்தொண்டர் புராணம் முதலியவற்றை தொடர் பிரசங்கமாகச் செய்வதில் இவருக்கு நிகரான எவருமே இல்லை என்று கூறலாம்.

நல்லூர்க் கந்தன் ஆலய மேற்கு வீதியிலே 1966 இல் திருஞான சம்பந்தர் ஆதீனத்தை ஆரம்பித்த அவர் அதன் மூலம் பல அறப் பணிகளையும் செய்தார். நல்லை ஆதீனத்திலே சங்கீத வகுப்பு, பாலர் வகுப்பு, பண்டித வகுப்பு, அறநெறி வகுப்பு மற்றும் பல இன்னோரன்ன பல வகுப்புக்களையும் ஆரம்பித்து நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்க தன்னாலான பல முயற்சிகளையும் மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டார்.

சுவாமிகளுடைய பிரசங்கம் இடம்பெறாத சைவக் கோவில்கள் இல்லை என்றே கூறலாம். இவர் தன்னுடைய கதாப்பிரசங்கத்தின் போது இசையும் கதையுமாக பிரசங்கம் செய்யும் போது தனது அங்க அசைவுகள் மூலம் மக்களை கவர்ந்து தன் பக்கம் ஈர்த்தவர். இவர் இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளான மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, லண்டன் போன்ற நாடுகளுக்குச் சென்று அங்குள்ள சைவக் கோவில்களில் தொடர் கதாப்பிரசங்கம் செய்து அங்கு தமிழ் மக்களின் மனங்களில் அழியா இடம்பிடித்தவர்.

இவருடைய பிரசங்கமகிமையினால் ''முத்தமிழ் மணி'' எனும் சிறப்புப் பட்டம் கொடுத்து கௌரவிக்கப்பட்டார்.

இவர் இந்தியாவிலே உள்ள மதுரை ஆதீனத்திலே காஷயம் பெற்றுத் துறவு பூண்டு தம்பிரான் சுவாமிகள் எனும் திருநாமத்துடன் இங்கு வந்து நல்லூரிலே ஞானசம்பந்தர் ஆதீனத்தை ஆரம்பித்து எமது சைவ மக்களை தலைநிமிர வைத்தவர். அறப்பணிகள் பல செய்து சைவத்தையும் தமிழையும் நிலைபெறச் செய்த சுவாமிகள் 1981 இல் சமாதி நிலை அடைந்தார்.

தற்பொழுது நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வராக இருக்கின்ற இரண்டாவது குருமகா சந்நிதானமும் அவர் செய்த பணிகளைத் தொடர்ந்து செய்து ஆதீனத்தை வளர்ப்பது மட்டுமன்றி எமது நாட்டிலே இந்துக் கோவில்களில் நடக்கும் கும்பாபிஷேக கிரியைகளிலே கலந்து அருளாசியுரைகளை வழங்கி சைவ சமயம் மேன்மையுறச் செய்வதுமன்றி பொது நிகழ்வுகளில் கலந்து தனது சிறப்புரைகளை வழங்கி வருகிறார்.

இந்த ஆதீன மண்டபத்திலே திருமணம் போன்ற சுப நிகழ்வுகளும் சமய நிகழ்வுகளும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இந்த நல்லை ஆதீனத்தின் நற்பணிகள் நல்ல முறையிலே மேலும் தொடர சைவ அபிமானிகள், கொடை வள்ளல்கள் தம்மாலான பண, சரீர உதவிகளை செய்ய முன்வர வேண்டும்.

சமாதி அடைந்த முதலாவது குருமகா சந்நிதானத்தின் நினைவுகள் நாட்டிலே பயன்பெற நிலைபெற சைவமக்கள் ஆகிய அனைவரும் ஒன்றுகூடி அவரின் குருபூசைத்தினமான இன்று அவரை வழிபடுவதே நாம் சுவாமிகளுக்குச் செய்யும் மிகப்பெரும் கைமாறாகும்.

கந்தையா-கனகசபை
சண்டிலிப்பாய்.

## கம்பிகளை திருடிய சீனப் பிரஜை கைது

(கொழும்பு)

அம்பாந்தோட்டை - சூரிய வெவ, வல்சுகல பிரதேசத்தில் அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிக்க பயன்படுத்தப்படும் இரும்பு கம்பிகளை கொள்ளையிட்ட சீனப் பிரஜை மற்றும் உள்நாட்டவர் ஆகியோர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.


அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிக்க பயன்படுத்தப்படும் இரும்பு கம்பி தொகை காணாமல் போயுள்ளமை தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து 7 ஆயிரம் கிலோகிராம் கம்பிகளை பார ஊர்தியில் எடுத்துச் சென்ற இந்த சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

34 வயதான செவனகல பிரதேசத்தை சேர்ந்த ஒருவரும், 54 வயதான சீனப்பிரஜையுமே சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## பாதாள உலகக்குழுவால் தொடரும் படுகொலைகள் பட்டும் படாமல் குற்றஞ்சாட்டிய ஞானசார தேரர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இயக்கத்தினை முற்றாக அழித்து நாட்டை ஒருமைப்படுத்திய அரசாங்கத்திற்கு, வெளிப்படையாக செயற்படும் பாதாள குழுவினரை அழிக்க முடியாதுள்ளமை வேடிக்கையாகவுள்ளது என பொது பலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.



இரண்டு இனங்களுக்கு இடையில் யுத்தம் இடம் பெற்றதன் காரணத்தினாலேயே விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசு செயற்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பாதாள உலகக் குழுவினரின் தாக்குதல்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும்விதமாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தின் கீழ் தற்போது மனித படுகொலைகள் வெளிப்படையாகவே இடம்பெற்று வருகின்றன.

குறித்த விடயத்தில் பாதாள உலகக் குழுவினரை மாத்திரம் குறை கூற முடியாது. மனித மனங்களில் வன்மங்களே தற்போது மிதமிஞ்சியதாக காணப்படுகின்றன.

பாதாள உலகக் குழுவினரின் தாக்குதல்கள் தற்போது அதிகரித்தே காணப்படுகின்றன. இதற்கு தேசிய அரசாங்கத்தினை மாத்திரம் குறை கூற முடியாது. கடந்த கால அரசாங்கமும் பொறுப்புக் கூற வேண்டும்.

பாதாள குழுவின் எழுச்சியை அரசியல்வாதிகளே உருவாக்கினர். நமது அரசியல் இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்கு இன்று வரை இவர்களை ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டேயுள்ளனர்.

குறித்த பாதாள குழுவின் பின்னணியில் எந்த அரசியல்வாதிகள் உள்ளார்கள் என்ற விடயத்தினை நன்கு அறிந்தும் சட்டம் உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள பின்வாங்குகின்றது.

நாட்டில் 30 வருட காலமாக இடம்பெற்ற விடுதலை புலிகள் இயக்க போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டு வர அரசாங்கம் பல்வேறு இராஜதந்திர விடயங்களையும் பிரயோகித்தது.

இதற்கு பிரதான காரணம் இடம்பெற்ற யுத்தம் இரண்டு இனங்களுக்கு இடைப்பட்டதாக காணப்பட்டதாலும் நாட்டின் பெரும்பான்மை இனத்தின் பெருமைகளுக்கு எதிராக அமையும் என்ற காரணத்தினாலும் அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டது.

ஆனால் பாதாள குழுவினரின் விவகாரத்தில் கடந்த கால அரசாங்கம் உட்பட நல்லாட்சி அரசாங்கமும் பொறுப்பற்ற முறைகளிலேயே செயற்படுகின்றது.

பாதாள குழுவினரின் செயற்பாடுகளின் காரணமாக குறித்த பிரதேசங்களில் வாழும் மக்கள் தினமும் அச்சத்துடனே வாழ்கின்றனர். அரசாங்கமும் பாதாள குழுவினை கட்டுப்படுத்த பல சட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இருப்பினும் இவைகள் நடைமுறையில் எவ்வித பயனும் அளிக்காது சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றது. அரசாங்கம் பாதாள குழுவினரை முற்றாக அழிக்க வேண்டுமாயின் பிரத்தியேக துறையினை சுயாதீனமாக உருவாக்கி அதனை செயற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அரசிற்கு வழங்கும் ஆதரவு தொடர்பில் மீள் பரிசீலனை

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.



(ஏறாவூர்)

தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படாவிட்டால் அரசாங்கத்திற்கு வழங்கிவரும் ஆதரவு தொடர்பில் மீள்பரிசீலனை செய்யும் நிலையேற்படும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, ஏறாவூர்பற்று - மாவடியோடை பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் எந்த தீர்மானத்தினையும் எடுக்கவில்லை.

இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் மிகவும் முக்கியத்துவமானவர்களாக தமிழ் மக்கள் உள்ளனர். சிறுபான்மை மக்களின் வாக்குப் பலத்தினால்தான் இந்த ஜனாதிபதியும் பிரதமரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த நல்லாட்சி மூன்று வருட நிறைவினை நோக்கி சென்றுகொண்டிருக்கின்ற வேளையில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்பார்த்த வேலைத்திட்டங்கள் எதுவும் பெரியளவில் நடைபெறவில்லை.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இனியாவது இந்த விடயங்களில் கால இழுத்தடிப்புகளை செய்யாமல் ஆற்ற வேண்டிய கருமங்களை உடனடியாக செய்யவேண்டும்.

கால அவகாசத்தினை எடுத்துக்கொண்டு மக்களையும் மக்கள் தலைவர்களையும் ஏமாற்றுகின்ற போக்கினையே இந்த நல்லாட்சி அரசாங்கமும் கடைப்பிடிக்கின்றது.

பிரதமருக்கு நாங்கள் ஆதரவு வழங்குவதாக இருந்தால் சில தீர்மானங்களை மேற்கொண்டு அதனை ஜனாதிபதி மற்றும் பிரதமர் முன்னிலையில் வைத்து அவர்கள் ஏற்றுக்கொள்ளும் பட்சத்திலேயே நாங்கள் வாக்களிக்கும் நிலையேற்படும்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் ஆதரவாகவா? அல்லது எதிராகவா? வாக்களிப்பது என்பது தொடர்பான விடயத்தில் தமிழ் மக்களுக்கு திருப்திகரமான விடயங்கள் முன்வைக்கப்படும்போதே என்னைப் பொறுத்தளவில் நாங்கள் வாக்களிக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## புகையிலை வரியை அதிகரிக்க நடவடிக்கை

## அமைச்சர் ராஜித தகவல்



(கொழும்பு)


புகையிலை வரியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நாட்டில் சிகரெட் பாவனை 100 கோடியினால் குறைந்துள்ளது. குளிர்பானங்களில் அடங்கியுள்ள ஒரு கிராம் சீனிக்கு 50 சதம் வரி அறவிடப்படுகிறது. இதற்கு அமைய சந்தையில் சீனி கலவை அற்ற குளிர் பானங்கள் அறிமுகப் படுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகளை தடுக்க சுகாதார அமைச்சு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு கூட்டு எதிர்க் கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் மகிந்தவுடன் இணைவர்

## அமைச்சர் சுசில் நம்பிக்கை



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியளித்தால் புதிய அரசாங்கம் அமைக்க வேண்டிவரும். மாறாக அது தோல்வியடைந்தால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகளவான உறுப்பினர்கள் கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்வார்கள் என்று அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடிக்கு எதிராக ஆரம்பத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டிருக்காது. மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கைச்சாத்திட்டமை, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரச்சினையும் அல்ல. ஏனெனில் மத்திய வங்கி பிணைமுறி மோசடியே நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதான இடம் வகிக்கிறது.


மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் சிங்கப்பூர் பிரஜையாவார். அதனைத் தெரிந்து கொண்டுதான் அவரை அப்பதவியில் நியமிக்குமாறு சிபாரிசு செய்தனர். அவ்வாறு நியமித்த பின்னரே பாரிய மோசடி இடம்பெற்றது. அம்மோசடி இடம்பெற்ற பின்னர் அவரைப் பாதுகாப்பதற்கு முன்நின்றவர்கள் பற்றியும் அனைவருக்கும் தெரியும்.

எனவே அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வந்து மத்திய வங்கியின் ஆளுநர் பதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தவர்கள், நீதிமன்றத்தின் அழைப்புக்கு இணங்க அவரை தற்போது நீதிமன்றின் முன் நிறுத்த வேண்டிய கடப்பாடும் உள்ளது. எனினும் அது இன்னும் நடைபெற வில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதவளிப்பது தொடர்பில் கட்சியைவிட குழுக்கள் ரீதியில் தீர்மானம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் மக்களே எமக்கு வாக்களித்துள்ளனர். ஆகவே அம்மக்களின் அபிலாஷைகளுக்கு அமைவாக நாம் பாராளுமன்றில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியளித்தால் புதிய அரசாங்கம் அமைக்க. வேண்டிவரும். மாறாக அது தோல்வியடைந்தால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகளவான உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அடிப்படை வசதிகள் இன்றி அவதிப்படும் 15 குடும்பங்கள்



(கரணவாய்)

நீதிமன்ற உத்தரவிற்கமைய தனியார் காணி ஒன்றில் இருந்து வெளியேற்றப்பட்ட இடம் பெயர்ந்த 15 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இன்றி கடும் வெயிலுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

பலாலியில் இருந்து 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த மக்களில் 15 குடும்பங்கள் உடுப்பிட்டி புளியடிச் சந்தியில் உள்ள தனியார் காணி ஒன்றில் 28 வருடமாக வசித்து வந்துள்ளனர்.

குறித்த காணியை விட்டு அவர்களை வெளியேற்றுமாறு நீதிமன்றில் வழக்கு த் தொடுக்கப்பட்டு இரண்டு முறை அவுர்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது.

கரவெட்டி பிரதேச செயலகத்தால் குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் காணி வாங்குவதற்கு வழங்கப்பட்டது. அதனையும் தமது பணத்தினையும்கொண்டு மல்லந்தறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் காணிகள் வாங்கப்பட்டன.

சிலதினங்களுக்கு முன்னர் நீதிமன்ற உத்தர விற்கமைய அப்பதினைந்து குடும்பங்களும் வெளியேற்றப்பட்டன. அங்கிருந்து வெளியேறிய அவர்கள் கடும் வெயிலுக்கு மத்தியில் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்கின்றனர்.

பொருட்கள் எல்லாம் கடும் வெயிலுக்கு மத்தியில் வெட்டவெளியில் காணப்படுகிறது. ஓர் தகர மறைவிற்கு மத்தியிலேயே சமையல் செய்கின்றனர். குழந்தைகள், பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் எனப் பலர் பெரும் அவதிப்படுகின்றனர். (இ-60)

# பால்மாவின் விலை 80 ரூபா அதிகரிப்பு

(கொழும்பு)

குழந்தைகள் பால்மா தவிர்ந்த ஏனைய அனைத்து பால்மாக்களின் விலைகளையும் அதிகரிக்க வாழ்க்கைச் செலவுகள் குழு அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை 80 ரூபாவினால் அதிகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை விரைவில் வெளியிடவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரித்துச் செல்வதன் காரணமாக இலங்கையில் அதன்விலையை அதிகரிக்க வேண்டும் என நுகர்வோர் அதிகார சபையிடம் பால்மா இறக்குமதியாளர்கள் கோரியுள்ளனர்.

இதையடுத்து, குறித்த கோரிக்கையை வாழ்க்கைச் செலவுகள் தொடர்பான குழுவிடம் நுகர்வோர் அதிகார சபை முன்வைத்துள்ளது.

இதன்போது ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலையை 80 ரூபாவினால் அதிகரிக்க வாழ்க்கைச் செலவுகள் தொடர்பான குழு அனுமதி வழங்கி உள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ-7)

# பொருளாதார நெருக்கடிக்கு மத்திய வங்கியே பொறுப்பாம்




(கொழும்பு)

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு இலங்கை மத்திய வங்கியே பொறுப்புச்சொல்ல வேண்டுமென முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர், முன்னாள் ஜனாதிபதி மீது பொருளாதார நெருக்கடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட போதிலும், மத்திய வங்கியின் பிழைகள் பற்றி எவரும் பேச முன்வருவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 16 வீத கடன் அடிப்படையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியுமா? என கேள்வி எழுப்பியுள்ள அவர் மத்திய வங்கி வட்டி வீதங்களை உயர்த்தியமை பொருளாதாரத்திற்கு பெரும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மத்திய வங்கியின் அதிகாரிகள் தொடர்ந்தும் இவ்வாறு நிர்வாகம் செய்தால் இலங்கை உகண்டாவைப் போன்று மாற்றமடைந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-10)

# பாதுகாப்புச் செயலர் ரஷ்யாவுக்கு பயணம்



(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கபில வைத்தியரட்ன உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு ரஷ்யா சென்றுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் ரஷ்ய பயணம் குறித்து எதுவித அதிகாரபூர்வ தகவல்களும் வெளியிடப்பட வில்லை.

எனினும், விமானக் கொள்வனவு தொடர்பான விடயங்களுக்காகவே அவர் ரஷ்யா சென்றிருப்பதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (7-10)

# சிங்கப்பூரிலிருந்து கடத்தி வரப்பட்ட பெருந்தொகை தங்க ஆபரணங்கள் மீட்பு!



(கொழும்பு)

சட்டவிரோதமாக இலங்கைக்கு கடத்திவரப்பட்ட ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்களை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சிங்கப்பூர் நாட்டில் இருந்து நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த ஒருவரின் பயணப் பொதியை சோதனை செய்த சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தங்க ஆபரணங்களை மீட்டுள்ளதாக பிரதி சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளர் விபுல மினுவான் பிட்டிய தெரிவித்தார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரின் பயணப் பொதியில் இருந்தே சுமார் 3 கிலோ கிராம் எடையுடைய தங்க ஆபரணங்களை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தங்க ஆபரணங்கள் அரச உடமையாக்கப்பட்டதுடன், சந்தேக நபருக்கு 5 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து அவரை விடுவித்ததாக சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளர் விபுல மினுவான் பிட்டிய மேலும் தெரிவித்தார். (7-10)

# நீதிபதிகளின் சம்பள உயர்வுக்கு பாராளுமன்றத்தில் அனுமதி

(கொழும்பு)

நீதிபதிகளின் சம்பளங்கள் உயர்த்தப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நீதிபதிகளின் சம்பள உயர்வு குறித்த யோசனைக்கு பாராளுமன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியனவற்றின் நீதியரசர்கள், நீதிபதிகளுக்கு இவ்வாறு சம்பளங்கள் உயர்த்தப்பட உள்ளன.

நீதிபதிகளுக்கான சம்பள உயர்வு குறித்த யோசனைக்கு எந்தவொரு தரப்பினரும் எதிர்ப்பை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நீதிபதிகளுக்கான சம்பளங்கள் உயர்த்தப்படும் போது பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்களும் உயர்த்தப்படுவது வழமையானதாகும். இதன்படி விரைவில் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்களும் உயர்த்தப்படலாம் என் எதிர்பார்க்கப்படுகின்றது. (7-10)

# சு.கவின் அமைச்சர்களை பதவி நீக்க ஐ.தே.க. ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக கையொப்பமிட்ட சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களை பதவி நீக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளது.

இராஜாங்க அமைச்சர் ஒருவரும், இரண்டு பிரதி அமைச்சர்களும் இவ்வாறு நம்பிக்கையில்லா தீர்மானத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுக்கூட்டத்தில், குறித்த அமைச்சர்களை பதவி நீக்குமாறு கோருவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

விரைவில் பிரதமர் ரணில், இது குறித்து ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கவுள்ளார். அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யும் அமைச்சர்களை அரசாங்கத்திலிருந்து நீக்குவது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7-10)

# சிறுநீரகம் பாதிப்படைந்த முன்னாள் போராளி உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா ஓமந்தையை சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் சிறுநீரகம் பாதிப்படைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ்.பொது வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

ஓமந்தை மாதர் பனிக்கர் குளம் பகுதியில் வசித்து வந்த முன்னாள் விடுதலைப்புலி போராளியான இராசையா இராசகுமாரன் (வயது-42) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே சிறுநீரகம் பாதிப்படைந்த நிலையில் வவுனியா பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சைப்பலனின்றி கடந்த 20 ஆம் திகதி இரவு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த சில வருடங்களாக சிறுநீரகம் பாதிப்படைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளதாகவும் இவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (2-281)



# நிபந்தனையற்ற பொதுமன்னிப்பில் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக்கோரி வவுனியாவில் நேற்று கையெழுத்துப் போராட்டம்





(குருமன்காடு)

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதியான கிளிநொச்சியைச் சேர்ந்த சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி நேற்று கையெழுத்துப் போராட்டம் வவுனியா இலுப்பையடியில் நடைபெற்றது.

கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் கடந்த வருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனின் மனைவி ஆனந்த சுதாகர் யோகராணி கடந்த 15 ஆம் திகதி சுகயீனம் காரணமாக உயிரிழந்தார்.

மனைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மூன்று மணி நேரமே கால அவகாசம் வழங்கப்பட்டு மனைவியின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட பின் மீண்டும் பொலிஸாரால் சிறைச்சாலை வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டார்.

தந்தை சிறைச்சாலை வாகனத்தில் ஏறியபோது அவரது மகளும் தந்தையுடன் சிறைச்சாலை 'வாகனத்தில் ஏறிய சம்பவம் அனைவரது மனதையும் நெகிழ வைத்துள்ளது.

நீதிமன்றின் ஊடாக 97 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான ஆனந்த சுதாகரன் கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பின்னர் தாயின் அரவணைப்பில் வாழ்ந்த இரண்டு பிள்ளைகளும் தற்போது தந்தையையும் தாயையும் இழந்த நிலையில் அரவணைப்பின்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே இவரை நிபந்தனையற்ற பொதுமன்னிப்பில் ஜனாதிபதி விடுதலை செய்யக் கோரி வவுனியா மாவட்டத்தில் நேற்று கையெழுத்துப் போராட்டத்தை வவுனியா மாவட்ட சுயாதீன இளைஞர்களின் தமிழ் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# வவுனியா வடக்கு கல்விப்பணிப்பாளர் நாளை கடமைகளைப் பொறுப்பேற்பார்

(குருமன்காடு)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிலவி வந்த கல்விப்பணிப்பாளர் வெற்றிடத்திற்கு திருமதி சுரேந்திரன் அன்னமலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாளை திங்கட்கிழமையிலிருந்து கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். இவர் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளராக இதுவரை காலமும் கடமையாற்றியிருந்தார்.

கடந்த டிசெம்பர் மாதத்துடன் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த ஸ்ரீஸ்கந்தராஜா ஓய்வுபெற்றுச் சென்றிருந்த நிலையில் வவுனியா வடக்கு வலயத்திற்கு நிரந்தரமான வலயக் கல்வி பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை.

வவுனியா தெற்கு வலயக் கல்வி கல்விப் பணிப்பாளர் வடக்கு வலயத் தையும் நிர்வகித்து வந்த நிலையில் சு.அன்னமலர் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (2-250)

# பிரதேசசபை உறுப்பினர்களுக்கு புதுக்குடியிருப்பில் வரவேற்பு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்றில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச சபை வளாகத்தில் இடம்பெற்றது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது போட்டியிட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு தெரிவான தவிசாளர், உப தவிசாளர்,சபை உறுப்பினர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் பிரதேச சபை முன்றலில் இருந்து மாலை அணிவித்து பிரதேச சபை மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தொடர்ந்து பிரதேச சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட செ.பிறேமகாந் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் பிரதேச சபை உறுப்பினர்கள் தங்களை அறிமுகம் செய்து வைத்ததுடன் வாழ்த்துரைகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் மற்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# யுத்தகாலத்தில் போடப்பட்ட மண் அணைகள் அகற்றப்படவில்லை

## வெடிபொருட்கள் இருக்கலாமென மக்கள் அச்சம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டம் சிவநகர் கிராம அலுவலர் பிரிவில் யுத்தகாலத்தில் போடப்பட்ட மண் அணை இதுவரை அகற்றப்படாமலுள்ளது. இக் கிராமத்தின் மையப்பகுதியில் பொதுநோக்கு மண்டபம், சனசமூக நிலையம், மூத்தோர் மண்டபம், ஆரம்ப சுகாதார நிலையம், முன்பள்ளி, சிவநகர் அ.த.க.பாடசாலை என்பன அமைந்துள்ளதுடன் இம்மண் அணைப் பகுதிக்கு அருகாமையில் கால் ஏக்கர் குடியிருப்புக்களும் அமைந்துள்ளன. இம்மண் அணைப் பகுதியால் இப்பகுதி பற்றைகள் சூழ்ந்து மரங்கள் வளர்ந்தும் காடாகவே காணப்படுகின்றது.

இதனால் கோழி வளர்ப்பு செய்ய இயலாத நிலை காணப்படுவதுடன் சமூகவிரோதச் செயற்பாடுகள் நடைபெறுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யுத்தகாலத்தில் போடப்பட்டது என்பதால் இப்பகுதியில் வெடிபொருட்கள் இருக்கலாம் எனவும் பொதுமக்களால் சந்தேகம் வெளியிடப்படுகிறது.

இதனை அகற்றி உதவுமாறு பொதுமக்கள் சிவில் சந்திப்பிற்கென கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் இக் கிராமத்திற்கு வருகைதந்து கூட்டம் நடத்திய போது பொதுமக்கள் இந்த மண் அணையை அகற்றி கண்ணிவெடி அகற்றும் பிரிவினரும் இணைந்து இதனை சீர்செய்து தர வேண்டுமென இப்பகுதி பொது அமைப்புக்களால் கோரிக்கை விடப்பட்டது. விரைவில் ஆவன செய்வதாக தெரிவிக்கப்பட்டபோதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே அரச அதிபர், பிரதேச செயலர், அரசியலாளர்கள், அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து உதவ வேண்டுமென கோரிக்கை விடப்படுகிறது. (2-254)

# ஏழு மில்லியன் ரூபா செலவில் நாவலர் வீதி புனரமைக்கப்படும்

## மாந்தை கிழக்குப் பிரதேசசபை செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசசபைக்குட்பட்ட நாவலர் வீதி ஏழு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக செயலாளர் சிவபாலராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட நாவலர் வீதியை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையையடுத்து குறித்த வீதியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மாந்தை கிழக்குப் பிரதேச சபை செயலாளர் சிவபாலராஜாவைத் தொடர்புகொண்டு வினவிய போது, மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் ஏழு மில்லியன் ரூபா செலவில் இவ் வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். (2-315)

# இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் நேற்று காலை 9.30மணியளவில் ஓவியா விருந்தினர் விடுதியில் இளைஞர், யுவதிகளுக்கான "நிமிர்ந்து நில்" தொழில் விருத்திக்கான வழிகாட்டல் இலவச செயலமர்வு இடம் பெற்றது.

நின் பிறைற்லைநஸ் அக்கடமியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இலவச செயலமர்வின் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள், பிரதிநிதிகளுடன் ஆரம்ப நிகழ்வை வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா, அருட்சகோதரி மெற்றில்டா, தலைவர் டொன்போஸ்கோ சிறுவர் காப்பக இல்லம், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், நெளுக்குளம் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், கல்வியியற்கல்லூரி அதிகாரி, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். பிரபல பேச்சாளர்கள் கலந்துகொண்டு இளைஞர்கள், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் இலவச செயலமர்வை மேற்கொண்டனர்.

நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வது, தொழிலை எவ்வாறு அமைத்துக்கொள்வது தொடர்பாகவும் எத்தொழிலை தெரிவு செய்வது போன்ற அறிவுரைகளை செயலமர்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு வழங்கியிருந்தனர். (2-281)

# ஆளுநரை சந்திக்க சுதாகரனின் குடும்பத்தினர் கொழும்பு பயணம்

(கண்டாவளை)

கடந்தவருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரனின் குடும்பத்தினர் வடக்கு மாகாண ஆளுநரை சந்திப்பதற்காக நேற்று முன்தினம் இரவு கொழும்புக்கு சென்றுள்ளனர்.

சிவம் அறக்கட்டளை ஸ்தாபகர் கணேஸ் வேலாயுதத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்திப்பதற்காக கொழும்புக்கு சென்றுள்ளனர்.

குறித்த சிறார்களின் கல்வி மற்றும் அவர்களின் ஏனைய தேவைகள் தொடர்பில் சிவம் அறக்கட்டளை ஊடாக முன்னெடுத்து செல்வதற்கு ஏற்கனவே குடும்பத்தாருக்கு குறிப்பிட்டிருந்த நிலையில், ஆனந்தசுதாகரனின் விடுதலைக்காக பல்வேறுபட்ட தரப்பினர் ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளும் அதேவேளை, மேன்முறையீட்டின் மூலம் அவரது பிள்ளைகள் மற்றும் உறவினருடன் இணைந்து வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கான முயற்சி களை அறக்கட்டளை ஊடாக முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-315)

ஆறு கடக்கும் வரை அண்ணன், தம்பி. அதன்பின் நீ யாரோ, நான் யாரோ.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உள்ளூராட்சி சபைகளை குழப்பமின்றி இயங்க வைக்க பொதுவான குழுவை உருவாக்க வேண்டும்

உள்ளூராட்சி சபைகள் நாளை 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

எண் சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் 8 என்ற எண்ணில் நல்ல காரியங்களை ஆரம்பிக்க மாட்டார்கள்.

எனினும் உள்ளூராட்சி சபைகள் நாளை 26ஆம் திகதி கூடவுள்ளது.

26 என்பது எண் 8 ஆக இருப்பதால் உள்ளூராட்சி சபைகளின் கூட்டங்களும் களேபரம் நிறைந்ததாகவே அமையும் என்பது எண் சோதிடர்களின் கணிப்பு.

இதை நாம் கூறும்போது, இந்தக் காலத்தில் எண் சோதிடத்தின் மீது இவ்வளவு நம்பிக்கையா? என்று யாரேனும் கேட்டால்,

ஐயா! உலகம் முழுவதும் 13ஆம் இலக்கத்தை ஓரங்கட்டியுள்ளதே அது ஏன்? என்ற மறுத்தான் கேள்வியை முன்வைக்க முடியும். எதுஎவ்வாறாயினும் நம்பிக்கை என்பதுதான் முக்கியம்.

அந்த வகையில் எண் சோதிடத்தை நம்புபவர்கள் அதன் மீது அதீத கவனம் செலுத்துவர் என்ற அடிப்படையிலேயே, உள்ளூராட்சி சபைகளை 26ஆம் திகதி ஆரம்பிப்பதென்பது அந்தச் சபைகள் சிக்கலை எதிர்கொள்ளும் என எண் சோதிடர்கள் கூறுகின்றனர்.

அவர்களின் கணிப்பு சரியோ பிழையோ என்பதை விட, வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் களேபரங்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் நடக்கும் என்பதும் ஆளுங்கட்சியின் தீர்மானங்களும் வரவு செலவுத் திட்டங்களும் வாக்கெடுப்பில் நிறைவேறாமல் போகும் என்பதும் தெரிந்த உண்மை.

அந்த வகையில் உள்ளூராட்சி சபைகள் நாளை 26ஆம் திகதி ஆரம்பமாவது மேற்குறிப்பிட்ட எதிர்வுகூறலுக்கு கட்டியம் கூறுவதாக இருக்கலாம் என்பது நம் தாழ்மையான கருத்து.

இவை அனைத்தும் ஒருபுறம் இருக்க, உள்ளூராட்சி சபைகள் ஒற்றுமையாக இயங்கி மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒற்றுமையாக இயங்கி மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் எனக் கேட்பது ஒரு சம்பிரதாயபூர்வமான விடயமாயினும் ஒற்றுமை என்பது பற்றிக் கூறுகின்றவர்கள் தம்மளவில், தம் நிறுவன மட்டத்தில் ஒற்றுமையைக் கோரினார்களா? எல்லோரையும் அரவணைத்துச் சென்றார்களா? என்பது பற்றி மக்கள் கேள்வி எழுப்பவே செய்வர்.

ஆக, உள்ளூராட்சி சபைகள் ஒற்றுமையாக இயங்கி தமிழ் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்பது கட்டாயமானதாகும்.

இதைச் செய்வதற்காக ஒரு பொதுவான குழு அல்லது அமைப்பு ஒன்றை உருவாக்கி அதில் புத்திஜீவிகள் அரசியலாளர்கள் சமூக சேவையாளர்களை உள்ளடக்கி அவர்கள் ஊடாக உள்ளூராட்சி சபைகளில் ஒற்றுமையை ஏற்படுத்தவும் குழப்பங்கள் வரும்போது அவை தொடர்பில் சமரசம் மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டால் மட்டுமே உள்ளூராட்சி சபைகள் குழப்பமின்றி இயங்கும்.

இல்லையேல் என்ன நடக்கும் என்பதை அனைவரும் வெளிப்படையாக அறியும் வாய்ப்பு ஏற்படும்.

# இராணுவத்தினர் இந்து ஆலயங்களுக்கு உதவி செய்வது வேடிக்கையாகவுள்ளது

## மீள்குடியேற்ற குழுவின் தலைவர் சஜீவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களைத் தொடர்ந்து அழித்து ஒரு இன அழிப்பை செய்துவரும் இராணுவத்தினர் யாழில் இந்து ஆலயங்களுக்கு உதவி செய்து வருவது வேடிக்கையாக உள்ளது என வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் உறுப்பினரும் வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவருமான சண்முகலிங்கம் சஜீவன் தெரிவித்தார்.

இராணுவம் இந்து ஆலயங்களுக்கு உதவி செய்வது தொடர்பாக கேட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களைத் தொடர்ந்து அழிப்பதும் தமிழர்களின் வளமான நிலங்களை அபகரித்து சிங்களக் குடியேற்றங்கள், புத்த விகாரைகளை அமைத்து ஒரு இன அழிப்பை செய்துவரும் இராணுவத்தினர் யாழில் இந்து ஆலயங்களுக்கு உதவி செய்துவருவது வேடிக்கையாக உள்ளது.

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் நிலத்தை அபகரித்து வைத்திருக்கும் இராணுவம் யுத்தம் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்ட நிலையில் குறித்த பிரதேசத்தில் இருந்த 22 இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களையும் 10 கிறிஸ்தவ ஆலயங்களையும் இடித்து நிலத்துக்குள் புதைத்த வரலாற்றை மறைக்கப் பார்க்கிறார்களா?

20 கிராம சேவையாளர் பிரிவுகள் பகுதிகளாகவும் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகள் முழுமையாகவும் 4 ஆயிரத்து 148 ஏக்கர் மக்களுடைய நிலத்தை அபகரித்து விளையாட்டு மைதானம், இராணுவக் குடும்பங்களுக்கான உல்லாச விடுதிகளை அமைத்தும் அனுபவித்தும் வருகின்றனர்.

இவ்வாறு செய்பவர்கள் எவ்வாறு இந்து ஆலயங்களுக்கு உதவி செய்யமுடியும். விடுவிக்கப்படாத பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்கள் கல்வியைத் தொடரமுடியவில்லை. குறிப்பாக பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம், பலாலி வடக்கு அரச தமிழ்க் கலவன் பாடசாலை, காங்கேசன் துறை மகா வித்தியாலயம், வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம், காங்கேசன் துறை நடேஷ்வராக் கல்லூரியின் வகுப்பறைக் கட்டிடம், குடிநீர்க்கிணறுபோன்றவை இன்னும் இராணுவத்தினர் கையிலுள்ளது.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளதுடன் புதிய இராணுவ முகாமிற்கு காணிகள் தேவை என தமிழ் மக்களின் காணிகள் அபகரித்தல் இவற்றுக்கு எதிராக நாங்கள் போராடுவது சம்பிரதாயபூர்வமாக மாறிவிட்டது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு இராணுவம் உதவி செய்வது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலுள்ளது. உங்களால் எத்தனை போராளிகள் சிதைக்கப்பட்டார்கள். பெண் போராளிகள் எவ்வாறு சிதைக்கப்பட்டார்கள். உதாரணமாக இசைப்பிரியாவின்சம்பவம் இவற்றை சர்வதேசமும் உணர்ந்துள்ளது.

இவ்வாறு இருக்கும்போது சமாதானம்,சகோதரத்துவம் நல்லிணக்கம் எப்படி சாத்தியமாகும். போர்க்குற்றத்தில ஈடுபட்ட இராணுவத் தளபதிக்கு பொது மன்னிப்பு, பாராளுமன்ற பதவிகள் வழங்கி கௌரவிக்கும்போது அப்பாவித் தமிழர் சிலர் அரசியல் கைதிகளாக சிறைச்சாலையில் அவர்களது குடும்பங்கள் தெருவில். இப்படி இருக்கும் நிலையில் உங்கள் பேச்சானது முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைப்பது போலுள்ளது. முதலில் உங்களைத் திருத்துங்கள். தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளை மக்களிடம் ஒப்படையுங்கள். நாங்களே எங்கள் வாழ்வை வளமாக மாற்றிக்கொள்வோம்.

யுத்தம் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவது புலம்பெயர் தமிழர்களதான். அவர்களது நிதியுதவியின் கீழ் எமது மக்கள் மறுமலர்ச்சி அடைந்து வருகின்றார்கள். பொய்யான பேச்சுக்களை பேசி சர்வதேசத்திலிருந்து தப்புவிப்பதை விடுத்து ஆக்கபூர்வமாக யோசித்து போர்க்குற்றம் செய்த இராணுவத்தினரை தண்டிப்பதற்கும் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்ட நிலங்களை விடுவிபபதற்கும் நடவடிக்கை எடுத்தால் ஏனைய விடயங்கள் இயல்பாகவே நடைபெறும என்றார். (ம-4)

# தீவகத்தில் மாடு கடத்தலில் ஈடுபட்ட பிரதான சூத்திரதாரி கைது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மற்றும் தீவக பகுதிகளில் மாடு கடத்தலில் ஈடுபட்ட பிரதான சூத்திரதாரியான புங்குடுதீவை சேர்ந்த நபரொருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட புலன் விசாரணைகளின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பகுதியில் தொடர்ச்சியான மாடு கடத்தல்கள் நடைபெற்று வருகின்ற நிலையில்,

அண்மையில் கூட ஏழு மாடுகள் இறைச்சிக்காக கடத்தப்பட்ட நிலையில் பொது மக்கள் திரண்டு மாட்டு திருடர்களை பிடிக்க முற்பட்ட போது கடத்தலுக்கு ஈடுபட்ட வாகனத்துடன் வாகன சாரதி பிடிபட்டார். ஏனையோர் தப்பித்து விட்டனர். பிடிபட்ட சாரதி ஊர்காவற்றுறை நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய தற்போது வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று வேலணை, சரவணை பகுதிகளில் மாடு கடத்தலில் ஈடுபட்டதாக கூறபபடும் அல்லைப்பிட்டியை சேர்ந்த நபர் ஒருவர் இரு தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இறைச்சிக்கடை வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில், நேற்றைய தினம புங்குடுதீவை சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கைது நடவடிக்கையில் ஊர்காவற்றுறை பொலிஸ நிலைய பொறுப்பதிகாரி வீரசேகர, மண்டைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விவேகானந்தன் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய குற்றப்பிரிவு பொலிஸ அதிகாரி சில்வா ஆகியோரும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த கைது நடவடிக்கைகளுகது ஊர்காவற்றுறைபொதுசிவில் அமைப்பு ஒத்துழைப்பு வழங்கியிருந்தது. (ம-4)

## ஈழத்து சீரடியின் இராமநவமி இன்று

(புன்னலைகட்டுவன்)

ஈழத்து சீரடியின் இராம நவமி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாயி நாதர் ஆலயத்தில் இடம் பெற உள்ளது.

காலை 9.30 மணிக்கு விஷ்ணு ஆலயத்திலிருந்து பாற்குடபவனி ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையும். மதியம் 12 மணிக்கு சாயி நாதருக்கு விஷேட ஆரத்தி பூசை இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். மாலை 4.00 மணிக்கு ருத்ர அபிஷேகம் இடம் பெற்று மாலை 6.00 மணிக்கு வட இந்திய முறைப்படி பாண்ட் வாத்தியங்கள் முழங்க சாயிநாதர் பல்லக்கிலே எழுந்தருளி சாவடி ஊர்வலம் செல்வார். (ம-78)

# இளங்கலைஞர் விருது விண்ணப்பம் கோரல்

(குருமன்காடு)

முதலமைச்சரின் இளங் கலைஞர் விருதுக்கான விண்ணப்பங்கள் வவுனியா பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் 2108ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் விருதுக்கான இளங் கலைஞர் ஊக்குவிப்பு பரிசுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பங்களை 2018.04.20ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா பிரதேச செயலக கலாசார உததியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு வவுனியா பிரதேச கலாசாரப் பேரவை கேட்டுக் கொள்கின்றது. (2-250)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பணப்பெட்டி அல்லது பீரோவை எங்கே வைக்க வேண்டும்?**

உள் அறைக்கு கிழக்கில் வைத்தல்: இடம்

உள் அறைக்கு வடக்கில் வைத்தல்: அலைச்சல்

தெற்கு ஆக்நேயத்தில் வைத்தல்: அழிவு

அறைக்கு தெற்கில்: பணவரவை கூட்டும்

நைருதியில் வடக்கு முகமாக வைத்தல்: பணம் வளரும்

நைருதியில் கிழக்கு முகமாக வைத்தல்: செல்வம் சேரும்

மேற்கில் கிழக்கு முகமாக வைத்தல்: பணம்

அறையின் வாயவியத்தில் வைத்தல்: புகழ்.


*(தொடரும்)*

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில தவசிக்குளத்திலும் வவுனியா பிரதேசத்தில அரசமுறிப்பு கிராமம் ராஜமீர்பிடி வலைத் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நாவிபுரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

# மயூரன் சிறப்பாட்டம்; சென்றலைட்ஸ் வெற்றி





ஏ.பி. அணியினருக்கும் சென்றலைட்ஸ் அணியினருக்குமிடையிலான சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஏ.பி.அணித் தலைவர் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணியினர் 19 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் அலன் 38 ஓட்டங்களையும் மயூரன் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் ஏ.பி.அணி சார்பாக டிலுயன் 3 விக்கெட்டுக் களையும் விஸ்ணு மற்றும் பார்த்தீபன் தலா இரண்டு விக்கெட்டுக் களையும் வீத்தினர்.

143 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஏ.பி.அணியினர் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 116 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டனர். இதன்மூலம் சென்றலைட்ஸ் அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஏ.பி.அணி சார்பில் ராகுலன் 23, சிலோயன் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் சென்றலைட் அணி சார்பாக மயூரன் சிறப்பாகப் பந்து வீசி 4 விக்கெட்டுக்களையும் ஜெரிக் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஓட்ட நாயகனாக சென்றலைட் அணியின் மயூரன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# சம்பியன் பட்டம் வென்றது கரவெட்டி மகேசன் அணி




மாவட்ட ரீதியில் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் சம்பியன் ஆகி சாதித்தது கரவெட்டி மகேசன் விளையாட்டுக்கழகம்.

பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் புத்தூர் ஞான வைரவர் அணியினை எதிர்த்து கரவெட்டி மகேசன் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புத்தூர் ஞான வைரவர் அணித் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடித் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய புத்தூர் ஞான வைரவர் அணி ஐந்து விக்கெட் இழப்பிற்கு 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

புத்தூர் ஔவையார் அணி சார்பாக கஜரூபன் 20 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் மகேசன் அணியின் நட்சத்திரப் பந்து வீச்சாளர் பிரசாத் மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

47 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி மகேசன் அணி விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் நிரோஜன் 20 ஓட்டங்களையும் கஜாகரன் 26 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக 26 ஓட்டங்களைப் பெற்ற கஜாகரனும் சிறந்த பந்து வீச்சாளராக பிரசாத்தும் தெரிவாகின்ர். (க)

# என் வாழ்க்கையை பாழாக்க யாரோ முயற்சிக்கிறார்கள்

## சமி குற்றச்சாட்டு



இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது சமி, தனக்கு பின்னால் இருந்து யாரோ சதி செய்வதாக வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இந்திய வேகப்பந்து வீச்சாளரான சமியின் மனைவி ஹசின் ஜஹான், தனது கணவருக்கு பல பெண்களுடன் தொடர்பு உள்ளதாகவும் அவர் நாட்டுக்கும் உண்மையாக இல்லை என்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டுக்கான பி.சி.சி.ஐ. வீரர்கள் ஒப்பந்தத்தில் சமியின் பெயர் இடம் பெறவில்லை. மேலும், இது தற்காலிக முடிவுதான் என்று கூறிய பி.சி.சி.ஐ. விசாரணை மேற்கொண்டது.

அதன் பின்னர், சமி மீதான புகாரில் எந்த முகாந்திரமும் இல்லை எனக் கூறிய பி.சி.சி.ஐ, அவ்ரை 'B' Grade-யில் விளையாட ஒப்பந்தம் செய்தது. இதன்மூலம், ஐ.பி.எல் தொடரில் டில்லி டேர்டெவில்ஸ் அணிக்காக சமி விளையாடவுள்ளார்.

இந்நிலையில், இது குறித்து முகமது சமி கூறுகையில், என் குடும்பப் பிரச்சினை காரணமாக, கடந்த 10, 15 நாட்களாக மனரீதியான வேதனையை அனுபவித்து வந்தேன். என்மீது தேவையில்லாத குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன.

அவை கனவில் கூட நினைத்திராத கேவலமான குற்றச்சாட்டு. எனக்கு பின்னால் ஏதோ சதி இருக்கிறது. யாரோ என் குடும்பத்தைப் பிரிக்க பார்க்கிறார்கள். இதில் இருந்து விரைவில் வெளிவருவேன் எனத் தெரிவித்துள்ளார். (க)

# ரசிகருடன் மோதிய வோர்னர்; பரபரப்பானது தென்னாபிரிக்க தொடர்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் நாணயச் சூழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்ந் நெடுத்தது. அதன்படி, முதல் இன்னிங்ஸில் அந்த அணி 311 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி, 9 விக்கெட் இழப்புக்கு 245 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஆட்டத்தின் போது அவுஸ்திரேலிய துணைத் தலைவர் டேவிட் வோர்னர், ரபாடா பந்தில் சிக்சரும் பவுண்டரியுமாக விளாசினர்.

ரபாடா பந்தில் ஆட்டமிழந்த வோர்னர் பெவிலியன் திரும்பிக் கொண்டிருந்தபோது, ரசிகர் ஒருவர் வேகமாக கைதட்டியபடியே வந்து, வோர்னரை திட்டினார்.

இதனால் கடுப்பான வோர்னர், ரசிகருடன் மோதலில் ஈடுபட்டார். மைதானத்தின் பவுண்டரிலைன் அருகே இருவரும் திட்டிக்கொண்டனர். இதையடுத்து அங்கிருந்த பாதுகாவலர்கள் தலையிட்டு வோர்னரை சமாதானப்படுத்தி பெவிலியனுக்கு அனுப்பி வைத்தனர். (க)


# துடுப்பாட்டப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

தாவடி காளிகாம்பாள் விளையாட்டுக்கழகத்தின் துடுப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு மாபெரும் மென்பாந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த உள்ளனர்.

அணிக்கு ஏழு பேர் ஆறு ஓவர்களைக் கொண்டதாக போட்டிகள் நடைபெறும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணியினர் 077 525 0993 எனும் இலக்கத்திற்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக தொடர்பு கொள்ளவும். (க)

# ஒரு காலை இழந்த வீரர் வேகப்பந்து வீசி அசத்தல்



பாகிஸ்தானைச் சேர்ந்த சையத் ஷெர் அலி அப்ரிடி என்ற கிரிக்கெட் வீரர் மாற்றுத்திறனாளிகளுக்கு முன் உதாரணமாக திகழ்ந்து வருகிறார்.

ஷெர் அலி அப்ரிடி தன் 2ஆவது வயதில் ஒரு விபத்தில் தனது இடது காலை இழந்தார்.

இருப்பினும் சிறுவயது முதலே கிரிக்கெட் பார்ப்பதுதான் அவரின் விருப்பமாக இருந்துள்ளது.

ஒரு கால் இல்லாவிட்டாலும் கிரிக்கெட் விளையாடுவதில் ஆர்வம் காட்டி வந்த அலி, வாசிம் அக்ரம், சோயிப் அக்தர் ஆகியோரின் வேகப்பந்து வீச்சை விரும்பிப் பார்த்து வந்தார்.

ஒரு கால் இல்லாவிட்டாலும் செயற்கை கால் அணிந்துகொண்டு பந்து வீச பயிற்சி எடுத்துள்ளார். தற்போது 23 வயதாகும் அலி பல வருடங்களாக பாகிஸ்தானில் மாற்றுத் திறனாளிகளுக்காக கிரிக்கெட் அணி இருப்பதே தெரியாது என்றும் கடந்த 2012 இல் தான் அதில் இணைந்ததாக கூறியுள்ளார்.

அந்த அணியில் தற்போது அலி தனது வேகப்பந்து வீச்சால் கலக்கி வருகிறார். (க)

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு 13 - 04 - 1935

இறப்பு 24 - 03 - 2018

## திருமதி வரவணிக்கம் தங்கராசா

மு/புதுக்குடியிருப்பு 8ஆம் வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி வரவணிக்கம் தங்கராசா நேற்று (24.03.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கராசாவின் அன்பு மனைவியும் அருளப்பு - வைத்தியாள் தம்பதியரின் மூத்த மகளும் அல்வாய் வடக்கு சின்னப்பு - சின்னாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும் ஜெயதாஸ் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), குலதாஸ் (ஆசிரியர் - சங்கானை), லோகதாஸ், நவினதாஸ் (பொதுச்சுகாதார பரிசோதகர் - யாழ்.போதனா வைத்தியசாலை), லியனதாஸ் (பிரான்ஸ்), அமரர் ஸ்ரனிதாஸ், மெற்றலின், தங்கமலர் (வனிதா) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரது ஆத்ம பிரார்த்தனை நாளை (26.03.2018) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு புனித சூசையப்பர் தேவாலயத்தில் இடம்பெற்று புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-1991)

8ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

தகவல்:- குடும்பத்தினர்
077 693 4487



## கதிரன் இரத்தினசிங்கம்

மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் இரத்தினசிங்கம் நேற்று (24.03.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரன் - மாதி தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற மதுரத்தின் அன்புக் கணவரும் நந்தினி, சுபாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் மயிலிட்டி கொட்டுப்பள்ளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(3371)

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு.
(வாழ்வகம் அருகாமை)

தகவல்:-
குடும்பத்தினர்

### இலங்கை பெற்றோலிய...

ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, ஐ.ஓ.சி. எல்.பி 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 126 ரூபாயாகவும், டீசல் லீற்றர் ஒன்றின் விலை 100 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

அதேபோல் எக்ஸ்ரா ப்ரிமியம் யூரோ 3, ரக பெற்றோல் 123 ரூபாயில் இருந்து 128 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், எக்ஸ்ரா மைல் ரக டீசல் 99 ரூபாவில் இருந்து 102 ரூபாவாக கூட்டப்பட்டுள்ளது.

ஆனாலும், எக்ஸ்ரா ப்ரிமியம் 95 ரக பெற்றோல் மற்றும் லங்கா சுப்பர் டீசல் என்பவற்றின் விலைகளில் எந்த விதமான மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### இராணுவ வாகனம்...

ஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியை சேர்ந்த சந்திரியோகலிங்கம் மயூரன் (வயது 26) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

சங்கத்தானை புளியடிச்சந்தி பகுதியில் கொடிகாமம் பகுதியில் இருந்து சாவகச்சேரி நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்த கார் ஒன்றினை போக்குவரத்து பொலிஸார் இடைமறித்துள்ளனர். அப்போது வேகமாக சென்ற கார் சற்று தூரம் சென்று நிறுத்தப்பட்டது.

கார் கதவு திறக்கப்பட்ட போது அதே வழியாக வந்த குறித்த இளைஞன் வேகக்கட்டுப்பாட்டை இழந்து கார் கதவுடன் மோதி வீதியில் தூக்கி வீசப்பட்டார்.

அப்போது அதே வழியாக வேகமாக வந்த இராணுவத்தினருடைய பேருந்து ஒன்று வீதியில் கிடந்த இளைஞனை மோதியுள்ளது. உடனடியாக அங்கிருந்தவர்கள் குறித்த இளைஞனை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர்.

இருப்பினும் குறித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9,89)

### இரகசிய வாக்கெடுப்பின்...

தரணி வி.மணிவண்ணனையும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இ.ஆனோல்ட்டையும், ஈ.பி.டி.பி சட்டத்தரணி மு.ரெமீடியசையும் முதல்வர் வேட்பாளர்களாக முன்னிறுத்தவுள்ளதாக அறிய முடிகின்றது.

ஒன்றுக்கு மேற்பட்ட முதல்வர் வேட்பாளர்கள் முன்னிறுத்தப்பட்டால் வாக்கெடுப்பு ஒன்றுக்கு ஆணையாளர் செல்வார். இந்த வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பாக நடத்த வேண்டுமா? அல்லது பகிரங்க வாக்கெடுப்பாக நடத்தப்பட வேண்டுமா? என்பது தொடர்பில் உறுப்பினர்களிடம் கருத்து பெற்று அதிகப்படியான உறுப்பினர்களின் விருப்பின் அடிப்படையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

இதேபோன்று தான் சாவகச்சேரியிலும் நடைபெறவுள்ளது. இந்த நிலைகளால் முதல்வர் தெரிவில் பல குழப்பங்கள் ஏற்படலாம் என தெரிய வருகின்றது. இது தவிர சில உறுப்பினர்களிடம் முதல்வர் தெரிவுக்காக பேரம் பேசல்களிலும் சில கட்சி உயர் மட்டங்கள் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (ம-4)

### யாழ்.மாநகர சபை...

மேயராக ஆனோல்டை நியமிக்க உட்கட்சியில் பல எதிர்ப்புக்கள் வந்தவண்ணம் உள்ளன.

இதே வேளை தமிழ் தேசிய கூட்டமைப்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஆதரவினை கோரிய போதும், யாழ் மாநகர சபை மேயராக ஆனோல்ட் வருவதற்கு தாம் ஆதரவு வழங்கப்போவதில்லை என தெரிவித்திருந்தது. ஏனைய சில கட்சிகளும் அக்கருத்தை முன் வைத்திருந்தன.

இந்த நிலையில் நாளை முதலாவது சபை கூடவுள்ள நிலையில், மிக குழப்பகரமான சூழ்நிலையில் மேற்குறித்த தீர்மானம் எடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகிறது. அதாவது மாநகர சபை முதல்வர் பதவிக்கு ஆனோல்ட்டை தெரிவு செய்திருந்த நிலையில் அவருக்கு பதிலாக சொலமன் சு.சிறிலை நியமிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இது தொடர்பான இறுதி தீர்மானத்தை இன்று இடம்பெறவுள்ள கட்சி கூட்டத்தில் எடுக்கவுள்ளதாக தெரிய வருகிறது. (ம-9)

### கொழும்பில் தமிழ்...

பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு வத்தளையில் வசிக்கும் விதுஷ குமார் சிவபாலன் (20 வயது) என்ற இளைஞன் கடந்த 20ஆம் திகதி மாலை தனியார் வகுப்பு ஒன்றுக்காக வீட்டில் இருந்து சென்றிருந்தார்.

அங்கிருந்து சென்றவர் அதன் பின்னர் வீடு திரும்பவில்லை என்றும், அவரிடம் இருந்து எந்தவிதமான பதிலும் தமக்கு கிடைக்கவில்லை என பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இன்றுடன் ஐந்து நாட்கள் ஆகியும் குறித்த இளைஞன் தொடர்பான தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை என்றும் விசாரணைகளை மேற்கொண்டு தமது மகனை மீட்டுத் தருமாறும் பெற்றோர் உரிய தரப்பினரிடம் கோரியுள்ளனர். (ம-9)

### ரணிலுக்கு எதிராக...

தம் வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது. அந்தப் பிரேரணையில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நால்வர் கையொப்பமிட்டுள்ளதுடன், அதற்கு ஆதரவு தெரிவிக்க மேலும் சிலர் தீர்மானித்துள்ளனர்.

இந்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் சென்றிருக்கும் ஜனாதிபதி தனது கீச்சகத்திலேயே இந்த வாழ்த்தைப் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிறந்த நாளை முன்னிட்டு அலரி மாளிகையில் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது. அதில் அமைச்சர்கள் பலர் பங்கேற்றனர். (ம)

### கடுமையான விளைவு...

சுவிற்சர்லாந்தின் தலைநகர் ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடர் குறித்து, கருத்துத் தெரிவித்த போதே அவர் இந்த கடும் எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று வினாவப்பட்டபோது, அரசாங்கம் இந்த விடயத்தில் தொடர்ந்தும் பின்னடித்தால் கடும் பின் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என தெரிவித்தார். (ம)

### மகிந்த ராஜபக்ஷ...

மாதத்தின் ஆரம்பத்தில் பௌத்த-முஸ்லிம் மோதல் ஏற்பட்டு இலங்கைக்குள் இனவாத மோதல் உருவானதுடன், இதன் காரணமாக நாட்டில் ஒருவார காலம் அவசர கால நிலைமை அறிவிக்கப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு வரை இலங்கையில் தேர்தல் நடைபெறாது என்ற போதிலும் தேர்தல் வெற்றியுடன் உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு மகிந்த ராஜபக்ச அணியினர் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றனர் எனவும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

உடனடி விசாக்கள்
STUDENT VISA / VISIT VISA / TOURIST VISA
SINGAPORE, MALAYSIA, INDIA, UK, USA, AUS
SWISS, FRANCE, & OTHER EUROPE COUNTRIES
TOUR ARRANGEMENT
VISA CONSULTATION
10 ஆண்டுகளாக நம்பகமான எமது சேவைகள்
● விமானப்பயண சீட்டுக்கள்
● சுற்றுலா பயண ஒழுங்குகள்
● பயணக்காப்புறுதி ஒழுங்குகள்
● STUDENT VISA அனுமதிகளும் வீசா ஆலோசனைகளும்
● தென்னிந்திய தலயாத்திரை ஒழுங்குகள்
● வீசா விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்வதற்கான நிபுணத்துவ ஆலோசனைகள்
யாழ்ப்பாணத்தில்
NO:106, Palaly Road,
Thirunelvely,
Jaffna.
(3357)
ASTRO TRAVELS ★ B.F.C. SERVICES
NO.20, 42ND LANE, WELLAWATTA, COLOMBO 06
077 22 66 88 9 / 0112361449

## நாடளாவிய ரீதியி...

ரத்து 516 வழக்குகள் போக்குவரத்து குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார்.

நேற்று அதிகாலை 04.00 மணி முதல் காலை 08.00 மணி வரை இந்த சுற்றி வளைப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களில் குடிபோதையில் வாகனம் செலுத்திய 266 பேர் மற்றும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஆயிரத்து 31 பேரும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார்.

அத்துடன் வேறு பல குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட 800 பேரும், ஹெரோய்ன் போதைவஸ்து வைத்திருந்த 667 பேரும் உள்ளடங்குகின்றனர்.

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் பணிப்புரைக்கமைய இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர மேலும் கூறினார். (ம)


### காணி கட்டிடங்கள் விற்பனைக்கு

நிறுவனங்கள், வியாபார நிறுவனம் நடத்தக்கூடிய, பிரதான வீதியில் சகல வசதிகளுடன் கட்டிடங்களும் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு :**

**075 076 0523**

(3370)


## விடுதலையை வலி...

றைய தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் சமூக முன்னேற்ற நிறுவனம் மற்றும் தமிழ் இளைஞர்கள் சமூகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் குறித்த கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் உட்பட பொதுமக்கள் கூடும் பொது இடங்களில் குறித்த கருணை மனுக்களில் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை அவரது பிள்ளைகளின் நலனைக் கருத்திற்கொண்டு விடுதலை செய்யுமாறு குறித்த கருணைமனுவில் கோரப்பட்டுள்ளதுடன், இதன்போது பொதுமக்களிடம் கையெழுத்துக்கள் பெறப்பட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு இக்கருணை மனுக்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இச்செயற்பாட்டிற்கு பொது அமைப்புக்கள் பலவும் தமது ஆதரவுகளைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## படுகாயங்களுட...

இதையடுத்து அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)


### வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் சைவ உணவகம் ஒன்றுக்கும் உணவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றுக்கும் கீழ்வரும் வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

01. உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்ஸ்)
02. ரீ மேக்கர்
03. இடியப்பம் போடுபவர்கள்
04. ஆட்டோச் சாரதி (தங்கி நிற்பதுடன் உணவகத்துடன் இணைந்து செயற்படக்கூடியவர்கள்)
05. யாழ்ப்பாண பாரம்பரிய உணவுகள் உற்பத்தி செய்யக்கூடியவர்கள்.
06. ஏனைய சமையல் வேலைகளுக்கு.

**தொடர்புகளுக்கு:**

**0212222373, 0766148303**

(3368)



### எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(அ-1977)

### இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாணம்

இந்திய துணைத் தூதரகமானது தூதரகத்தின் பாவனையிலிருந்த நல்ல நிலையில் உள்ள மகேந்திரா ஸ்கோப்பியோ வகையான சாம்பல் வர்ணம், 2010 ஆம் வருட வாகனத்தினை விற்பனை செய்வதற்கான கேள்வி விலை மனுக்கோரல்களை ஆர்வமுள்ளவர்களிடமிருந்து கோருகின்றது.

மேலதிக விபரங்கள் மற்றும் வாகனத்தினை பார்வையிடுவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரைத் தொடர்பு கொள்ளவும். (C-1975)

பெயர் :-திரு.வே.ஜோர்ஜ்
தொலைபேசி இலக்கம் 0212220504 (09.00 – 1600)

### விற்பனை பிரதிநிதி தேவை

பிரசித்திபெற்ற புரொயிலர் கோழி இறைச்சி கம்பனிக்கு அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதி தேவை. பக்கற் கோழி 1kg - 370/=

**தொடர்பு: 0773897314**

### Sky Cabs

- Air Port Service
- Local Hires
- Wedding Hires
- Trinco, Batticaloa Tours

A/C Per Km 45/=

**T.P: 077 174 4859**

(3369)

### வெளிவந்துவிட்டது
### தொழில் வழிகாட்டி (The Guide)

ஒரே நாளில் 2000 பிரதிகள் விற்பனை

இலங்கை வரலாற்றில் முதலாவது கல்வி, தொழில்வாய்ப்பு மற்றும் பொதுப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல்.

**உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்...**

தொடர்புகளுக்கு:

**North Lead,**
**இல.253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**077 975 6870 / 077 419 2275**

(அ-1984)

### அலுவலக வேலைவாய்ப்பு

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்கு Operation Supervisor ஆண் தேவை. வயது எல்லை 25 – 35 வரை.

யாழ். நகரில் இயங்கும் சேவை நிறுவனத்துக்கு மோட்டார் வாகனமுடைய Branch Executive ஆண் தேவை. வயது எல்லை 18 – 30 வரை.

பிரதேசங்கள்: 01. யாழ். நகரம், 02. நெல்லியடி

**தொடர்புகளுக்கு: 076 376 0022**

(அ-1983)

### உடனடி வேலை வாய்ப்பு
### V2 TRAVELS



விமானப் பயணச்சீட்டுக்கள், விரைவுப் பொதிகள் சேவை

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
தகுதி :-40 வயதிற்குட்பட்டோர்
நேர்முகத்தேர்வு - 31-03-2018 சனிக்கிழமை காலை 10 மணி
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம்.
**0768226241**
(C-1978)





### இராமநவமி விழா
### பாபாவோடு திருவுலா...

இன்று 25.03.2018 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் புத்தூர் ஷிரடி பாபா ஆலயத்தில் இருந்து வல்லை ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு பாபா திருவுலா செல்லவுள்ளார். அடியவர்களையும் பாபாவோடு திருவுலா செல்ல அன்போடு அழைக்கின்றோம்.

**ஸ்ரீ ஷிரடி பாபா பிரார்த்தனை மையம்**
**சோமாஸ்கந்த அன்னசத்திரம்**
**சுன்னாகம் வீதி, புத்தூர்.**
**தொ.பே: 077 353 0368**

(3363)

அனுசரணை: பிள்ளையார் மெடி கிளினிக்
(விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனை நிலையம்)
பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். 0212058881, 0777789314

### விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg

**0768226240**

- மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS
(C-1828)

### அன்னை பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது

வெளிநாடு, உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

**021 221 5656 | 070 330 5500**

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவற்றுறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, 1988, சுவாதி நட்சத்திரம், கிரக பாவம் 06, கொழும்பில் கணக்காளராக தொழில் புரியும் 6அடி உயரம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

**தொடர்புகளுக்கு:**

**077 764 0155**

(அ-1982)

### வேலைக்கு ஆட்கள் தேவை

அப்பம், பலகாரம் செய்வதற்கும் சமையல் வேலை செய்வதற்கும் ஆட்கள் தேவை.

**078 330 2236**

(C-1953)

### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

- 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
- வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.

**11Kg மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்**

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்



3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்



UK - 550/=
France - 700/=
Germany - 650/=
Swiss - 750/=
Canada - 1000/=

சகல நாடுகளுக்குமான online visa விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்

**திருமுருகன் கொம் நெற்**

316, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோனிற்கு அருகாமையில் அமைந்துள்ளது) 077 755 4528

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNB வங்கிக்கு அருகாமையில்)

TCN EXPRESS
208A, Galle Road, Wellawatte.

(3365)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்


நாதம் 159

வள்ளுவர் ஆண்டு 2048 | 25.03.2018 | தொலைபேசி : 021 222 3378



# ‘சி’ என்றால் மடியில்






# ‘த’ என்றால் மகசின் சிறையில்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## வெற்றிகரமாக நடைபெற்ற திருகோணமலை கருத்தமர்வு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

வாத்தியார் மீண்டும் எழுந்தார். திருகோணமலை பட்டினத்துக்கான உதவி அரசாங்க அதிபராக இருந்து கப்பல் போக்குவரத்துச் சேவைக்காலத்தில் அரும்பணியாற்றிய ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் வை.வேலும் மயிலும் அவர்கள் அண்மையில் காலமாகிவிட்டார். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவம் என்று அறிவிக்க, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** திருகோணமலையில தமிழ் மக்கள் பேரவையின்ர ஏற்பாட்டில நடந்த அறிவுரைப்புக் கருத்தமர்வு மிகவும் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. நிறையப் பேர் இந்தக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் கலாநிதி கே.ரி. கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம், சிரேஷ்ட சட்டத்தரணி இரத்தினவேல் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கியுள்ளனர்.

**பண்டிதர்:** நானும் அறிந்தனான். தமிழ்த் தேசியத்தை யாரும் எளிதாகப் பிடுங்கி எறிந்து போட்டுப் போறதுக்கு தமிழ்த் தேசியம் ஒண்டும் வெறும் மணல்போட்டில முளைத்த செடியல்ல. தமிழ்த் தேசியம் என்பது ஒவ்வொரு தமிழ் மகனின் உள்ளத்திலும் ஆழமாக வேரூன்றியுள்ள விருட்சம். எனவே தமிழ்த் தேசியத்தை எளிதாகப் பிடுங்கி எறியலாம் என்று யார் நினைத்தாலும் அது ஆபத்தாகத்தான் முடியும் என்று ஜோதி லிங்கம் அவர்கள் கூறிய போது கருத்தமர்வு நடந்த திருகோணமலை நகரசபை மண்டபம் கரகோச ஒலியால் அதிர்ந்ததாம்.

**வாத்தியார்:** வேற, தமிழ்த் தேசியம் என்பது எங்கட மக்களின் தியாகத்தாலும் செந்நீராலும் கட்டியெழுப்பப்பட்ட விருட்சம். அதில யார் கைவைத்தாலும் அவர்கள் அரசியலில இருந்து தூக்கியெறியப்படுவர்.

**சாத்திரியார்:** திருகோணமலையில நடந்த அறிவுரைப்புக் கருத்தமர்வு போல எல்லா ஊர்களிலும் இப்படி நடக்கவேணும். இது தொடர்பில எங்கட முதலமைச்சர் ஐயாவும் தமிழ் மக்கள் பேரவையும் சரியான ஒரு திட்டத்தை வகுத்து அதனை நடைமுறைப்படுத்துவது கட்டாயம்.

**மூப்பர்:** அது சரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாண மாநகர சபையிலும் ஏனைய பிரதேச சபைகளிலும் ஆட்சியமைப்பதற்கு ஆதரவு கேட்டு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தவை ரெலோவின் செயலாளர் செல்வம் அடைக்கலநாதன் சந்தித்தவராம்.

**சாத்திரியார்:** அட, எங்கதி அப்படியோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில இருந்து மாவை. சேனாதிராஜாவோ அல்லது சுமந்திரனாரோ சந்திக்காமல் ஏனாம் செல்வம் அடைக்கலநாதன் சந்தித்தவர்.

**பண்டிதர்:** டக்ளஸ் தேவானந்தாவின்ர ஆதரவும் தேவை. அதேநேரம் தாங்கள் கேட்பது என்று மக்களுக்குத் தெரியாமலும் இருக்க வேணும் எண்டால் செல்வம் அடைக்கலநாதனைத்தானே சந்திக்க விடவேணும்.

**கங்காணி:** டக்ளஸ் தேவானந்தா எம்.பி. என்ன சொன்னவராம்.

**சாத்திரியார்:** அதுபற்றி இன்னும் தெரியல்ல.

**விதானையார்:** பிரதேச சபைகள், மாநகர சபைகளுக்கான உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்து வருகினம். ஆனால் ஆட்சியமைக்கிறது யார் என்பது தான் இன்னமும் தெரியாமல் இருக்குது.

(இவ்வாறு விதானையார் கூற, பண்டிதர் பரமலிங்கம் தன் இடுப்பில் செருகி வைத்திருந்த கடதாசி ஒன்றை எடுத்தார். இதைப் பார்த்த சாத்திரியார், என்ன பண்டிதர் ஐயா பதவியேற்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை உங்க இடுப்பிலையோ வைத்திருந்தனீங்கள் என்று கேட்க, ஆலடியில் சிரிப்பொலி சில நிமிடம் கலகலப்பை ஏற்படுத்தியது)

**பண்டிதர்:** சாத்திரியார் நான் ஒன்றும் பதவியேற்புப் பட்டியலை வைத்திருக்கவில்லை. இது ஆலடி மாநாட்டிற்கு வந்த கடிதம். இதை ஒருக்கால் வாசிக்கிறது நல்லது.

(இவ்வாறு பண்டிதர் கூறியதும் மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம், பண்டிதர் கடிதத்தை வாசியுங்கள் என்றார். வாத்தியாரின் அனுமதி கிடைத்ததும் பண்டிதர் கடிதத்தை வாசித்தார்)

தலைவர், ஆலடி மாநாடு ஐயா!

கடந்த வாரம் உங்கள் ஆலடி மாநாட்டு சம்பாசனைகளை வாசித்தேன். யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரின் சிறந்த நிர்வாகம் பற்றி எழுதியிருந்தீர்கள். அதற்கு எமது நன்றிகள். அதேநேரம் யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையில் பின்வரும் இரண்டு விடயங்களில் வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி அவர்கள் கவனம் செலுத்தி இந்த இரண்டு விடயத்தையும் நிவர்த்தி செய்யவேணும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். இதில் ஒரு விடயம் யாழ்ப் பாணப் போதனா வைத்திய சாலை வாட்டுகளில் தங்கியுள்ள நோயாளர்களை துண்டு வெட்டி வீட்டிற்கு அனுப்பும் போது அவர் களை விரைவாக அனுப்பி வைப்பதற்கு உதவி செய்ய வேண்டும்.

அநேகமாக துண்டு வெட்டுவதாக காலையிலேயே சம்பந்தப்பட்டவருக்குத் தெரியப்படுத்திய போதிலும் அன்று இரவு ஆறு மணியளவில் தான் குறித்த நபர் வீடு செல்ல முடிந்தது.

நோயாளர் அட்டை எழுதுவதிலும் மருந்து மாத்திரைத் துண்டு எழுதுவதிலுமே நேர தாமதம் ஆகிறது. இன்று துண்டு வெட்டுவது என்றவுடன் குறித்த நோயாளியாக இருந்த நபர் தனது கட்டிலைவிட்டு வாங்குகளில் இருக்கவேண்டியுள்ளது.

நோய் குணமடைந்திருந்த போதிலும் மிக நீண்ட நேரம் வாங்குகளில் குந்தியிருப்பதென்பது கடினமே. ஆகையால் துண்டு வெட்டுவது என்று முடிவு செய்துவிட்டால் ஆகக் குறைந்தது இரண்டு மணித்தியாலங்களுக்குள்ளாவது சம்பந்தப்பட்டவர் வீடு செல்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதனை எங்கள் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி அவர்கள் செய்வார் என நம்புகிறோம்.

மேலும் இறந்தவர்களின் உடலை வைத்தியசாலையில் இருந்து விரைவாக எடுத்துச் செல்வதற்கும் வைத்தியசாலைப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது எம் தாழ்மையான கோரிக்கை.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவுடன் இறந்து போனால், அது தொடர்பில் நடைபெறும் விளக்கம் விசாரணை நெடு நேரத்தை எடுத்துக்கொள்கிறது. சிலவேளை 48 மணித்தியாலங்கள் வைத்தியசாலையிலேயே இறந்தவரின் உடல் இருக்க வேண்டியுள்ளது. இறப்பு என்பது துன்பத்திற்குரியது. எனவே துன்பமான நேரத்தில் அலைச்சல், நேர விரயம் என்பவற்றைத் தவிர்ப்பது நல்லது என்ற அடிப்படையில் இறந்தவர்களின் உடலை உறவினர்கள் மிக விரைவாக வீடுகளுக்கு எடுத்துச் செல்வதிலும் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேணும்.

இவ்வாறு பண்டிதர் கடிதத்தை வாசித்து முடிக்க, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுமா ஐ.நா.?


இலங்கையைப் பொறுத்தவரையில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையகத்தின் 37 ஆவது கூட்டத் தொடர் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், இலங்கையின் மீது பல்வேறு வகைகளில் சர்வதேசத்தின் பார்வை திரும்பியுள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாங்காய் வடிவத் தீவை இலக்கு வைத்து சர்வதேச ஆளும் வர்க்கங்கள் எப்படியாவது தமது கால்களை பதித்து விட வேண்டும் என்ற முனைப்பில் பல்வேறு வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு இருந்தன.

அதன் ஒரு கட்டமாக இத்தீவில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதலின் போது இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள்,









யுத்தக் குற்றங்கள் மற்றும் மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்று வலியுறுத்தி அதனூடாகவும் தமது கால்களை இலங்கையில் தடம் பதித்துள்ளன.

யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளான தமிழ் மக்கள், யுத்தம் முடிந்தும் கடந்த 9 ஆண்டுகளாக சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருவதுடன், சர்வதேசத்தின் மூலமாகவாவது தமக்கு தீர்வு கிடைக்குமா? என்ற பேரவாவுடனும், பெரும் எதிர்பார்ப்புக்களுடனும் காத்திருக்கின்றனர்.

தமிழ் தரப்பின் அரசியல் தலைமைகள் இன்றி தமக்கான விடியலையும், நீதியையும் பெற்றுக் கொள்வதற்காக கடந்த ஓர் ஆண்டுக்கும் மேலாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் காணிகளை பறிகொடுத்தவர்களும் சர்வதேசத்தின் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்களும் விரக்தியின் உச்சத்திற்கு சென்று சர்வதேசம் தமக்கு நீதியை வழங்கும் என்ற சிறிய நப்பாசையுடன் வீதிகளில் இறங்கியுள்ளனர்.

வணங்கிய கைகள் மரத்துப்போன நிலையிலும், படிக்கட்டுகள் ஏறி ஏறியே கால்கள் சோர்ந்து போன நிலையிலும் அழுவதற்கு இனி கண்ணீர் இல்லை என்ற நிலையிலும் பரிதாபத்திற்கு உட்பட்டவர்களாகவும் அனுதாபத்துடன் பார்க்கப்பட வேண்டியவர்களாகவும் அவர்கள் மாறியுள்ளனர்.

அரசாங்கத்திடம் கேட்டுப் பார்த்தும், ஆலயங்களில் மன்றாடியும், சர்வதேச சமூகத்தின் கால்களில் விழுந்தும் இது வரையில் எதுவும் நடக்கவில்லையே. எமக்கு நீதியே கிடைக்காதோ என்ற ஏக்கத்தில் அவர்கள் நடைபிணமாக வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர்.

ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும், அந்த உரிமைகளுக்காக போராடி காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கும், சர்வதேச அங்கீகாரத்துடன் வரையறைக்கப்பட்டிருந்த பிரதேசங்களில் கடமையாற்றியவர்களை புலிகள் என்றும் முத்திரை குத்தி கைது செய்யப்பட்டவர்களுக்கும் அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக சரணடைந்தவர்களும் சர்வதேச ஆளும் வர்க்கங்கள் நீதியை பெற்றுக் கொடுக்கத் தவறியுள்ளன.

தற்போது சர்வதேச அழுத்தங்களின் காரணமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு ஒரு அலுவலகம் திறப்பதற்கான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு, அந்த அலுவலகத்தில் பணிபுரிவதற்கான குழுவையும் இலங்கை அரசாங்கம் நியமித்துள்ளது.

மறுபுறத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் என்று எவருமே இல்லை என்று அரசாங்கத்தின் உயர் பதவிகளில் இருப்பவர்கள் பகிரங்கமாகவே அறிவித்துள்ளனர்.

சர்வதேச ஆளும் வர்க்கங்களுக்கு இந்தக் குட்டித் தீவில் தடம்பதிக்க அனுமதியளித்ததன் பின்னர் அவை தாம் வைத்த கோரிக்கைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதற்கு போதிய அழுத்தம் கொடுக்கவில்லை என்ற விரக்தி பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தின் மத்தியில் தோன்றியிருக்கின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தைக் கொண்டு வந்ததில் இருந்து அந்த அரசாங்கம் நீடித்து இருப்பதற்கு பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படுகின்ற எந்தவொரு விடயமும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்திலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த அரசாங்கத்தின் 3 வரவு-செலவுத் திட்டங்களுக்கும் வேறு வேறு காரணங்களை சொல்லி ஆதரவளித்து இருந்தது.

2018 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்திற்கு ஆதரவு அளித்த போது காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியையும் ஒரு காரணமாக காட்டியே தமிழ் தேசியக் கூட்டமைப்பு அந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்திற்கு முக்கியமான விடயங்களை கையாள்வதற்கான எத்தகைய சட்ட அதிகாரமும் வழங்கப்படவில்லை.

மேலும் தற்போது பாராளுமன்றத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக நிறைவேற் றப்பட்டுள்ள சட்டமூலமும் கூட இனிமேல் நடைபெறுவதை தடுக்கும் வகையிலேயே அமைந்துள்ளதை பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் இந்த அலுவலகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய நிவாரணத்தை வழங்கப் போகிறது என்ற கேள்வி ஜனநாயக சக்திகளிடமும் மனித வுரிமை செயற்பாட்டாளர்களிடமும் மேலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கும் அனைத்து தரப்பினரிடமும் எழுந்துள்ளது.

அரசு என்ற ரீதியில் அனைத்து அரசுகளும் ஒன்றுகூடி தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை பகடைக்காயாக பயன்படுத்திக் கொண்டு தமது தேவை நிறைவேறியவுடன் அதனை கைகழுவி விட்டுவிடுமோ என்ற அங்கலாய்ப்பும் ஆதங்கமும் பரவலாக எழுந்துள்ளது.

வல்லரசுகளின் நிதிக் கொடையின் மூலமே ஐ.நாவினுடைய அனைத்து சபைகளும் இயங்கி வருகின்றன.

ஆகவே ஐ.நாவில் வல்லரசுகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இருப்பினும் வல்லரசுகள் தாங்கள் தங்களது நிலையை தக்கவைத்துக் கொள்வதற்காக ஐ.நாவை ஓரளவுக்கு சுயாதீனமாக செயற்பட வைக்க வேண்டிய தேவையுள்ளது.

எனவே ஐ.நாவின் மீது உலக மக்கள் நம்பிக்கை வைப்பதற்காக வல்லரசு நாடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதியை வழங்குவதை உத்தரவாதப்படுத்த முன்வரவேண்டும்.

அத்துடன், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் செயற்பாடுகளில் தாமதத்தை ஏற்படுத்தி விடுமோ என்றும் தமிழ் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக பல்வேறு வடிவங்களில் ஒடுக்கப்பட்டு வரும் இலங்கையின் தமிழ்த் தேசிய இனம், தனக்கு உரித்துடைய சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்காக போராடி வருகின்றது.

அந்த உரிமைகளை அவர்களுக்கு வழங்குவதற்கு இன்னமும் கூட இலங்கை அரசாங்கத்திற்கு மனம் இல்லாத நிலை தொடர்கின்றது. பொருளாதார அபிவிருத்தி மூலம் அனைத்து விடயங்களையும் சரி செய்து விடலாம் என்ற நோக்கில் கருமங்களை முன்னெடுத்துச் செல்லும் அரசாங்கம், அந்த கருமங்களை நிறைவேற்றுவதற்கு பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்பையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்தும் பின்னடித்து வருகின்றது.

பணி நியமனங்களில் பாரபட்சம் காட்டுகின்ற போக்கு தொடர்வதாகவே வேலையற்ற பட்டதாரிகள் முதல் பாடசாலை கல்வியை இடைநிறுத்திக் கொண்டவர்கள் வரை குறை கூறுகின்றார்கள்.

உயர் பதவிகளில் தமக்குரிய மதிப்பளிக்கப்படவில்லை என்று ஒடுக்கப்பட்ட தேசிய இனம் இன்று வரை கவலை கொண்டுள்ளது.

நிலைமைகள் இவ்வாறு இருக்க, அரசியல் ரீதியான நல்லிணக்கம் ஏற்பாட்டாலேயன்றி வேறு எந்த வகையிலும் நல்லிணக்கத்தையும், இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தையும் ஏற்படுத்த முடியாது.

ஆகவே நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை கடுமையாக அமுல்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தனக்குரிய முழுமையான சக்திகளையும் வளங்களை யும் அதிகாரத்தையும் பயன்படுத்தி தனது ஆளுமையையும் தனது நோக்கத்தையும் நிறைவேற்ற முன்வர வேண்டும்.






ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

# பழமொழிகளும் கருத்தும்

அழுத பிள்ளை பால் குடிக்கும் - முயற்சி
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு- அளவை மீறுதல் கூடாது.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்- உள்ளத்தில் உள்ளதை முகம் பிரதிபலிக்கும்.
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு- ஒற்றுமையே பலம்.
அடாது செய்பவர் படாதுபடுவர்-செய்வினைப் பயன்
அன்பரன சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் - உத்தம நட்பு.
அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி- முன்மாதிரி.
அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்- விடாமுயற்சி.
இளங்கன்று பயமறியாது-வாலிபத்துணிவு.
இளமையிற் கல்வி சிலையில் எழுத்து- இளமையின் சிறப்பு

ச.தேனுசன்
தரம் -07
யாழ்/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.




# அணிற் பாடல்



அழகு மிக்க பிள்ளையே
அங்கும் இங்கும் ஓடியே
பழங்கள் தேடிப் பிடிக்கிறாய்
பையப் பையக் கொறிக்கிறாய்
வளைத்து வாலைத் தூக்குவாய்
மரத்தின் உச்சி ஏறுவாய்
கிளைகள் தோறும் தாவுவாய்
கெடுதி ஏதும் செய்திடாய்
மூன்று கோடு முதுகிலே
முன்பு ராமர் தந்ததோ?
நான்கு முகத்துப் பிரமனால்
நன்கு படைக்கப் பட்டதோ?
கேட்ட கேள்வி கேட்டதும்
கீச்சுக் கீச்சு என்கிறாய்
ஓட்டம் பிடிக்கப் பார்க்கிறாய்
ஒளிந்து கொள்ள நினைக்கிறாய்
பிள்ளை என்றே உன்னை நான்
பிரியமாக அழைக்கிறேன்
கிள்ளிக் கிள்ளிப் பழங்களைக்
கீழே எனக்குப் போடுவாய்.

ஆர்.அகல்விழி
தரம்-6
அஸ்வினி இல்லம்
எஸ்.ஓ.எஸ்.சிறுவர் இல்லம்



சி.லக்ஷன்
தரம்-1ஏ
யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்

# பழமொழிகள்

ஓசை பெறும் வெண்கலம் ஓசை பெறா மட்கலம்.
ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி.
ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இலேசு.
ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்.
ஒரு காசு பேணின் இரு காசு தேறும்
ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை
ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா?
ஒரு நன்றி செய்தவரை உள்ள அளவும் நினை
ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைக்கவா?
ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
ஒரு பொய்யை மறைக்க ஒன்பது சொல்லுதல்
ஒருவர் அறிந்தால் இரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம்.
ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம், உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்.
ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று.
கல்லடி பட்டாலும் படலாம் கண்ணடி படக்கூடாது.
கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்

# பொது அறிவு

1. செய்மதி தகவல் தொடர்பு நிலையம் - பாதுக்கை
2. புடைவைக் கைத்தொழில் நிலையம் - வியாங்கொடை, பூகொட துல்கிரிய
3. எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் - சப்புகஸ்கந்த
4. பிறிமா மாவு ஆலை - திருகோணமலை
5. விவசாய ஆராய்ச்சி நிலையம் - மகா இலுப்பள்ளம, இங்குராகொட, பதல்கொட
6. தாவரவியல் பூங்காக்கள் - பேராதனை, கனோபத்த, ஹக்கல
7. தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கலை
8. சோயா ஆராய்ச்சி நிலையம் - பல்லேகலை, கன்னொறுவ
9. ரயர் (டயர், டியூப்) தொழிற்சாலை - களனி
10. இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை
11. வனவிலங்குச் சரணாலயம் - வில்பத்து, யால, உடவளவை, ரூகுணு, லகுகல
12. பருத்தி ஆராய்ச்சி நிலையம் - அம்பாந்தோட்டை
13. உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் - நுவரெலியா
14. சீமெந்து தொழிற்சாலை- புத்தளம், காலி
15. ஓட்டுத் தொழிற்சாலை - அம்பாறை
16. ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் - நாவின்ன
17. அரசினர் சுதேச வைத்தியசாலை - இராஜகிரிய
18. பறவைகள் சரணாலயம் - முத்துராஜவெல, குமண, பூந்தல
19. குஷ்டரோக வைத்தியசாலை - மாந்தீவு மட்டக்களப்பு
20. கலாசார முக்கோண வலயம் - கண்டி, அநுராதபுரம், பொலநறுவை





# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



**பங்களாதேஷத்துடனான கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் வெற்றி பற்றி?**

**பிரதமருக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி?**

**அரசியல் கைதி ஆனந்த சுதாகரனுக்கு விடுதலை கிடைக்குமா?**

**சகீத்** — யாழ்ப்பாணம்

**நண்பன் - காதலன் - கணவன் இதில் யார் சிறந்தவர்?**

உள்ளத்தில் எதுவுமின்றி உண்மை, நேர்மை, தூய்மை இவற்றின் அடையாளமாய் இருக்கும் நட்பு.

உள்ளத்தில் அவளை வைத்து உண்மை அன்பு செய்து கள்ளமில்லாமல் தூய்மை அன்பு செய்பவன் காதலன்.

ஈரேழு பிறப்பிருந்தும் இப்பிறப்பில் என் வாழ்க்கை பயணத்தில் தூய்மையாய் வந்துதித்த மனையாளே இனி உன்னோடு தான் என் வாழ்க்கை பயணம் என சத்தியம் செய்பவன் கணவன்.

மூன்றும் சிறந்தது தான். அதிலும் நண்பன் காதலனாகி காதலன் கணவனாகும் நிலை சொர்க்கம். அந்த சொர்க்கம் சிலருக்குத்தான் அமையும்.

**நந்தகுமார்** — மானிப்பாய்

**நாங்கள் எங்கே போக? எல்லோரும் கைவிரிச்சிட்டாங்களே?**

என்ன செய்ய, பதவிகளுக்கும் அற்ப சொற்ப சலுகைகளுக்கும் விலை போன எம் தலைமை இப்போது பச்சோந்தி வேடத்தை அவிழ்த்து விட்டிருக்கிறது. தேர்தல்கள், ஐ.நா.அமர்வுகள், மேதினக் கூட்டங் கள், சிலைதிறப்பு விழாக்கள், இன்னோரன்ன பொதுமேடைகளில் இவர்களின் பச்சோந்தி வேடத்தை அவதானிக்க முடியும்.

ஆளப்பிறந்தவன் தமிழன் என்பதை பேஸ்புக்கில் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறது தமிழினம்.

**கோகுலராமன்** — தெல்லிப்பழை

**2019 இல் உலகக் கிண்ணம் இலங்கைக்கு கிடைக்குமா?**

தற்போது ஒருநாள் போட்டி அணிகளுடன் ஒப்பீடு செய்கையில் இந்திய அணி பலம் பொருந்திய அணியாக இருக்கிறது. இந்திய அணிக்கு சவால் விடும் அளவில் இலங்கை அணி இருக்கிறது. தற்போதைய இலங்கை அணியின் போக்கு மிகச் சிறப்பாக இருக்கிறது. எனவே முயற்சி செய்தால் எமது வீரர்கள் மீண்டும் ஒருமுறை உலகக் கிண்ணத்தையும் தூக்க வாய்ப்பிருக்கிறது.

**பரமேஸ்** — வதிரி

**பிரதமருக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி?**

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது ஒன்றும் பெரிதல்ல. அதில் வெற்றி கொள்ள வேண்டுமே. இப்போதும் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக இருக்கிறார் என்பதை மறந்து விடக் கூடாது.

**ஜீபா** — கரவெட்டி

**பெண்கள் அரசியலில் சாதிக்க ஆண்கள் வழிவிட வேண்டுமா?**

பெண்களின் அரசியல் வகிபங்கு கட்டாயம் தேவை. உள்ளூராட்சி சபை தேர்தல் புதிய நடைமுறையின் படி அது நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது.

உள்ளூராட்சி சபைகளில் இருந்து பெண் அரசியல்வாதிகள் உருவாக வேண்டும். அந்த நிலை மாகாணசபை, பாராளுமன்றம் என்கின்ற உயர்வுகள் உயர்ந்தால் நிச்சயம் மாற்றம் வரும். பெண்களுக்கான அங்கீகாரம் நிச்சயம் கிடைக்க வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை.




**அருண்** — தெல்லிப்பழை

**பங்களாதேஷத்துடனான கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் வெற்றி பற்றி?**

இந்தியாவின் வெற்றி என்பதை விட பங்களாதேஷின் தோல்வி பற்றி சொல்வது பொருத்தமுடையது.

விளையாட்டு என்பது நட்புறவுக்காவே தவிர அது பலப்பரீட்சை அல்ல. அது பங்களாதேஷ் அணிக்கு விளங்கவில்லை.

இலங்கையுடனான போட்டியில் மிகக் கேவலமாக நடந்து கொண்ட பங்களாதேஷ் அணிக்கு இந்திய அணியினூடாக கடவுள் பாடம் கற்பித்திருக்கிறார்.

வெற்றி பெறவேண்டும் என்பதற்கு உத்வேகம் தேவைதான். அந்த உத்வேகம் எல்லை கடந்து விடக் கூடாது.

இலங்கையை வீழ்த்திவிட்டு பங்களாதேஷ் அணி வீரர்கள் பாம்பு நடனமாடினர். இந்தியாவுடனான போட்டியில் பங்களாதேஷ் அணி வீழ்ந்ததும் மைதானத்தில் இருந்த அனைவரும் பாம்பு நடனம் ஆடியதனூடாக அவர்களின் செயற்பாட்டில் உள்ள வெறுப்பு தெரிகிறதல்லவா?

**குகதாஸ்** — அனலைதீவு

**சம்பந்தன் ஐயா சுய உரிமை பற்றி பேசுகிறாரே?**

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வீழ்ச்சி. அரசுடன் இணைந்து இருந்ததால்தான் மக்கள் மாற்றி யோசித்தார்கள் என்கிறார் இரா.சம்பந்தன் ஐயா. வன்னிப் போரில் கொத்துக் கொத்தாய் எங்கள் உறவுகள் கொல்லப்பட்டதற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்று கேட்பதை விட்டு விட்டு காலஅவகாசத்திற்கு தலை அசைத்து விட்டு இப்போது இது பற்றிப் பேசி என்ன பயன். அரசுடன் ஒட்டி இருப்பது மக்களுக்குப் பிடிக்கவில்லைத்தான். அதைவிட முக்கியமான விடயம் ஒன்று இருக்கிறது. மக்களுக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்? இது உங்களுக்கு நினைவில் வரவில்லையே ஐயா?

**சத்தியதேவன்** — யாழ்ப்பாணம்

**வாழ்க்கையில் ஜெயிக்க ஒரு தத்துவம்?**

ஓடு பாதை முடிந்து விட்டது என்று ஒருநாளும் விமானங்கள் நின்று விடுவதில்லை. அங்குதான் அவை பறக்கத் தொடங்குகிறது. சமூக வலைத்தளத்தில் பார்த்த அருமையான பதிவு. மனித வாழ்க்கைக்குத் தேவையான இப்படிப்பட்ட பதிவுகளைப் படிக்கும் போது மனதிற்கு சக்தி பிறப்பதை உணர முடிகிறது.

**அன்பன்** — யாழ்ப்பாணம்

**பெண்ணின் மனதில் இடம் பிடிப்பது எப்படி?**

அடப்பாவி! சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு மெடிக்கல் எடுப்பதற்கு காலை நான்கு மணிக்கு போய் இடம் பிடிச்சு டோக்கன் எடுத்து கால்கடுக்க நின்று ஒரு மாதிரி இரண்டு மூன்று மணிக்கு மெடிக்கலை கையில வாங்கிற கஷ்டம் தெரியுமா? தம்பி பெண்ணின் மனதில் இடம் பிடிக்குமுன்னம் அவள் வீட்டில் கொஞ்சமேனும் இடம் பிடிக்கப் பாருடா. அது தான் யூஸ் ஆகும் ஓகே.

**சயன்** — யாழ்ப்பாணம்

**அரசியல் கைதி ஆனந்தசுதாகரனுக்கு விடுதலை கிடைக்குமா?**

தந்தை சிறைக்கு செல்ல, தாயின் அரவணைப்பில் இருந்த இரண்டு குழந்தைகளுக்கும் தாயை இழந்து தவிக்க, மனைவியின் இறுதிச் சடங்கிற்கு வெறும் மூன்று மணித்தியால அனுமதி வழங்கப்படுகிறது. உறவுகளுடன் கூடி கட்டிப் புரண்டு நாள் முழுவதும் அழுதாலே தீராத சோகத்தை மூன்று மணித்தியாலத்தில் எப்படி கொட்டிவிட முடியும். தந்தை சிறை செல்கிறார் தனையன் தாய்க்கு சிதை மூட்டுகிறான். தாயை இழந்த அந்த பெண் குழந்தை தந்தையுடன் செல்ல அடம் பிடித்து சிறைச்சாலை வாகனத்தில் ஏறுகிறாள். ஐயகோ ஆட்சியாளர்களே உங்களுக்கு மனச்சாட்சி என்பதே இல்லையோ? இல்லை உங்களுக்கு ஒரு நீதி, எங்களுக்கு ஒரு நீதியோ?

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## பிஞ்சுகள் என்ன பாவம் செய்தன?

இடது புறத்தில் தான் மனித
இதயங்கள் இருந்ததா அன்றி
இடம் தடுமாறித்தான் வீழ்ந்ததா?
திடமிழந்த நெஞ்சின் பதற்றமா
செய்தி திணறிட வைத்த கொடுமையா?

நண்பன் என்னும் பெயரில்
நயவஞ்சகம் இனும் வாழுதா
எண்ணமே எழவில்லையா
கண்ணியமான தலைவனே! நின்
கடுகிய வழியது சரியதா

அன்னையிடம் தானே
அன்பெனும் ஊற்றே
ஆட்கொளும் அது தவறி
ஆழப்புதைத்தது அன்னையின்
அந்தஸ்தை ஏன் அம்மா!
பிஞ்சுகள் என்ன பாவம்
செய்தன பெற்றோராய்
நுமைப் பெற்றதா தவறு அவை

கெஞ்சி இறை இடம்
வேண்டியே எத்தனை மிக
மிஞ்சிய மானுடா
பிள்ளை வரம் தேடி
போகினம் அந்த
பிஞ்சுகள் மூன்றையும்
தத்து கொடுத்திட ஏனோ
நினைக்கலை
தவறு இழைத்ததா நீதி தேவதை
தாழச் சரிந்ததா அதன் தராசமோ
தண்டனை யார்க்குரியது
தாங்கமுடியாத வேதனை
சொல்லில் அடக்க முடியுதா
சோகம் அத்துணை கொடியதாம்

*கொக்குவில் வாசகன்*




## கேட்காத குரல்கள்!

ஏழையின் வாழ்வில் எந்நாளும்
ஏனிந்த துன்பம் தானோ?
நாளைய வாழ்வும் இதுபோல்
கேட்காத குரலாய்
நலிவுடன் நகர்ந்து போகுமோ...
கல்வியால் உயரக்கூட
காசுதான் இல்லை- மனமே
இல்லாமை ஏழ்மைதானே- என்றும்
கேட்காத குரல்கள்
பஞ்சிலே சொகுசாய் தூங்கும்
பணமுள்ள மாந்தரே- ஏழை
நெஞ்சிலே உள்ள சோக நெருப்பினை
வந்து பாரும்- ஏழையின் வறுமை
அப்போதுதான் புரியும்- உமக்கு
இவையெல்லாம்- என்றுமே
கேட்காத குரல்கள்
தினமெமை வதைக்கும் ஏழ்மை
என்றுதான் தீருமென்று
வசதியாய் வாழும் நாளின்
வருகையை விழிகள் தேட...
வசமாகும் இன்ப வாழ்வின்
வரவுக்காய் இதயம் வாட- எந்நாளும்
இவைதானோ-என்றும்
கேட்காத குரல்கள்

*என்.எஸ். காயத்திரி*
*கொடிகாமம்*

## மலரோடு நான்

காலைக் கதிரவன்
கண்சிமிட்ட
பனித்துளிகள் பரிணமிக்க
ஓடும் மேகங்கள் உணர்வு கொள்ள
நிருமித்த மலர்கள் எல்லாம்
மொட்டவிழ்ந்து விரிந்ததுவே

என் கண்ணின் பார்வையில்
பட்டதோ மலர்கள்
பாடினேன் இரசித்தேன்
ஒன்றை எடுத்து நுகர்ந்தேன்
மனதையும் பறிகொடுத்தேன்

வண்ண வண்ண நிறத்தில்
வாரி அழைத்து பூக்களை
எட்டிப் பார்த்து நுகர்ந்தேன்
வண்டுகள் புரியும்
ரீங்காரம் வாரி அழைக்கும்
புதுக்கோலம்

றோஜா மலர்களின் எழில்கோலம்
மல்லிகை வீசும் மணக்கோலம்
இவையெல்லாம் என் இதயத்தில்
இயங்கும் வண்ணக்கோலம்
இவற்றோடு மலரோடு நானாவேன்

*பா.கலாநிதவி*
*யா/ சண்டிலிப்பாய் இ.க.*

## கல்லாய்ப் போன மனிதம்

அன்பே உன்னை
ஆண்டாண்டுகள்
பிரிந்து விடமாட்டேன்
என சத்தியம் செய்து
கைத்தலம் பற்றுகிறான் அவன்

அன்பின் அடையாளமாய்
அவதரித்த மழலைகளுடன்
இன்பமாய் செல்கிறது வாழ்க்கை

எங்கிருந்து வந்தது பேரிடி
ஐயகோ என் செய்வேன்
அவரைச் சிறையிலிட்டால்
பிள்ளைகளை எப்படிப் பார்த்திடுவேன்
கதறி அழுகிறாள் அவள்


வேண்டாத தெய்வமில்லை
போகாத கோவிலில்லை
கணவரின் விடுதலைக்காய்
மறுக்கப்பட்டது விடுதலை

ஊனுறக்கம் மறந்த அவள்
மூச்சிறைத்து வாழ்வு முடிகிறது
இரண்டு பிஞ்சுகளும் தவிக்க
மூன்றுமணி இடைவெளியில்
வந்து செல்கிறான் கணவன்

கணவன் சிறை செல்ல
மகன் தாய்க்கு சிதை வளர்க்கிறான்
மகள் தந்தையுடன் சிறை செல்ல
ஆயத்தமாகிறாள்

மனச்சாட்சி உள்ளவர்க்கு உறுத்தும்
மனமே இல்லையெனில்...?
இறைவா!
நீ கல்லாய் இருப்பதனாலோ
சிலரின் இதயங்களை
கல்லாய்ப் படைத்து விட்டாய்

*மாவை, நா. கஜேந்திரன்*



# மௌனத்தின் தேடல்– 392



## நீ அல்ல

வறண்ட பாலை நிலத்தில்
பால் மழை பொழிந்தால்
போல் உன் பூ முகத்தில்
புன்சிரிப்பு ஊற்றெடுக்க
காரணம் உன் பசியைப் போக்க
அன்னம் கிட்டியதாலா?
அன்னையவள் கரத்தில் உணவு
தரும் தருணத்தில் நடு
தெருவில் பிறரிடம்
கையேந்தி நிற்கக் காரணம்
நீ அல்ல உன் இரத்தம்
உன் இரத்தம்
என் இரத்தம் அல்லவா!

பா.அஜித்குமார்
வட்டக்கச்சி

## காட்டாதே...

தா... தா...
தாத்தா... தா...?
நான் தட்டிவிட்டால்
கொட்டிவிடும்
தாய், தந்தையிருந்தால்
நீ எதற்கு!!!
நித்தம் நீ காட்டிவிட்டு
நீயே உண்பதென்றால்
நீயே சாப்பிடு காட்டாதே
என்னை மட்டும்
விட்டுவிடு

மாவையூர் கவி
வடலியடைப்பு
பண்டத்தரிப்பு

## நல்குரவு

நான் சுவைத்தே
அறியாத உணவு
உன் தட்டின் மேல்
அதைத் தட்டிப் பறித்தோட
தவிக்கிறது மனது– இருந்தும்
தடுக்கிறது நம்பிக்கை

பா.பாதுசன்
யாழ்ப்பாணம்

## வேண்டாம் இந்த வாழ்க்கை

அன்று அம்மா தூரத்தினால்
சோற்றை ஊட்ட
இன்று நான் ஓடுகிறேன்
சோற்றைக் காப்பாற்ற
வேண்டாம் ஐயா
இந்த வாழ்க்கை

ச.நிலாந்தி
மட்டக்களப்பு

## புண்ணியம்

உலகில் ஆலயங்கள் ஆயிரம்
அமைப்பதைவிட பசியால் வருவோருக்கு
இப்படி நாம் உணவளிப்பதே
பெரும் புண்ணியமடா

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## பறந்து விடும்

பத்தும் பறந்தது
சோற்றைக் கண்டதும்
புன்னகை பிறந்தது
கையில் கிடைத்ததும்

அந்திரிலா
பாரதிலேன், மட்டக்களப்பு

## அன்புக்கரங்கள்

ஆசையோடு மிக்க
சந்தோசம் பொங்க
உணவுப் பாத்திரத்தை
சிரித்த முகத்தோடு
ஏந்திப் பெறப் போகிறான்
பசிதாங்காச் சிறுவன்
அன்போடுணவை
அள்ளிக் கொடுக்கும்
அன்புக் கரங்களை
வாழ்த்தி வணங்குவோம்
நீடூழி வாழ்க

துரை
தென்மட்டுவில்

## வழிகாட்டி

உயரத்திலிருந்து வந்து
துயரம் போக்க உதவும்
வான் மழை போன்று
தான தருமங்களுமுண்டு
பசிப்பிணியை எண்ணி
தனியொருவனுக்கு
உணவு இல்லையெனில்
உலகையே அழித்திடும்
மகாகவி பாரதியாரின்
தார்மீகக் கோபத்தை
தணிக்கும் செயற்பாடுகள்
இன்றியமையாததொன்று

க.நாகராசா
நுணாவில்

## படைத்தவன் மதிப்பை!

இறைவன் படைத்த
உணர்வுகள் பலவற்றில்
பசியும் ஒன்று! வலியும்
நோவும் கூட உண்டு!
பற்றும் பாசம் மட்டுமல்ல
கருணையுள்ளமும் கூட
காத்து அருளும் கடவுள்
போல் அவன் வைத்த
மேன்மையான உணர்வுகள்!
ஆனாலும் பற்றுப் பாசம்
இன்ப துன்பம் விருப்பு
வெறுப்பு இல்லாதவன் இறைவன்!
மனிதனே உனது கருணை
உள்ளம் தான் படைத்தவன்
மதிப்பை உயர்த்தும் உணர்வுகள்!

இ.ஜெ.பாலன்

# மௌனத்தின் தேடல் –393



**அன்பு வாசகர்களே!**

*உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை*

*ஆசிரியர்*
*'மௌனத்தின் தேடல்'*
*சங்குநாதம்*
*இல3,2ம் ஒழுங்கை,*
*பிறவுண்வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*எனும் முகவரிக்கு 28.03.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.*

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

*- ஆசிரியர் -*

சிறுகதை

மலரன்னை



# கடமையும் தாய்மையுணர்வும்

அந்தக் கிராமத்து வைத்தியசாலை வளாகத்தின் நுழைவாயில் பரபரப்பாகக் காணப்பட்டது. காலை நேரமாதலால் நோயாளர்கள், வைத்தியசாலைச் சிப்பந்திகள், தாதியர், மருத்துவர் எனப் பல தரப்பட்டோரும் வருகை தந்தவாறிருந்தனர். தனது ஈருளியைத் தரிப்பிடத்தில் நிறுத்திவிட்டு தனது கடமைக்குரிய பகுதியை நோக்கி விரைந்தாள்.

"பற்சிகிச்சைப் பிரிவு" என பெரிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருந்த அந்தக் கூடத்தினுள் நுழைந்தவள், நின்று நிதானமாக ஒரு தடவை பார்வையைச் சுழற்றினாள். அங்கு போடப்பட்டிருந்த நான்கு வாங்குகளும் நோயாளரினால் நிரம்பிக் கிடந்ததை அவதானித்தவள் சுறுசுறுப்பானாள். அறையத் திறந்து எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திவிட்டு வந்தவள், தனது இருக்கையில் அமர்ந்தவாறு பதிவேட்டினைத் திறந்தாள்.

" எல்லாரும் வந்த ஒழுங்கின்படி ஒவ்வொருத்தராய் வாங்கோ". கணீரென்று ஒலித்த அந்தக் குரல் அவளுடையதுதானா என ஒரு சந்தேகம் அங்கு வீற்றிருந்த நோயாளர்களுக்கு ஏற்பட்டது என்னவோ வாஸ்தவம் தான். அத்தனை சிறிய உருவம் அவளுடையது. அங்கு காத்திருந்தவர்கள் அனைவருக்கும் அவசரம். எல்லோரும் முண்டியடித்துக்கொண்டு வந்து வாசலை நிரப்பியவாறு நின்றனர். சந்திராவுக்கு அவர்களது செய்கை எரிச்சலை ஏற்படுத்தியது.

"உங்களுக்கு நான் தமிழிலைதானே சொன்னனான். விளங்கேல்லையோ. எல்லோரும் ஒரேயடியாய் வந்தால் நான் என்னெண்டு பதியிறது. ஒவ்வொருத்தராய் வந்தால் நான் பதியிறன். இல்லாட்டி டொக்டர் வரட்டுக்கும். பிறகு பதிவம்"இங்கிதம் தெரியாத நோயாளர்கள், அவளை மனதில் சபித்தவாறே ஒவ்வொருத்தராய் வந்து பெயர், வயது, முகவரி என பதிந்து போனார்கள். சரியாக ஒன்பது மணிக்கு பல் மருத்துவர் தனது பிரத்தியேக அறைக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு உறுதுணையாக செயற்பட்ட சந்திரா, வரிசைக் கிரமப்படி நோயாளர்களை பெயர் கூவி அழைத்தாள்.

"கதிரையில ஏறி இருங்கோ... இன்னும் கொஞ்சம் பின்னால போகவேணும்"

சந்திரா நோயாளரை ஒழுங்குபடுத்தி மருத்துவரின் பரிசோதனைக்கு ஏற்றவாறு தயார்படுத்தினாள். மருத்துவரும் பற்களைப் பரிசோதித்து நிலைமைக்கேற்றவாறு பிடுங்க வேண்டிய பல்லாக இருப்பின் சிறிது நேரம் காத்திருக்குமாறும் அல்லது மருந்து எடுக்கவேண்டியிருப்பின் சிட்டையை எழுதிக் கொடுத்தும் தனது கடமையைக் கவனிப்பதில் ஈடுபட்டார். சந்திராவும் கடமையே கண்ணெனச் சுழன்று கொண்டிருந்தாள்.

டாக்டர் நோயாளியின் பிரச்சினைகளை விசாரிப்பதோடு சரி... வேறு தேவைகளுக்கு வாய் திறக்க வேண்டிய அவசியமே இல்லாதவாறு சந்திரா தனது முழு ஒத்துழைப்பையும் அவருக்கு வழங்கிக் கொண்டிருந்தாள்.

பல் பிடுங்கவேண்டிய அவசியமுள்ள நோயாளிகளை வந்த ஒழுங்கிற்கமைய பெயர் சொல்லி அழைத்து , பிரத்தியேக ஆசனத்தில் சீராக அமரச் செய்து விட்டு அவள் நிமிர டாக்டர் விறைப்பு ஊசி ஏற்று வதற்கு தயாராக இருந்தார்.

"போய்க் கொஞ்ச நேரம் வெளியில இருக்கிற வாங்கிலை இருங்கோ" உத்தரவிட்டவள் அடுத்த நோயாளியை பெயர் சொல்லி அழைத்தாள். இவ்வாறாக தனது கடமையுடன் ஒன்றிப் போயிருந்தவளை அனுமதியின்றி உள்ளே நுழைந்த பெண்ணின் குரல் அழைத்தது.

" அக்கா...!"

பார்ப்பதற்கு வாட்டசாட்டமான ஒரு இளம் பெண் அங்கு நின்றிருந்தாள். தனது கடமை குழம்பியதால் சீற்றம் ஏற்பட அவள் மீது சீறி விழுந்தாள் சந்திரா.

"என்ன அவ்வளவு அவசரமோ. இஞ்சை நேரத்துக்கு வரவேணுமெண்டு தெரியாதோ. இப்ப சிகிச்சை நடந்து கொண்டிருக்குது. வந்த ஒழுங்கின்படி கூப்பிடுவன் வெளியில இருங்கோ"படபடவென்று பொரிந்து தள்ளிவிட்டு தனது கடமையில் மூழ்கிப் போய்விட்டாள். அன்றைக்கென நிறையப்பேர் பற் சிகிச்சைக்கு வந்திருந்தார்கள். பல் பிடுங்கியவர்களுக்கான மருந்துச் சிட்டையை டாக்டர் எழுதிக் கொடுக்க அதை உரியவரிடம் சேர்ப்பிப்பதற்காக அறையை விட்டு வெளியே வந்தாள்.

விறைப்பதற்காக ஊசி ஏற்றப்பட்டிருந்த ஒருவர் அருகிலுள்ள கானுக்குள் எச்சிலைத் துப்பிக் கொண்டிருப்பதைக்கண்டுவிட்டாள்.



" கண்ட இடத்திலையும் துப்பக் டாது என்றெல்லே நான் சொல்லியிருக்கிறன். துப்புற தெண்டால் உள்ளுக்குள்ள இருக்கிற வாளியிலை துப்ப வேணும் உங்களுக்கென்ன கண்ட இட த்திலையும் துப்பி விட்டுப் போயிடுவியள். நானெல்லோ பதில் சொல்ல வேணும்" கண்டனத்துடன் சொல்லி விட்டுத் திரும்பியவள் முன்னர் உள்ளே வந்து எட்டிப் பார் த்த அந்த இளம் பெண்ணை அடையாயம் கண்டு கொண்டாள்.

"ஆஸ்பத்திரி எட்டு மணிக்கு திறக்கிற தெண்டு உங்களுக்குத் தெரியாதே. வடிவாய் ஆற அமர வெளிக் கிட்டு பத்தரை மணிக்கு வந்திருக்கிறியள். அதுக்குள்ள அவசரம் வேற"

"இல்லையக்கா பஸ் கிடைக்கேல்ல. வீட்டில கைக்குழந்தையை விட்டிட்டு வந்தனான். பிள்ளைக்குத் தாய்ப்பால் தான் குடுக்கிறது. குழந்தை பசியில அழப்போகுது. அதுதான்.... என்று இழுத்தாள். அவளது கதையைக் கேட்டதும் பெட்டிப் பாம்பாக அடங்கிப் போனாள் சந்திரா. "எத்தினை மாதப் பிள்ளை" என்று அவள் சாந்தமாகக் கேட்டதும் அந்த இளம்பெண் ஆச்சரியத்துக்குள்ளானாள்." மூன்று மாதம் இன்னும் முடியவில்லை. எனக்கு ஒரே பல்லுக்கொதி. தாங்க முடியாமல்தான் வெளிக்கிட்டு வந்தனான்"

" ஏன் மனுசனைக் கூட்டி வந்திருக்கலாமே"

"அவர் கூலி வேலைக்குத்தான் போறவர். அவர் அன்றாடம் கொண்டு வாறதிலைதான் நாங்கள் அஞ்சு பேர் சீவிக்கிறம். அதோடை... டெங்குப் பிரச்சினையால அவரை வீட்டில நிக்க சனம் விடாதாம். வளவு துப்பரவாக்க வாவெண்டு ஒரே கரைச்சல்"

அவளது கதையைக் கேட்டதும் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டாள் சந்திரா: அவள் தனது வளவை சுத்தம் செய்ய முடியாமல் படும் அவலம் நினைவுக்கு வந்ததுதான் காரணம். அவளும் கணவனும் வேலைக்குப் போய் வருவதால் வீட்டில் நிற்கும் நேரம் அரிதாய் இருந்தது. வீட்டில் இருக்கும் நேரங்களில் அவள் பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டியிருப்பதால் ஞாயிற்றுக்கிழமைகளில்தான் அவர்கள் வளவைக் கூட்டிப் பெருக்கி எரிப்பார்கள். வளவு முழுவதும் பலன் தரும் மரங்கள் நிறைந்திருந்ததால் செத்தைகள் நிலத்தில் பரவிக் கிடக்கும். அவளது சுற்றாடலிலும் வேலைக்கு ஆள்தேடு வது சிரமம்தான்.

விறைப்பு ஊசி ஏற்றியவர்களுக்கெல்லாம் பல் பிடுங்கி முடிந்ததும் சந்திரா டாக்டரிடம் மெதுவாகச் சொன்னாள். நேரமும் பன்னிரெண்டை எட்டிக் கொண்டிருந்தது.

" டொக்டர் ஒரு பேஷன்ட் கைக்குழந்தையை வீட்டில விட்டிட்டு வந்திருக்கிறாவாம். அவவை ஒருக்கா பாத்துவிடலாமே"சிறிது முகச் சுழிப்புடன் டாக்டர் "பேஷன்டை வரச்சொல் லுங்கோ" என்று சொன்னதும் சந்திராவின் முகம் மலர்ந்தது. அவசரமாக நோயாளியை அழைத்து பெயர், வயது, முகவரியைப் பதிந்துவிட்டு அவளை டாக்டரின் முன் நிறுத்தினாள்.

" என்ன பிரச்சினை சொல்லுங்கோ"

" டொக்டர் முழுப் பல்லும் ஒரே கொதியாய் இருக்குது. முகமெல்லாம் விண்விண் என்று தெறிக்குது. வாய்க்குள்ள சாப்பாடு வைக்க முடியவில்லை. எல்லாப் பல்லும் கூடாது. இதனால பெரிய அவதிப்படுறன்.

சந்திரா, அவளைக் கதிரையில் இருத்தி டாக்டர் பரிசோதிப்பதற்கு ஏதுவாக ஒழுங்குபடுத்தவும் பரிசோதித்த டாக்டர் சொன்னார்.

"பற்களில ஒரு பிரச்சினையும் இல்லை. உடம்பில கல்சியச் சத்துக்குறைபாடுதான் காரணம். தினமும் பால் குடிக்கவேணும். சத்தான உணவு சாப்பிட வேணும். குழந்தைக்குப் பால் கொடுப்பதென்றால் தாய்மார்தான் உடம்பைக் கவனிக்கவேண்டும். என்ன... நான் சொல்லுறது விளங்குதோ?"

"சரி டொக்டர்"

" நான் எழுதித் தாற மருந்துகளை ஒழுங்காகப் போடவேணும். போடாமல் விட்டால் உப்பிடித்தான் பல்லுக்கொதியில அவதிப்படவேண்டி வரும்"அந்தப் பெண் தலையை மட்டும் ஆட்டினாள்." தலையை மட்டும் ஆட்டினால் காணாது. ஐயா சொன்னமாதிரி மருந்துகளை நேரந் தவறாமல்போடவேணும்"

கரிசனையுடன் கண்டித்ததுடன் விடாமல் சந்திரா அவளுக்கு மருந்து எடுக்கும் இடத்தையும் காட்டி விட்டாள்." தாங்ஸ் அக்கா"

அந்தப் பெண் கைகூப்பி அவளுக்கு நன்றி தெரிவித்து விட்டுப் போனாள். அவள் போவதையே சிறிது நேரம் நின்று பார்த்தவளுக்கு மார்பு கனத்தது.

"ஐயோ பிள்ளைக்குப் பசிக்கப் போகுது. இந்தப் பேஷன்ற்றோட மினக்கட்டதால நேரம் போயிட்டுது.


துடிப்புடன் அவள் அறைக்குள் நுழையவும் டாக்டர் மதிய இடைவேளைக்கு வெளியில் புறப்பட்டுப் போகவும் சரியாக இருந்தது. அவசரமாக அவள் அறையைப் பூட்டிக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டாள். வீட்டு வாசலில் அவள் ஈருளியை விட்டு இறங்கவும் அம்மாவின் அர்ச்சனை வார்த்தைகள் அவளை வரவேற்றன.

"இவ்வளவு நேரம் கழிச்சு வாறாய். பிள்ளை என்னடா எண்டால் பசியால அழுது களைச்சுப் போய் தூங்குது. நானும் பிள்ளையைத் தாக்காட்ட பட்டபாடு. அது கடவுளுக்குத்தான் தெரியும்"

மளமளவென்று சீருடையை மாற்றிக்கொண்டு கால்முகம் கழுவிவிட்டு பிள்ளையிடம் வந்தாள். அது வலது கை பெருவிரலை சூப்பியவூாறு பசி மயக்கத்தில் கிறங்கிப் போய்க் கிடந்தது.

# பிறனில் விழையாமை எனும் சோரம் போதல்

## (குறளும் சட்டமும்)



என்றும் பொய்யாமொழியாகிய திருக்குறளிலே ஒழுக்கமுடைமை என்கின்ற அதிகாரத்தை அடுத்து பிறனில் விழையாமை என்கிற் அதிகாரம் வைக்கப் பட்டுள்ளது. அதாவது காம மயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமை, இஃது ஒழுக்கம் உடையார் மாட்டே நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டுள்ளது என்பார்கள்.

தமிழர்களின் சட்டநூல் திருக்குறள் என்ற வகையில் ஒரு மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என்றும் இன்னபடி வாழலாகாது என்றும் இடித்துரைக்கத் தலைப்படுகிறது. இதுபோலவே சட்டங்களும் உள்நாட்டு பன்னாட்டுச் சட்டங்களும் மனிதனின் கடப்பாடுகளையும் அவன் அதை மீறும் போது கிடைக்கின்ற தண்டனை களையும் கூறி அல்லது வழங்கி மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்கின்றது.

அந்த வகையில் குறளின் பார்வையும் சட்டத்தின் பார்வையும் ஒன்றா? அல் லது ஏதேனும் வேறுபாடு கள் உண்டா? திருக் குறள் வெறுமனே ஒரு இலட் சிய வாழ்க்கையின் எழுத் துக் கோர்க்கைகள்தானா? அல்லது திருக்குறள் கூறும் வாழ்வி யலை அடைய முற்படுவ தற்கு சட்டங்கள் தான் உத வுகின் றனவா? அல் லது திருக்குறள்படி வாழ்பவன் சட்டத்தின் பிரகாரம் வாழ் பவனாக கருதப்படமுடி யுமா? என்ற வாதங்களை அடிப்ப டையாகக் கொண்டு இக்கட டுரையை அல்லது எனது கருத்தைத் தெரிவிக்க முற்ப டுகின்றேன்.

பிறனில் விழையாமை என்கின்ற கருத்தை வள் ளுவனார் எவ்வாறு வகைப் படுத்த முற்படுகின்றார் என்றால்,

" பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனென்றோ ஆன்றவொழுக்கு"

அஃதாவது சால்புடையோருக்கு நிரம்பிய ஒழுக்கம் எதுவென்றால் பிறர்மனையாளை நோக்காப் பண்பேயாம் என்று கூறி நிற்கிறார். அத்துடன் அதுவே பெரிய ஆண் தகைமை என்றும் கூறி நிற்கின்றார்.

சரி சட்டம் இதனை எவ்வாறு பார்க்கின்றது என்று எடுத்து நோக்கின் திருமணமொன்று வலிதாக இருக்கி ன்ற காலத்தில் கணவன் அல்லது மனைவி பிற நபர் அதாவது மூன்றாம் நபருடன் கொள்கின்ற தகாத பாலியல் ரீதியான உறவே "சோரம்போதல்" என்று கொள்ளப்படுகிறது.

இது இலங்கையைப் பொறுத்தமட்டில் தண்டனைக் குரிய குற்றச்செயல் அல்ல. ஆனால் 1907 ஆம் ஆண்டு திருமணப் பதிவுச் சட்டத்தின் பிரிவு 19 (1) படியும் குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 485 இன் படியும் விவாகரத்தைப் பெறுவதற்கான ஒரு காரணியாக மாத்திரமே காணப்படுகின்றது.

இங்கே நாம் கொள்ளவேண்டிய விடயம் என்னவெ னில் திருக்குறள் பிறனில் விழையாமை என்றால் என்ன என்று குறிப்பிடுகின்றபோது திருமணமாகிய ஒரு பெண் மீது இன்னொரு ஆடவர் அதாவது அவர் திருமணம் செய்தவராக அல்லது திருமணம் செய்யாத ஒரு ஆடவர் கொள்கின்ற தகாத காமமயக்கம் என்று வரையறுக்கிறது. ஆனால் சட்டத்தில் சோரம் போதல் என்பது திருமண பந்தத்தில் இணைந்த கணவன் அல்லது மனைவி மூன்றாம் நபர் அதாவது "கணவன்" தன் மனைவி அல்லாத வேறொரு பெண்ணுடனோ அல்லது "மனைவி" தன் கணவன் அல்லாத வேறொரு ஆணுடனோ கொள்கின்ற தகாத உறவே சோரம் போதல் என்று வரையறுக்கின்றது. திருக்குறள் பிறனில்விழையாமையை தனித்து ஆடவருடன் மட்டுப்படுத்தி விடுகின்றது. ஆனால் சட்டமோ ஒழுக்க த்தை ஆண், பெண் ஆகியோரின் கடப்பாடாகவே காட்டு கின்றது. வேண்டுமென்றால் சோரம்போதலின் ஒரு வகையா கவே பிறனில் விழையாமையை நாம் கொள்ள முடியும்.

பிறனில் விழைந்தவனது இழிவினை எடுத்தியம்பு வதற்காக வள்ளுவனார்,

" பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்" (141)

அஃதாவது இஞ்ஞாலத்தின் கண்ணுள்ள அறநூலை யும் பொருள் நூலையும் ஆராய்ந்தறிந்த ஞானமுடைய வர்கள் பிறனுக்கு உரிய பொருளாகிய தன்மையுடைய அஃதாவது பிறருடைய மனைவியைக் காதலித்து ஒழுகுகின்ற அறியாமையைச் செய்யவேமாட்டார்கள் என்று கூறுகின்றார். இதன்மூலம் அறிவுடையவர் என்றும் இழிவான செயலைச் செய்யமாட்டார்கள் என்று இடித்துரைக்கின்றார்.

மேலும் குறிப்பிடுகின்ற போது காமம் காரணமாகப் பாவத்தின் கண் போய் அழிந்த எல்லோரினுள்ளும் மிக மிக இழிவான பேதமையுடையவர்கள் யாரென்றால் "பிறன் கடை நின்றாரிற் பேதையாரில்" என்று கூறுவதன் மூலம் பிறனில் விழைதலின் இழிவினைக் கூறி நிற்கிறார்.

இதைவிட இன்னும் உச்சமாகக் கூறுகின்ற போது கணவனை நம்பி ஒழுகுகின்ற இல்லாளின் இடத்தே பாவம் செய்தலை விரும்பிச் செய்பவர் உயிருடன் இருந்தாலும் இறந்த உடலுக்குச் சமம் என்று கூறுவதன் மூலம் தன்னை நம்புகின்ற மனைவிக்கு நம்பிக்கைத் துரோ கம் பண்ணலாகாது என்று மிக மிக ஆணித்தரமாக, அப்படிச் செய்பவன் சவத்துக்கு சமானம் என்கின்றார். இதனையே,

" விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகுவார்" (143)

என்ற குறள்மூலம் குறிப்பிடுகின்றார்.

இலங்கையிலே சோரம் போதல் என்பது குற்றமற்ற ஒன்று. ஆனால் இந்தியாவில் இந்திய தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 497 சோரம் போதலை ஒரு தண்டனைக்குரிய சட்டமாகக் கருதுகின்றது. அப்படியென் றால் சோரம் போதலைக் குற்றமாகக் கருதாத நாடுகள் தவறான ஒரு செய்கையை ஆதரிக்கின்றன என்ற பொருள் அல்ல.

எந்தவொரு குற்றத்தையும் செய்யாமலிருப்பதற்கு தனிமனித ஒழுக்கம் என்பது அவசியப்படுத்தப்படு கின்றது. அப்படிப்பட்ட தனிமனித ஒழுக்கத்தை வழங்கு வதில் திருக்குறள் போன்ற அறநூல்கள் அளப்பெ ரும் பங்கு வகிக்கின்றன. தனிமனித ஒழுக்கத்தின் அவசிய த்தைக் குறிப்பிடுகின்றபோது,

"எனைத் துணையர் ஆயினும் என்னாம் தினைத் துணையும்
தேரான் பிறனில் புகல்" (144)

அஃதாவது ஒருவன் என்னதான் பெருமையுடையவ னானாலும் ஒரு தினையளவில் பிறர்மனைவி மீது கொள்கின்ற காம மயக்கம் அவன் பெருமை யாவற்றை யும் நிலைகுலையச் செய்து விடும் என்று குறிப்பிடுகின் றார். அறநூல்கள் மனிதர்களுக்கு தர்மத்தை எடுத்துரைக் கத் தலைப்பட சட்ட நூல்களோ அவர்கள் சட்டத்தை மீறுவதால் கிடைக்கப்போகின்ற தண்டனைகளை வரிசைப் படுத்திக் கூறுவதன் மூலம் ஒரு வகையில் தர்மத்தை நிலைநாட்டப் பாடுபடுகின்றது என்றே கூறவேண்டும்.

இந்திய தண்டனைச் சட்டக் கோவையில் சோரம் போதலுக்கு உரிய தண்டனைகளாக ஐந்து வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனையும் அல்லது தண்டப்பண மும் அல்லது சிறைத்தண்டனையும் தண்டப்பணமும் என்று காணப்படுகின்றது. ஆனால் வள்ளுவமோ,

"எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி" (145)

என அஃதாவது பின் விளைவுகளை எண்ணாது இப்போது எளிதாகக் கிடைக்கின்றதே என எண்ணிக் கொண்டு பிறர் மனையாள் மீது கொள்ளும் இச்சை என்றும் அழிக்கமாட்டாத குடிப்பழியினை கொண்டு வந்து சேர்க்கும் என்று கூறுகின்றார்.

சட்டமானது சோரம் போதலை வரையறை செய்கின்ற போது திருமணமொன்று வலிதாக இருக்கின்ற ஏக காலத்தில் நிகழும் தவறான பாலியல் தொடர்பு என்றும் இஃது திருமணத்தின் முன்னர் ஒருவர் இன்னொருவருடன் கொண்டிருந்த பாலியல் ரீதியான தவறான உறவுகளை உள்ளடக்கமாட்டாது என்று கூறுகின்றது. ஆனால் வள்ளுவமோ ஒருமுறை சிறியளவு தினையளவு தவறிழைப் பின் அது தவறு தவறே என விளம்பி நிற்கின்றது.

உலகின் பல நாடுகள் உதாரணமாக ஆசியாவின் சில பகுதிகளிலும் ஈரான், சோமாலியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் சோரம் போதல் என்பது தண்டனைக்குரிய குற்றமாக விளங்குவது போல வள்ளுவனாரும் பிறர் மனை விரும்புபவன் ஒருவனிடத்தே பகை, பாவம், அச்சம், பழியென நான்கும் எந்தக் காலத்திலும் நீங்கிச் செல்லமாட் டாது என்று பிறனில் விழைபவனுக்கு கிடைக்கும் தண்டனைகளாகக் காட்ட முயல்கின்றார். இதனையே,

" பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்" (146)

என்ற பாட்டானும் குறிப்பிடுகின்றார்.

மேலும் குறிப்பிடும் போது பிறரது உரிமையாகிய பிறரது மனைவி மீது அறம் தெரிந்த ஒருவன் காமுறமாட் டான் என்றும் கூறி நிற்கின்றார்.

இதை விட இந்த உலகத்தில் உள்ள நன்மைகளை எய்துவதற்குரிய உரி மையு டையவர்யாரெ ன்றால் பிறரொருவ னுக்கு உரியவளது தோளைச் சேராத ஒரு வனே என்று குறிப்பிடு வதன் மூலம் பிற னில் விழையாமை இருந்தால்எவ்வ ளவு மகிழ்ச்சியாக வாழ முடியும்என்று வினவு வதனூடாக மகிழ்ச்சி யாக வாழ விரும்பின் தயவு செய்து வேற்று மனையாளை நினை யாதே என்று கூறி நிற்கின்றார். த னது நிறைவுக் குறளிலே

" அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று" (150)

ஒருவன் வேறு எந்த அறத்தையும் பின்பற்றாதவ னாய் இருப்பினும் பிறர் மனைவியை காமுறாத இயல்பு டையவனானால் அவனை ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும் என்கிறார். இதனால்தான் என்னவோ கம்பரும்

" வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க்கு ஏற்ப
நயம்பட உணர்த்த நாவும்
தாரணி மௌலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்"

கொண்டவனும் இராவணன் மேலது நீறு என்று பதிகங்களில் இடம்பெற்றவனும் இறைவனுக்குத் தன்னை ஒறுத்து சாமகானம் பாடிய அத்துணை திறமை பொருந் திய சொல்லிலடங்கா பெருமை கொண்ட இராவணனை ஒரே அடியில் விழுத்தியது பிறர் மனை நோக்கிய பாவம் அல்லவா?

சரி, எது எவ்வாறிருப்பினும் பிறனில் விழையாமையை ஆண்களுக்கு மட்டும் கட்டுப்பாடாக்கியது சரியா? என்கின்ற வினாவை மேலும் அணி செய்வதைப் போலவே சோரம் போதலைக் குற்றமாகக் கருதும் நாடுகளில் ஆண்களுக்கு மட்டுமே தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்கின்றபோது, உதாரணமாக இந்தியாவிலும் கூட பெண்கள் தண்டனைக்குட்படுவ தில்லை.

ஆனால் தர்மீக அடிப்படையில் சிந்திக்கின்ற போது சோரம் போதல் செய்த ஆண் தண்டிக்கப்படும்போது பெண் ணும்தானே தண்டிக்கப்பட வேண்டும்? ஆனால் ஆண், பெண் சமத்துவம், பெண்ணியம் என்ற வாதங்க ளைத் தாண்டியும் பெண் தண்டிக்கப்படாமைக்கான காரணமாக,

"ஆண்கள் தாமாகவே தவறாக உறவு கொள்கிறார்கள் என்றும் பெண்கள் ஆண்களால் தூண்டப்பட்டே உறவு நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அதனால் பெண்கள் அப்பாவிகள், ஆண்களே குற்றவாளிகள் என்ற கருத்து நிலவி வருகின்றது. ஆனால் இந்தப் பிரிவு 487 இன் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சட்டத்தைத் திருத்தி ஆண், பெண் இருபாலாருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்கின்ற சிந்தனை ஓட்டத்திற்கு இன்று இந்தியா சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

அம்பிகை பஞ்சலிங்கம்
சட்டத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# சர்வதேச பொறிமுறை ஒன்றே வேண்டும்!

## ஐ.நா.வில் ஒலித்த குரல்கள்



காணாமல் ஆக்கப்பட்டோரின் நீதிக்கான காத்திருப்பு நீண்டு கொண்டே செல்கின்றது. தங்கள் பிள்ளைகளுக்கு உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலே ஒரு வருடத்தில் 8 பேர் உயிரிழந்து விட்டனர். போராடுகின்ற ஏனையவர்களும் நோயாளிகளாகவே உள்ளார்கள். காணாமல் ஆக்கப்படுதல் என்பது தற்செயலாக நடைபெறவில்லை. தொடர்ந்து ஆட்சியில் இருந்து வருகின்ற சிங்கள பேரினவாத அரசுகளால் கட்டமைக்கப்பட்ட முறையிலேயே இவை இடம்பெற்றுள்ளன. தற்போதும் இந்த கடத்தல்கள், சித்திரவதைகள் நடைபெறுவதாக ஆதாரங்கள் வெளி வந்து கொண்டு தான் இருக்கின்றன. இவற்றுக்கு நியாயமான தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற இதய சுத்தியுடன் நாட்டை ஆண்ட எந்த அரசுகளும் செயற்பட்டதாக தெரியவில்லை. மைத்திரி அரசும் இதற்கு விதிவிலக்கல்ல.

இலங்கை அரசிடம் நீதி கேட்டு சலித்து விட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார்கள் சர்வதேசத்தின் முன்னே சென்று நீதி கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். இதன் தொடர்ச்சி தான் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் 37 வது அமர்வுக்கு சென்று நேரடியாகவே இந்த உலகிடம் நீதியை கேட்டுள்ளார்கள். இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை என்றால் அது வடக்கையும் கிழக்கையும் தான் பெரும்பாலும் சுட்டி நிற்கும். தென்னிலங்கையில் காணாமல் ஆக்கப்படுதல் நடைபெற்ற போதிலும் மிக சொற்ப அளவிலேயே நடைபெற்றிருந்தன. இலங்கை அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராக தமிழ் இளைஞர்,யுவதிகள் ஆயுதம் ஏந்தி போராடினார்கள். இந்த போராட்டம் தமிழ் மக்கள் வரலாற்றில் பல மாற்றங்களை, முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ள போதிலும் மறந்து விட முடியா வலிகளையும் தந்துவிட மறக்கவில்லை.

தமிழ் பேசுபவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக வயது வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றி, வகை தொகையின்றி இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டார்கள். வெள்ளை வான் கொண்டு விசாரணை என்று அழைக்கப்பட்டு, நலன்புரி முகாம்களில் வைத்தும், பாடசாலை செல்லும் போதும் என எல்லா நிலைகளிலும் வைத்து கடத்தப்பட்டார்கள். இதே போன்று இறுதி போர்க்களத்தில் சரணடைந்தவர்களையும் காணவில்லை. இவர்களை கடத்தியவர்களை யாரென்று அனைவருக்கும் தெரியும், ஆனால் இந்த நாடு சிங்கள பௌத்த பேரினவாதிகள் ஆளும் நாடு என்பதால் நீதி வழங்க பின்னிற்கின்றது. மாறாக தமிழ் மக்களை கொன்று குவித்த, வெள்ளை வான் கொண்டு கடத்திய குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கி அழகு பார்க்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் என்ற விடயமும் அவ்வாறு தான் மாற்றமின்றி அணுகப்படுகின்றது. சில வடிவங்களை அல்லது பெயர்களை மாற்றி அவர்கள் தாங்கள் செயற்றிட்டங்களை முன்னெடுத்து செல்கின்றார்கள். ஆரம்பத்தில் காணாமல் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு உட்பட பல ஆணைக்குழுக்களை அரசு நியமித்து விசாரணை செய்தது. இந்த விசாரணை குழுக்கள் நீதியை தந்துவிடும் போன்றதொரு தோற்றப்பாட்டினை ஏற்படுத்தியிருந்தது. எனினும் இதனை உணர்வதற்கு இரண்டு வருடங்கள் எடுத்திருந்தன. இந்த தொடர் ஏமாற்றம் தான் காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார்கள் அல்லது உறவினர்கள் வைத்திருந்த அற்ப சொற்ப அளவு நம்பிக்கையையும் இலங்கை அரசு இழந்திருந்தது.

இந்த நம்பிக்கையீனம் அவர்களை போராடத் தூண்டியது. சர்வதேச மனித வுரிமை தினம், மகளிர் தினம், எனப்பல பிரசித்தி பெற்ற தினங்களில் தங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற கோரிக்கையுடன் போராட்டங்களை முன்னெடுக்க ஆரம்பித்தார்கள். எனினும் இலங்கை அரசு அவற்றை கண்டு கொள்ளாமலே யுத்த வெற்றி வீரர்களை கொண்டாடி கொண்டிருந்தது. பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மற்றும் சில அமைச்சரவை அந்தஸ்து அமைச்சர்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் என யாரும் எங்களிடம் இல்லை. அவர்கள் சில வேளை வெளிநாடு சென்றிருக்கலாம் என மோசமான கருத்துக்களையும் வெளியிட்டு வந்தனர். இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பேசுவதற்காக யாரும் இல்லை என்பதால் பாதிக்கப்பட்ட தரப்பே தங்கள் நீதிக்காக போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கடந்த 2017 ஆம் ஆண்டு பெப்வரவரி மாதம் 20 ஆம் திகதியன்று கிளிநொச்சி கந்தசாமி ஆலயம் முன்பாக தொடர் போராட்டத்தில் குதித்தனர்.

இந்த போராட்டத்தை தொடர்ந்து வவுனியாவிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார்கள் போராட்டத்தில் குதித்தார்கள், தொடர்ந்து முல்லைத்தீவு, திருகோணமலை, மருதங்கேணி என போராட்டம் பரவலடைந்தது. இந்த போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் வழமை போன்று இலங்கை அரசிடம் நீதியை கோரவில்லை. சர்வதேசத்திடம் நீதியை கோரினார்கள். வீதியின் கரைகளில் கொட்டகைகள் அமைத்து பிள்ளைகளின் புகைப்படங்களை தொங்க விட்டு அதற்கு கீழே இருந்து கொண்டு போராடினார்கள். அவர்களது பிள்ளைகளில் சிலர் தாய் நாட்டுக்காக அன்று போராடினார்கள், இன்று அவர்களை தேடி அவர்கள் தாய்மார்கள் போராடுகின்றார்கள். வெயில், மழை என அனைத்து கடினமான கால நிலைகளையும் பொருட்படுத்தாது போராடினார்கள்.

இந்த போராட்டத்தின் போது புலனாய்வு பிரிவினரின் அச்சுறுத்தல், உடல் சுகவீனம், பொருளாதார கஷ்டம், வீட்டு சூழ்நிலைகள், பெண்ணொருவருக்கு இந்த சமூகத்தில் இருக்கும் அனைத்து பிரச்சினைகளையும் தாண்டி அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக போராடினார்கள். இந்த போராட்டம் ஒரு மாதத்தை கடந்து செல்ல சர்வதேசமும், தூதரகங்களும் இந்த போராட்டங்களை கண்டு கொள்ள ஆரம்பித்தன. கூடவே இலங்கை அரசும் கரிசனை கொள்வது போன்று காட்டிக் கொண்டு தமது காய்நகர்த்தல்களை ஆரம்பித்தது. போராட்டம் இலங்கை அரசுக்கு கடும் அழுத்தங்களை கொடுக்க ஆரம்பித்தது. இந்த நிலையில் தான் கிளிநொச்சியில் ஆரம்பித்த போராட்டம் 100 வது நாளை எட்டிய போது கடந்த ஜூன் 8 ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்களின் எட்டு மாவட்ட தலைவிகளையும் சந்திப்பதற்கு ஜனாதிபதி மைத்திரி இணங்கினார்.

இந்த சந்திப்பின் போது இறுதிப்போரில் சரணடைந்த யாரெல்லாம் தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது பற்றிய பெயர்ப்பட்டியல், யாரெல்லாம் இரகசிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களோ அவர்கள் பற்றிய பெயர்ப்பட்டியல், அடுத்து பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் 'பெயர்ப்பட்டியல், இந்த மூன்று பெயர்ப்பட்டியலையும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எட்டு மாவட்ட தலைவிகளும் கோரியிருந்தார்கள். அதற்கு ஜனாதிபதி மைத்திரியும் இணங்கியிருந்தார். இந்த செய்திகள் ஊடகங்கள் அனைத்திலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பிரசுரமாகியிருந்தன.

ஆனால் வாக்குறுதி கொடுத்தது போன்று ஜனாதிபதி மைத்திரி பெயர்ப்பட்டியலை வெளியிடவில்லை, பின்னர் ஒக்டோபர் 15 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பின் போதும் ஆக்கபூர்வமான பதிலெதனையும் ஜனாதிபதி மைத்திரி வழங்கவில்லை, அதன் பின்னர் நவம்பர் 16 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் காணாமல் போனோருக்கான அலுவலகம் தான் முடிவு என கூறி கைவிரித்து விட்டார். நாட்டின் உச்ச அதிகாரத்தை கொண்ட ஜனாதிபதியே கைவிரித்து விட்டதால் சர்வதேசம் ஒன்றுதான் தமது நீதிக்கான ஒரேவழி என்று மறுபடியும் தீர்மானித்து கொண்டார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைனும் இலங்கை மீதான பொறிமுறை பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்கும் வகையில் அமைய வேண்டும் என 2016 இல் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பான காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார்களே ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் 37 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்காக ஜெனிவா பயணமாகினார்கள். சுவிஸ் அரசாங்கம் பலருக்கு விசா வழங்க மறுத்து விட்ட நிலையில் 8 பேர் பயணமானார்கள், இவர்களில் மூவர் ஐக்கிய நாடுகள் சபையின் இடைநிலை நீதி தொடர்பான விசேட பிரதிநிதி பப்லோ டி கிரீஃப் தலைமையிலான கூட்டம் ஒன்றில் முதன்மை வகித்து பேசியிருந்தார்கள். இலங்கையில் அரசியலில் மாற்றம் ஏற்பட்ட பின்னரும்கூட நீதி வழங்குவதற்கான எந்த ஆரம்ப நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை. ஜனாதிபதி வெளியிடுவதாக எமக்கு உறுதியளித்த மூன்று பெயர்ப்பட்டியலையும் இதுவரை வெளியிடவில்லை.

இதுதவிர, காணாமல் போனோருக்கான அலுவலகத்தை எமது சம்மதம் இல்லாமல் கொண்டு வந்துள்ளார்கள், அதனை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம். இலங்கை அரசு இதுவரை எத்தனையோ ஆணைக்குழுக்களை நியமித்திருந்தது. அவற்றின் பதில்கள் எவையும் வெளியிடப்படவில்லை, அதே போன்று காலத்தை இழுத்தடிப்பு செய்யும் செயலாகவே நாங்கள் இந்த அலுவலகத்தை பார்க்கின்றோம். எமது சம்மதம் இன்றி குறித்த அலுவலகம் கொண்டு வரப்பட்டிருந்தாலும், அலுவலகத்தின் பெயர் காணாமல் போனோர் என்று இல்லாமல் காணாமல் ஆக்கப்பட்டார் என்று மாற்றப்பட வேண்டும். குறித்த அலுவலகத்தின் ஆணையாளர்களாக 4 பேர் தமிழர்களாக இருக்க வேண்டும், இராணுவத்தை பிரதிநித்துவப்படுத்தும் ஒருவர் ஆணையாளர்களில் ஒருவராக இருக்க முடியாது, காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்த இருவர் அங்கம் வகிக்க வேண்டும், சர்வதேச பங்களிப்பு இருக்க வேண்டும் என்று கூறியிருந்தும் அவை எதுவுமே அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் எவ்வாறு நாங்கள் இந்த அலுவலகத்தை நம்ப முடியும்?

இது தவிர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யுத்த வெற்றி வீரர்களை ஒரு போதும் நீதிமன்றக் கூண்டில் ஏற்ற மாட்டேன் என்று அடிக்கடி கூறுகின்றார். இதே போன்ற கருத்தை தான் அரசில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையோர் கொண்டுள்ளனர். எமது தொடர் போராட்டம் ஆரம்பமாகி இதுவரை 8 காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகளை தேடும் பயணத்தில் இறந்து விட்டார்கள். ஆகவே இனியும் இலங்கை அரசையும் அதனால் முன்னெடுக்கப்படுகின்ற பொறிமுறையையும் எம்மால் நம்ப முடியாது, அவற்றை ஏற்றுக்கொள்ளவும் முடியாது. காணாமல் ஆக்கப்பட்டார் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள சர்வதேச பொறிமுறை ஒன்றே அவசியமென வலியுறுத்தியிருந்தார்கள் இதனை பப்லோ டி கிரீஃப் ஏற்றுக்கொண்டிருந்த போதிலும் காணாமல் போனோர் அலுவலகத்தை பயன்படுத்தி பார்க்க வேண்டும் என்று இறுதியில் கூறியிருந்தார். எனினும் அதனை தாய்மார்கள் ஏற்றுக்கெள்ளவில்லை.

இதே போன்று பக்க அமர்வுகளின் போது ஜேர்மன், கனடா, பிரித்தானியா, சுவிஸ், அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில், 30/1 தீர்மானத்தை இலங்கை அரசு நிறைவேற்ற அழுத்தம் வழங்க வேண்டும் எனவும் நிலைமாறு கால நீதியில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைக்கான செயன்முறை, நீதிக்கான செயன்முறை, மீண்டும் நடைபெறாமைக்கான உத்தரவாதம் (நிறுவனங்களை மறுசீரமைத்தல்), நிவாரணம் வழங்குதல் ஆகியவை தனித்தனியே முன்னெடுக்கப்படாமல் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் தாய்மார்களால் விடுக்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்ட அவர்கள் அது தொடர்பில் ஆராய்வதாக உறுதியளித்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட தரப்பு நேரடியாகவே சென்று தங்கள் நிலைமைகளை கூறி விட்டது. ஆனாலும் ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக இவை தொடர்பில் கரிசனை கொள்ள போவதில்லை என்பது மட்டும் தற்போது தெளிவாகியுள்ளது.

ஆனாலும் தாய்மார்களது போராட்டம் அவர்களை ஐக்கிய நாடுகள் மனித வுரிமை பேரவை முன் கொண்டு சென்று நீதி கோர வைத்துள்ளது. நிச்சயம் ஒரு நாள் அவர்களுக்கு நீதியையும் பெற்றுக் கொடுக்கும்!

உ.சாளின்

அரசியல் என்ற விடயம், எப்போது உருவாகியிருக்கக்கூடும்?

மனிதன் ஒரு சமூகமாக சேர்ந்து வாழத்தொடங்கியபோது உருவாகியிருக்கலாம், நாடோடியாக நிலங்களைக் கடந்து திரிந்தபோது உருவாகியிருக்கலாம். எப்போதாக இருந்தாலும் அரசியல் என்பது என்றைக்கோ உருவாகி இன்றைக்கு ஒவ்வொருவரின் வாழ்விலும் கலந்திருக்கிறது. அரசியலைப் பொறுத்தவரையில் பெரும்பான்மை என்பது முக்கியமானது. ஒரு தரப்பிடம் இருக்கும் பெரும்பான்

செய்தி அதனை மற்றொரு கட்டத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இப்படித்தான் ஜெயித்தாரா?

கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்தான் இந்த சர்ச்சைகளின் தொடக்கப்புள்ளி. அந்த தேர்தலில் ட்ரம்ப் ஜெயித்ததைப் பார்த்து உலகமே சற்று ஆச்சர்யப்படத்தான் செய்தது. ஏனென்றால் தேர்தலுக்கு முன்னரான காலத்தில் ட்ரம்ப் செய்த கூத்துக்களை உலகம் பார்த்துக்கொண்டிருந்த அதேவேளை

கேம்பிரிட்ஜ் அனலிடிகா நிறுவனத்தை அணுகிய சனல் 4-ஐச் சேர்ந்த ஒருவர், அவருக்கு அந்த நிறுவனத்தின் சேவை தேவைப்படுவதாகவும் எனவே அது தொடர்பாக தகவல்களை அளிக்கும்படியும் கேட்டுக்கொள்கிறார். அப்படி தங்களது "பழைய" சேவைகளைப் பற்றி கூறியிருக்கிறார் கேம்பிரிட்ஜ் அனலிடிகா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அலெக்ஸாண் டெர்நிக்ஸ்(Alexander Nix).

தங்களது நிறுவனம் அதற்கு முன்னர் உலகம் முழுவதிலும் இருக்கும் அரசியல் கட்சிகளுக்கு அவர்க

ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இந்த விவகாரத்தைத் தொடர்ந்து பேஸ்புக்கின் நிலைப்பாட்டை தங்களிடம் தெரிவிக்குமாறு பிரிட்டிஷ் பாராளுமன்ற ஊடக குழு மார்க்கிற்கு உத்தரவிட்டுள்ளது. சர்ச்சைகள் எழுந்ததைத் தொடர் ந்து #Delete Facebook என்ற ஹேஷ் டேக் இணையம் முழுவதும் பரவத் தொடங்கியது. உச்சபட்சமாக வட்ஸ் அப்பின் இணை நிறுவனர் பிரையன் ஆக்டன் "பேஸ்புக்கை டெலிட் செய்வதற்கான நேரம் இது" என

# தரவுகள் திருடப்படுகிறதா? சிக்கலில் பேஸ்புக் நிறுவனம்

கேம்பிரிட்ஜ் அனலிடிகா (Cambridge Analytica):

"கேம்பிரிட்ஜ் அனலிடிகா" என்ற பிரிட்டிஷ் நிறுவனம் பேஸ்புக் தகவல்களை ட்ரம்பை தேர்தலில் வெற்றிபெற வைப்பதற்கு பயன்படுத்தியதாக தெரிவித்திருக்கிறது. கேம்பிரிட்ஜ் அனலிடிகா நிறுவனத்திடம் இருந்து இது தொடர்பாக தகவல்களைப் பெறுவதற்கு பல்வேறு கட்டங்களாக "ஸ்டிங் ஆபரேஷன்" ஒன்றை நடத்தியிருக்கிறது சனல் 4.

யில் அமெரிக்கர்கள் அவரை தங்களது தலைவராக தேர்ந்தெடுத்தார்கள். அன்றைக்கு தொடங்கிய சர்ச்சைகள் இன்றுவரை ஓயவில்லை. அவரின் வெற்றிக்கு பின்னால் ரஷ்யா இருக்கிறது என்பது தொடங்கி போலி செய்திகள் வரை ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு சர்ச்

ளது செல்வாக்கை அதிகரிப்பதற்கு உதவியதாகவும், குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெற்றி பெற சுமார் 50 மில்லியன் வாக்காளர்களின் பேஸ்புக் தகவல்கள் பயன்படுத்தியதாகவும் தெரிவித்திருக்கிறார். இந்த விடயம் அப்படியே பேஸ்புக்கின் பக்கம் திரும்பியது.

தங்களது நிறுவனம் அதற்கு முன்னர் உலகம் முழுவதிலும் இருக்கும் அரசியல் கட்சிகளுக்கு அவர்களது செல்வாக்கை அதிகரிப்பதற்கு உதவியதாகவும், குறிப்பாக அமெ ரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெற்றி பெற சுமார் 50 மில்லியன் வாக்காளர்களின் பேஸ்புக் தகவல்கள் பயன்படுத்தியதாகவும் தெரிவித்திருக்கி றார். இந்த விடயம் அப்படியே பேஸ்புக்கின் பக்கம் திரும்பியது.




மையைப் பொறுத்துதான் அரசியலில் காய்களை நகர்த்த முடியும். அந்த வகையில் அரசியலில் பெரும்பான்மையைப் பெறுவதற்கு ஆயுதங்களாகக் காலம்காலமாக அதிகாரம், அன்பு, பொருள், நிலம் எனப் பலவும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் இன்றைக்கு அந்த ஆயுதம் கண்ணுக்கே தெரியாத ஒன்றாக அதே வேளையில் பலம் பொருந்திய ஒன்றாக மாறியிருக்கிறது. காலத்துக்குத் தகுந்தவாறு மாற்றமடைந்திருக்கும் அந்த ஆயுதத்தின் பெயர் "டேட்டா". (தரவு)

சிலர் நம்பலாம், சிலரால் நம்ப முடியாமல் போகலாம். ஆனால், இன்றைய காலகட்டத்தில் யார் கையில் அரசியல், ஆட்சி, அதிகாரம் இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் டேட்டாவின் பங்கு என்பது ஒருவர் நினைத்துப் பார்ப்பதை விடவும் அதிகம். சமீப காலங்களாகவே இந்த விடயம் உலக அளவில் விவாதிக்கப்பட்டு வந்தாலும் அண்மையில் முன்னர் சனல் 4 வெளியிட்ட

சைகள் எழுந்து கொண்டிருந்தாலும் அவைகளுக்கு வலுவான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. அந்த வகையில் தற்பொழுது சனல் 4 வெளியிட்டிருக்கும் இந்த வீடியோ முக்கியமானதாக கருதப்படுகிறது.

இப்போது கேம்பிரிட்ஜ் அனலிடிகா **(Ca bridge Analytica):**

"கேம்பிரிட்ஜ் அனலிடிகா" என்ற பிரிட்டிஷ் நிறுவன்ம் பேஸ்புக் தகவல்களை ட்ரம்பை தேர்தலில் வெற்றிபெற வைப்பதற்கு பயன்படுத்தியதாக தெரிவித்திருக்கிறது. கேம்பிரிட்ஜ் அனலிடிகா நிறுவனத்திடம் இருந்து இது தொடர்பாக தகவல்களைப் பெறுவதற்கு பல்வேறு கட்டங்களாக "ஸ்டிங் ஆபரேஷன்" ஒன்றை நடத்தியிருக்கிறது சனல் 4. கேம்பிரிட்ஜ் அனலிடிகா நிறுவனம் கடந்த 2013 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. டேட்டா தொடர்பான சேவைகளை உலகம்முழுவதும்இருக்கும் பல்வேறு தனியார் நிறுவனங்கள், அரசியல்கட்சிகளுக்கு அளித்து வந்தன. இந்நிலையில் வாடிக்கையாளர் போல

பேஸ்புக் தனிநபர்களின் தகவல்களை அவர்களுக்கே தெரியாமல் சேகரித்து திருட்டுத்தனமாக விற்பனை செய்கிறதா என்ற கேள்வியை எழுப்பினார்கள் நெட்டிசன்கள். வீடியோ வெளியானதைத் தொடர்ந்து அலெக்ஸாண்டெர் நிக்ஸ்-ஐ தற்காலிகமாக நிறுவன பொறுப்பில் இருந்து நீக்கியிருக்கிறது அந்நிறுவனம். அதேவேளையில் தன் மீது வைக்கப்படும் ஒட்டுமொத்த குற்றச்சாட்டுகளையும் மறுத்திருக்கிறது கேம்பிரிட்ஜ் அனலிடிகா நிறுவனம்.

பேஸ்புக்கை டெலிட் செய்வதற்கான நேரம்

இந்த செய்தி வெளியானதால் கடும் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது பேஸ்புக் நிறுவனம். பலரின் கேள்விகளுக்கு பதில் சொல்லும் கட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கிறது. இதுவரை இல்லாத அளவிற்கு பேஸ்புக் நிறுவனத்தின் பங்குகள் சரிவைக் கண்டன. இரண்டு நாட்களில் மட்டும் சுமார் 60 பில்லியன் டொலர் அளவிற்கு நட்டம்

தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். கடந்த 2014ஆம் ஆண்டு தான் வட்ஸ்அப் செயலியை பேஸ்புக் நிறுவனம் கைப்பற்றியது.

நாம் இங்கு பேஸ்புக்கில் மீம்ஸ்களை தமிழனாய் நினைத்து ஷேர் செய்து கொண்டிருக்கையில் நம்தரவுகளை நமக்கே தெரியாமல் ஷேர் செய்து விளையாடியிருக்கிறது பேஸ்புக். நம்டேட்டா (தரவு) நம்மை விடவும் இன்னொருவருக்கு முக்கியமெனில் அது எவ்வளவு பத்திரமாக பாதுகாக்கப்பட வேண்டும்? ஆனால், உலகில் ஒரு சில நாடுகளைத் தவிர்த்து வேறு எந்த நாட்டிலும் டேட்டாவை முறையாக பராமரிப்பதற்கான வலுவான சட்டங்கள் இல்லை. அந்த ஓட்டையை தெளிவாகச் சுட்டிக்காட் டியிருக்கிறது கேம் ப்ரிட்ஜ் அனலிடிகா சம்பவம் இன்னும் கூட நாம் விழித்துக் கொள்ளாவிட்டால், எதிர்காலத்தில் நாமெல்லாம்பேஸ்புக்கை விட்டுப்போவதைத் தவிர வேறு வழியே இல்லை!

■ ஜூனியர் விகடன்

# டோனி இருக்க பயம் ஏன்?




ஐ.பி.எல் வந்துவிட்டது. சி.எஸ்.கே மீண்டு வந்து விட்டது. சேப்பாக்கம் ஸ்டேடியம் அலங்காரத்துடன் தயாராகி வருகிறது. டுவைன் பிராவோ சென்னை வந்துவிட்டார். சென்னை வந்து சேர்ந்த வீரர்கள் பி கிரவுண்டில் பயிற்சி செய்யத் தொடங்கிவிட்டனர். ப்ரோமோ, பிரஸ்மீட் என சி.எஸ்.கே நிர்வாகம் பிஸியாகி விட்டது. அப்படியொரு ஸ்பான்ஷர் பிரஸ்மீட்டில் முரளி விஜய், டுவைன் பிராவோ இருவரும் சி.எஸ்.கே சார்பில் கம்பேக் கொடுத்தனர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி உலகக் கோப்பைக்கு தகுதி பெற்றுவிட்டது. ஒருவேளை தகுதிபெறாமல் இருந்திருந்தால், மேற்கிந்தியத்தீவுகள் இல்லாத உலகக் கோப்பையை நினைத்துப் பார்த்திருக்க முடியுமா?'

டுவைன் பிராவோ உலகக் கோப்பைக்குத் தகுதிபெற்றதற்காக வீரர்களுக்கு வாழ்த்துகள். அவர்களை நினைத்து சந்தோஷப்படுகிறேன். மேற்கிந்தியத்தீவுகள் இல்லாத உலகக் கோப்பை என்பது இத்தாலி இல்லாத பிபா உலகக் கோப்பையைப் போன்றது. அதை நினைத்துப் பார்க்கவே முடியாது.

தற்போதுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி மிகவும் இளமையான அணி. மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட்டில் நடக்கும் களேபரங்களுக்கு இடையே, அவர்கள் இந்த வெற்றியைப் பெற்றிருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. உலகக் கோப்பையைப் பொறுத்தவரை மேற்கிந்தியத்தீவுகள் எப்போதும் நன்றாகவே விளையாடியிருக்கிறது.


சென்னை அணிக்குத் திரும்பியது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பிராவோ:** சென்னைக்குத் திரும்புவது என்பது வீட்டுக்குத் திரும்புவதுபோன்றது. கடந்த இரண்டு ஆண்டுகளாக சென்னை அணியை மிஸ் செய்தது கொஞ்சம் ஏமாற்றமே. ஐ.பி.எல் ஏலத்தின்போது அவுஸ்திரேலியாவில் இருந்தேன். எப்படியாவது சி.எஸ்.கே என்னை ஏலத்தில் எடுக்க வேண்டும் என நினைத்திருந்தேன்.

அது நடந்து விட்டது. என் மீது நம்பிக்கை வைத்திருந்த அணி நிர்வாகத்துக்கு நன்றி. சி.எஸ்.கே அணியில் ஃபிட்டாக இருக்க வேண்டும் என்பதற்காக பிக்பாஸ் தொடருக்குப் பிறகு வேறு எந்த அணியிலும் விளையாடவில்லை.

மேற்கிந்தியத்திவுகள் வீரர்கள் அனைவரும் ஐ.பி.எல் தொடரில் ஜொலிப்பது எதனால்?

**பிராவோ:** எங்களை நாங்களே கொண்டாடக்கூடியவர்கள். இருபது-20 ஐ பொறுத்த வரை என்டெர்டெயன்மென்ட்தான் முக்கியம். மக்கள் அதைத்தான்



விரும்புகின்றனர். எங்களின் கேம்ஸ்டைல் அதற்கு உகந்ததாக இருக்கிறது. அதனால்தான் ஹெய்ல், பொல்லார்டு, டேரன் சமி போன்ற வீரர்கள் ஐ.பி.எல் தொடரில் வெற்றிகரமாக வலம் வருகிறார்கள். அதேமாதிரி வெறுமனே விளையாட வேண்டும் என்பது மட்டுமல்லாது வெற்றி பெற வேண்டும் என்ற வெறி எங்களுக்குள் ஊறிப்போயிருக்கிறது.


சி.எஸ்.கே. அணிக்காக ஐந்து ஆண்டுகள் விளையாடியிருக்கிறீர்கள். அப்போது போலிஞ்சர், ஹில்ஃபெனாஸ், நெஹ்ரா போன்ற சீனியர் பந்து வீச்சாளர்கள் அணியில் இருந்தனர். இப்போது அனுபவமான வேகப்பந்து வீச்சாளர்கள் இல்லை. நீங்கள்தான் வேகப்பந்து வீச்சை முன்னின்று நடத்த வேண்டும் என்பதில் நெருக்கடி இருக்கிறதா.

**பிராவோ:** கண்டிப்பாக நெருக்கடி இல்லை. வாட்சன், ஜடேஜா போன்ற அனுபவ வீரர்கள் இருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் எந்த நெருக்கடியும் இல்லை. எல்லாவற்றையும்விட அணித் தலைவர் கூல் (டோனி) இருக்கிறார். அவர் எப்போதுமே அந்த மொமன்ட்டை அனுபவிக்கச் சொல்வார். அதனால், எந்த நெருக்கடியும் இல்லை. தவிர, இளம் உள்ளூர் வீரர்களுடன் இணைந்து விளையாடுவதை ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கிறேன்.

டெஸ்ட், இருபது-20 போட்டிகள் மட்டுமே கிரிக்கெட்டின் எதிர்காலமாக இருக்கும்' என ஷேன் வார்னே சொல்லியிருக்கிறார். உங்கள் கருத்து?

**பிராவோ:** "அதைப் பற்றி கருத்துச் சொல்ல நான் யார்? இருபது-20, டெஸ்ட், வன் டே மட்டுமல்ல, இருபது-10 ஃபார்மட் கூட வந்துவிட்டது. இவை எல்லாமே தான் கிரிக்கெட். எல்லா ஃபார்மட்டையும் விளையாட வேண்டும். இதைப் பற்றி வேறு என்ன சொல்ல.

மிச்செல் சான்ட்னர் உங்கள் கேம் பிளானில் முக்கியப் பங்கு வகிப்பதாக சொல்லியிருக்கிறீர்கள். காயம் காரணமாக அவர் விலகியிருப்பது உங்களுக்கு பின்னடைவாக இருக்குமா? அவருக்கு மாற்று யார்?



காசி விஸ்வநாதன், தமிழ்நாடு கிரிக்கெட் கவுன்சில் செயலாளர், எங்கள் கேம் பிளானில் சான்ட்னரின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவர் இல்லாதது உண்மையிலேயே பின்னடைவுதான். அவரை யார் ரீபிளேஸ் செய்வது என்பதை பயிற்சியாளர், அணி நிர்வாகம் தான் முடிவு செய்யும்.'

கடந்த ஐ.பி.எல் போட்டியில் நீங்கள் விளையாடவில்லை. அதன்பின் லிமிட்டெட் ஓவர்ஸ் போட்டிகளில் இடம் கிடைக்கவில்லை. 2019 உலகக் கோப்பையில் விளையாட விரும்புவதாக சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஐ.பி.எல் உங்களுக்கு லிமிட்டெட் ஓவர் அணியில் இடம்பெற்றுத் தரும் வாய்ப்பாக அமையுமா?

**முரளி விஜய்:** "நன்றாக விளையாடி அணியில் இடம்பெற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு தயாராகவே இருக்கிறேன்.

அடுத்து வரும் வெளிநாட்டு டெஸ்ட் தொடர்களில் (இங்கிலாந்து, அவுஸ்திரேலியா) இந்திய அணியால் சிறப்பாக செயற்பட முடியுமா?

**முரளி விஜய் :** அந்தத் தொடர்களுக்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம். தென்னாபிரிக்காவிலும் கூட நன்றாகவே விளையாடினோம். துரதிர்ஷ்டவசமாக தோல்வியடைந்து விட்டோம். ஒருவேளை ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடராக இருந்திருந்தால் முடிவு வேறு மாதிரி இருந்திருக்கும். தென்னாபிரிக்கத் தொடரில் பந்துவீச்சாளர்களின் செயற்பாட்டைப் பாராட்டியே ஆக வேண்டும்.

இங்கிலாந்து சுற்றுப் பயணத்துக்கு முன், கவுன்ட்டி கிரிக்கெட்டில் விளையாடுவீர்களா?

**முரளி விஜய் :** கவுன்ட்டியில் விளையாடுவதென்பது பெரிய பிராசஸ். அவுட் ஸ்டேஷன் வீரர்கள் இல்லாத பட்சத்தில் மட்டுமே அவர்கள் மற்ற வீரர்களைத் தொடர்புகொள்வார்கள். அங்கு விளையாடுவது அவ்வளவு எளிதல்ல. கவுன்ட்டியில் விளையாடுவது குறித்து என்னையும் தொடர்பு கொண்டார்கள். ஆனால் அதைப் பற்றி எந்த முடிவும் எடுக்கவில்லை.

தென்னாபிரிக்கத் தொடரில் நினைத்த அளவு சோபிக்க முடியவில்லை. தமிழ்நாட்டுக்காகவும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த ஐ.பி.எல் பெர்பாமன்ஸ் அதையெல்லாம் மறக்கடிக்குமா?

**முரளி விஜய்:** நான் எப்போதுமே ரிலாக்ஸான மனநிலையில்தான் இருப்பேன். என்ன மாதிரியான கேம் விளையாட வேண்டும் என்பதை மட்டுமே யோசிக்கிறேன்.

சி.எஸ்.கேவில் விளையாடிய காலகட்டம் உங்களுக்கு சக்சஸ்புல்லாக இருந்தது. அந்த நினைவுகள் பற்றி?

**முரளி விஜய் :** மும்பையுடன் ஜெயிப்பது எப்போதுமே எனக்குப் பிடித்த விடயம். சென்னை அணியுடன் எனக்கு ஏராளமான நினைவுகள் உள்ளன. எது பெஸ்ட் என பட்டியலிட முடியாது. இந்த முறை அதிக நினைவுகள் இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

சி.எஸ்.கே அணிக்கு மீண்டும் திரும்பியிருப்பது எப்படி இருக்கிறது?

**முரளி விஜய் :** சி.எஸ்.கே. கிரிக்கெட்டிங் ஸ்டைல் அருமையாக இருக்கும். அந்த அணியுடன் மீண்டும் இணைவது மகிழ்ச்சி. இது எனக்குக் கிடைத்த பெரிய வாய்ப்பு. (ம)

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : ஆண்டவன் கட்டளை
இசை :விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன், பி. சுசீலா
வரிகள்: கண்ணதாசன்




அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
காற்றினிலும் மழையினிலும் கலங்கவைக்கும் இடியினிலும்
காற்றினிலும் மழையினிலும் கலங்கவைக்கும் இடியினிலும்
கரையினிலே ஒதுங்கி நின்றால் ஆடும், ஓய் ஓய்
அமைதியான நதியினிலே ஓடும், ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

தென்கனம் இளங்கீற்றினிலே ஏ..ஏ..ஏ
தென்னம் இளங்கீற்றினிலே தாலாட்டும் தென்றலது
தென்னம் இளங்கீற்றினிலே தாலாட்டும் தென்றலது
தென்னைதனைச் சாய்த்துவிடும் புயலாக வரும்பொழுது
தென்னைதனைச் சாய்த்துவிடும் புயலாக வரும்பொழுது
அமைதியான நதியினிலே ஓடும், ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும் -ஓ ஓ ஓ

ஆற்றங்கரை மேட்டினிலே ஆடி நிற்கும் நாணலது
ஆற்றங்கரை மேட்டினிலே ஆடி நிற்கும் நாணலது
காற்றடித்தால் சாய்வதில்லை கனிந்தமரம் வீழ்வதில்லை
காற்றடித்தால் சாய்வதில்லை கனிந்தமரம் வீழ்வதில்லை
அமைதியான நதியினிலே ஓடும், ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

நாணலிலே காலெடுத்து நடந்து வந்த பெண்மை இது
நாணலிலே காலெடுத்து நடந்து வந்த பெண்மை இது
நாணம் என்னும் தென்றலிலே தொட்டில் கட்டும் மென்மை இது
நாணம் என்னும் தென்றலிலே தொட்டில் கட்டும் மென்மை இது
அமைதியான நதியினிலே ஓடும், ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

அந்தியில் மயங்கி விழும் காலையில் தெளிந்துவிடும்
அந்தியில் மயங்கி விழும் காலையில் தெளிந்துவிடும்
அன்பு மொழி கேட்டுவிட்டால் துன்பநிலை மாறிவிடும்
அன்பு மொழி கேட்டுவிட்டால் துன்பநிலை மாறிவிடும்

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்
காற்றினிலும் மழையினிலும் கலங்கவைக்கும் இடியினிலும்
காற்றினிலும் மழையினிலும் கலங்கவைக்கும் இடியினிலும்
கரையினிலே ஒதுங்கி நின்றால் ஆடும், ஓய் ஓய்
அமைதியான நதியினிலே ஓடும், ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

# இனிப்பும் கசப்பும்

மாலை நேரம். இதமான காற்று உடலை வருடிச் செல்ல, அடர்ந்து பரந்திருந்த அந்த வேப்பமரத்தின் கீழே சாய்வு நாற்காலியில் ஓய்வாக அமர்ந்திருந்த சுந்தரம்பிள்ளை அருகில் மகிழ்ச்சியுடன் ஓடி விளையாடிக் கொண்டிருந்த பேரக்குழந்தைகளை ரசித்த வண்ணமிருந்தார்.



அப்போது வேப்பம்பழக் கொத்து ஒன்று கீழே விழ ஓடிச்சென்று அதனைக் கையிலெடுத்த குட்டிப்பேரன் கண்ணன் அதிலொரு பழத்தை ஆசையாக வாயில் வைத்துவிட்டு "ச்சீய்" என்று துப்பியபடி மிகுதியைக் கீழே போட்டான். இதைப் பார்த்தபடி அவனருகில் நின்றிருந்த பேர்த்தி மீனு "ஏன் தாத்தா எங்கள் தோட்டத்து மாமரம், பலா மரத்தின் பழங்களைப்போல இந்தப் பழங்கள் இனிப்பாகவோ சுவையாகவோ இல்லை?" என்று கேட்டாள். வாஞ்சையுடன் அவள் தலையைக் கோதிய சுந்தரம்பிள்ளை "இது வேப்ப



மரமம்மா. இதன் இலை, காய், பட்டை என எல்லாமே மிகுந்த கசப்புத்தன்மை கொண்டவை" என்று கூறினார். அதற்கு மீனு "அப்புறம் ஏன் தாத்தா இதை இவ்வளவு பெரிதாக வளர விட்டீர்கள்? சிறியதாக இருக்கும்போதே வெட்டியிருக்கலாமே" என்றாள். தாத்தா சிரித்த படி "மீனுக்குட்டி நீ சொன்ன மாமரம், பலா மரம் என்பவற்றின் பழங்கள் மிகவும் இனிமையும் சுவையும் கொண்டவை. ஊட்டச்சத்துக்களுமுண்டு. ஆனால் அதிகமாக அவற்றை உண்பதால் உடல் உபாதைகளே ஏற்படும். மேலும் அவை குறித்த பருவ காலங்களிலேயே கனிகளைத் தருவதால் ஏனைய காலங்களில் நாம் அம்மரங்களை நாடுவதில்லை.

ஆனால் வேம்பு அவ்வாறில்லை. அதன் ஒவ்வொரு பாகமும் பயனுள்ளதும் மருத்துவ குணம் மிக்கதுமாகும். உதாரணமாக பாரம்மா இதன் பூக்களை எடுத்து பாட்டி வடகம் செய்கிறார். பழங்களின் விதைகளைக் கொண்டு இயற்கை உரம் தயாரிக்கிறோம். நுளம்புகளை விரட்ட எரித்துப் புகை போடுகிறோம். பட்டை நோய்கள் பலவற்றைத் தீர்க்கும் அருமருந்தாகப் பயன்படுகிறது. இலைகள் மிகச் சிறந்த கிருமிநாசினியாகும். எல்லாவற்றிற்கும் மேலாக தாத்தாவும் நீங்களும் அமர்ந்திருக்க குளிர்ந்த நிழலைத் தருவதுடன் இதன் காற்று பிராணவாயு செறிந்ததால் உடலுக்கு மிகமிகச்சிறந்தது" என்று கூறி "இப்போது சொல்லம்மா இவ்வளவு பயனுள்ள இந்த மரத்தை கசப்பு என்ற ஒரே காரணத்திற்காக வெட்டலாமா?" என்று கேட்டார். மீனு "இல்லை" என்பதுபோல் பலமாகத் தலையசைக்க, பெரிய பேரன் மாறன் "கூடவே கூடாது தாத்தா" என்றான்.

இந்த விடையை எதிர்பார்த்திருந்த சுந்தரம்பிள்ளை தொடர்ந்தார். "இப்படித்தான் குழந்தைகளே உங்கள் வாழ்க்கையிலும் கவர்ச்சியாக, இனிமையாக, கண்ணைக் கவர்வதாக தற்போது அமையும் விடயங்கள் பிற்காலத்தில் உங்களைச் சோதனைக்குள்ளாக்கும்.

ஆனால் பெரியவர்கள், கற்றவர்கள் கூறும் புத்திமதிகள், உலக நீதிகள் கேட்பதற்கு இன்று உங்களுக்கு கசப்பாக இருந்தாலும் அவை நீங்கள் வல்லவர்களாக வளரவும் நாளை இந்நாட்டின் நல்ல பிரஜைகளாக வாழவும் வழி வகுக்கும்" என்று கூறித் தாத்தா சொல்வதை ஆவலுடன் கேட்டபடியிருந்த குழந்தைகளைக் கனிவுடன் நோக்கி "என்ன புரிகிறதா?" என்று கேட்டார். "ஆம் தாத்தா நீங்கள் சொல்வது மிகவும் சரி. நன்றாகப் புரிந்து கொண்டோம்" என்றபடி தாத்தாவைக் கட்டிக்கொண்டான் மாறன்.

வ.கற்கண்டு



# வியாசரின் வியாக்கியானம்

தாய், தந்தையை இழந்து தவிக்கிற தவிப்பு அந்தக் கொடுமையை வார்த்தையால சொல்ல முடியாது. அதுகள அனுபவிச்சாத்தான் தெரியும்-புரியும்.

அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை உடனை கருணை அடிப்படையில் விடுதலை செய்ய வேணும் எண்டு பல அமைப்புகள் கோரிக்கை விட்டிருக்கு. ஆனால் மேலிடத்தில இருந்து சாதகமான பதில் ஏதும் இன்று வரை வரவில்லை.

கணவன் பயங்கரவாதத்தடைச் சட்டத்தில கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவிக்க அந்தத் தாய் இரண்டு பிள்ளைகளையும் கஷ்டப்பட்டு எவ்வளவு கனவோட வளர்த்திருப்பாள்.

கடவுள் கஷ்டப்பட்டவர்களுக்குத்தான் இன்னும் இன்னும் சோதனையைக் கொடுப்பார் போல. நோய் வாய்ப்பட்ட தாய் இறந்துபோக அந்தப் பிஞ்சுகள் நிர்க்கதியா நிற்குதுகள்.

அம்மி மிதித்து அருந்ததி பாத்து தொட்டுத் தாலி கட்டின மனைவி இறந்திட்டாள் என்றால் ஒரு கணவனுக்கு மனசு எப்பிடி ரணமா இருக்கும்.

உன்னோட வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தமா இரண்டு உயிர்களைத் தந்திட்டு இப்ப உயிர் அற்றுக் கிடக்கிறியே எண்டு கதறி அழுத கணவனுக்கு வெறும் மூன்று மணித்தியாலம் தான் அனுமதி.

ஐயோ கடவுளே ஓவென்று குழறி மார்பில் அடிச்சு ஒருவருடம் அழுதாலும் தீராத சோகத்தை மூன்று மணித்தியாலத்தில் தீர்ப்ப தென்றால்... என்ன செய்ய எல்லாம் விதி என்றாகிட்டு.

இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு சிறைச்சாலை வாகனத்தில ஏறுகிறார் சுதாகரன். வேட்டியைப் பற்றிப் பிடித்தபடி அவன் மகளும் வாகனத்தில் ஏறுகிறாள். அப்பா நீங்க இல்லாமல் அம்மாவோட இருந்தம். இப்ப அம்மாவும் இல்லை. நீங்களும் இல்லையெண்டால் எங்களாலை வாழ ஏலாது. நானும் உங்களோட வாறன். தந்தையின் மனம் பட்ட பாட்டை சொல்லி மாளுமோ?

ஐயா அதிகார வர்க்கங்களே கொஞ்சம் கண் திறந்து பாருங்களேன். குழந்தை என்றால் எல்லாம் குழந்தைதானே. அதிலும் இனம், மதம், மொழி உண்டோ. தாயை இழந்து தவிக்கிற அந்தப் பிஞ்சுகளின்ர வாழ்க்கையில ஒளியேற்ற நினைத்தால் கம்பிச் சிறையில வாடுற அந்த தந்தைக்கு பொதுமன்னிப்பு வழங்க வேணும். அப்பதான் தமிழினம் கொஞ்சமேனும் ஆறுதல் அடையும்.

# நவரசப் பட்டம் வேண்டாமே!







நான் ஏ டு இசட் வரை சொல்வேன். உன் கேர்ள் ஃப்ரெண்ட் பெயர் எந்த எழுத்துல ஆரம்பிக்குதோ, அந்த எழுத்து வந்ததும் 'ஸ்டாப்' னு சொல்லணும் என்றபடி ஏ, பி, சி, டி சொல்லத் தொடங்குகிறார் கார்த்திக். ஆனால் ஏபிசிடியே முடிந்தபோதும் 'ஸ்டாப்' சொல்லாமல் அமைதியாக அமர்ந்திருக்கிறார் கௌதம். ஏய்... யாருமே இல்லையா? இல்ல... எல்லா எழுத்துலயும் கேர்ள் ஃப்ரெண்ட் இருக்காங்களா?' என்று கொஞ்சம் அதிர்ச்சி, கொஞ்சம் சிரிப்புடன் கேட்கிறார் கார்த்திக்.

சில சந்திப்புகள்தான் இன்னும் கொஞ்ச நேரம் தொடராதா என்று தோன்றவைக்கும். ஒரு ஞாயிறு மாலை 'ஃபோப்தா'வில் நடந்த கார்த்திக்–கௌதம் சந்திப்பு அந்த வகையான சந்திப்புதான். 'மிஸ்டர் சந்திரமௌளி' படத்தில் சேர்ந்து நடிக்கும் இந்த அப்பா-மகன் இணையைச் சந்தித்தேன்.

இன்றுவரை அதே விளையாட்டு, குறும்புடன்தான் இருக்கேன். ஆனால் குறும்பு, சுட்டித்தனம் கௌதமிடமும் இருந்தாலும் அது இன்னும் மெச்சூர்டா வெளிப்படுதுனு நினைக்கிறேன். சினிமாவை ஒரு தொழிலா எடுத்துக்க எனக்கு இரண்டு மூன்று வருஷங்கள் டைம் இருந்துச்சு. ஆனால், கௌதமுக்கு 'கடல்'லயே அந்த கமிட்மென்ட் வந்திடுச்சு. ஒரு அப்பாவுக்கு இதைவிட வேறென்ன சந்தோஷம் வேணும்?" -- தன் கையை இறுக்கிப் பிடித்தபடி பேசும் அப்பா கார்த்திக்கைக் கட்டியணைத்துக் கொள்கிறார் கௌதம்.

உண்மையைச் சொல்லணும்னா, சின்ன வயசுல அப்பாவோட ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு ரெண்டுமுறைதான் போயிருக்கேன்னு நினைக்கிறேன்.

அதுவும் ஷூட்டிங் பார்க்கப் போனது கிடையாது. கேமரா என்ன பண்ணுது, ட்ராலியில ரைட் கூட்டிட்டுப் போவாங்களானு நினைச்சுதான் போவேன் என்கிற கௌதமை, ஆமாம், ஆமாம்' என்று ஆமோதித்துத் தொடர்கிறார் கார்த்திக். எங்கடா காணோம்னு தேடினால், 'டாட்' என்று கிரேனில் இருந்து கௌதம் கைகாட்டினது இன்னும் நல்லா நினைவில் இருக்கு" என்ற கார்த்திக் எதையோ யோசித்தவராக, விட்டா நானே பேசிட்டிருப்பேன். கௌதமும் பேசட்டும்" என்கிறார்.

டாட், நீங்க பேசுறதைக் கேட்கத்தான் வந்திருக்காங்க. பேசுங்க என்று உற்சாகப்படுத்துகிறார் கௌதம். யெஸ். 38 வருஷ நடிப்புப் பயணம். திரும்பிப் பார்த்தால் அவ்வளவு சந்தோஷமா இருக்கு. காலேஜ் படிச்சிட்டிருந்த நான் திடீர்னு எந்த பிளானும் இல்லாமல் சினிமாவுக்கு வந்தேன். 'அலைகள் ஓய்வதில்லை, தமிழ் மட்டுமல்லாமல் தெலுங்கிலும் ரீமேக் ஆச்சு. அப்ப சினிமாதான் என் வாழ்க்கையா மாறும்னு நான் நினைக்கலை. அதனால நிறைய போராட்டம். ஆனால், இதுதான் என் தொழில்னு முடிவு பண்ணினபிறகுதான் எனக்கான அடையாளம் கிடைச்சதுனு சொல்லணும்.

தமிழ் சினிமாவில் நான் கற்ற பாடங்கள் நிறைய. அதுக்கு ஒரு சோறு உதாரணம் சொல்றேன். இதெல்லாம் பாடமானுகூட நீங்க நினைக்கலாம். ஆனா, எனக்கு அதுவும் முக்கியமான பாடம்தான்.

நினைவெல்லாம் நித்யா பாடல் காட்சி. ரகுராம் மாஸ்டர்தான் கோரியோகிராபர். அவர் எனக்கு பிரதர் மாதிரி. ரெண்டாவது நாள் ஷூட்டிங்கில் கண்ணை மூடிட்டு நிதானமா நிற்கிறார். 'என்ன மாஸ்டர் மனசுக்குள்ளேயே கோரியோகிராப் பண்றீங்களா?' என்றேன். ஆமாம். விஷுவலைஸ் பண்றேன்' என்றார். அந்தத் தருணம் அடித்த ஸ்பார்க்தான் பின்னாளில் நான் சிரமமின்றி நடிக்க ஒரு காரணம். கதை, காட்சி, வசனம்னு எல்லாத்தையும் அப்படியே மனதுக்குள் ஓட்டிப்பார்த்து ஷாட்டுக்கு முன் கற்பனையில் நான் கைந்து முறை நடித்து முடித்து தெளிவோட கமரா முன் வந்து நிற்பேன். பிரதர் ரகுராம் மனசுக்குள் விதைத்த அந்த டெக்னிக்தான் அதுக்குக் காரணம்" என்கிற கார்த்திக்கே தொடர்கிறார்.


அக்னி நட்சத்திரம்' 'ராஜா... ராஜாதி ராஜன் இந்த ராஜா' பாடல் படப்பிடிப்பு நாள் நினைவுக்கு வருது. அந்தப் பாட்டுக்குதான் முதல் முறையா கொஞ்சமாவது ரிகர்சல் பண்ணினேன்னு நினைக்கிறேன்.

சுந்தரம் மாஸ்டர்தான் கோரியோகிராபர். ஸ்ட்ராங்மேன். பூனை மாதிரி வருவார். டும்னு நடு முதுகில் குத்துவார். திரும்பிக் கூடப் பார்க்கமாட்டேன். 'வாங்க மாஸ்டர்'ம்பேன். அந்தக் குத்துதான் அவரின் 'ஹலோ'. அவர் எங்க அப்பாவுடன் சேர்ந்து, "காதலிக்க நேரமில்லை' படத்துல வொர்க் பண்ணியுள்ளார்.

இதேபோல, கவுண்டமணி அண்ணனுடன் நான் நடித்த காட்சிகளைப் பார்த்தீங்கன்னா, சிரிப்பை அடக்கிக்கிட்டு நடிக்கிறது தெரியும். ஏம்பா, இப்படிச் சிரிச்சிட்டிருந்தா நான் எப்படி நடிக்கிறது ம்பார். அண்ணனை கன்ட்ரோல் பண்ணவே முடியாது. 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தை மறக்க முடியுமா?" என்கிற கார்த்திக்கை இடைமறித்துத் தொடர்கிறார் கௌதம். "அப்பா நடிச்ச படங்கள்ல ரீமேக் பண்ணி நடிக்கணும்னா, 'உள்ளத்தை அள்ளித்தா' படம் தான் என் முதல் சாய்ஸ். ஆனால், ஒரே ஒரு கண்டிஷன், அதில் கவுண்டமணி சார்தான் திரும்ப நடிக்கணும்" என்கிறார்.

அப்பாவைப் பற்றி ஒரு ஃபன்னான விஷயம் சொல்லணும்னா என்ன சொல்லுவீங்க? இது கௌதமுக்கான கேள்வி. அப்பா வீட்லதான் இருப்பார். திடீர்னு காணாமல் போயிடுவார். அப்பா எங்கனு கேட்பாங்க. ஐயோ இங்கதானே இருந்தார், எனக்குத் தெரியாதே'ம்பேன். இப்படி எத்தனை வாட்டி காணாமல் போயிருக்கார் தெரியுமா? ஆனால், ஷூட்டிங்ல சரியா இருப்பார் என்கிறார் கௌதம்.

எங்கே எவ்வளவு நேரம் தேவையோ, அவ்வளவு நேரம் இருப்பேன். அடுத்த செகண்டு காணாமப்போயிடுவேன். ஷூட்டிங் நடுவுல ஒருநாள் பிரேக் கிடைச்சாலும் புதுப்புது இடங்கள், காடுகள் பார்க்கணும்னு விரும்புவேன். தனியா காரை எடுத்துட்டுக் கிளம்பிடுவேன். ரோடு, ட்ராக் எதுவும் இருக்காது. ஆனால், என் கார் அங்கெல்லாம் ஓடும். ஒருமுறை அப்படிப் போனப்ப, அழகான புல்வெளி, காரை விட்டுட்டேன். பார்த்தா, அது பாசி படர்ந்த குளம். கார் மூழ்கிட்டிருக்கு. எப்படியோ ஆக்ஸிலேட்டரை அழுத்திக் கரையேறி, தப்பிச்சேன். இன்னைக்கும் ஊட்டி போனா ஹெட்லைட் போட்டுக்கிட்டுக் காட்டுக்குள்ள நடப்பேன்.






ஊட்டியில பலர் பார்க்காத இடங்களுக்கு நான் போயிருக்கேன். இந்த லொகேஷன்களை, கூடிய சீக்கிரம் நான் டைரக்ட் பண்ணப் போற படங்கள்ல நீங்க பார்க்கலாம்" என்கிறார் கார்த்திக்.


சுப்பர். அதுக்கு முன் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்க. 'காதலிக்க நேரமில்லை' படத்தை ரீமேக் பண்றோம். அதில் உங்க அப்பா நடிச்ச கரக்டரில் நீங்க நடிக்கிறீங்க. ரவிச்சந்திரன் கரக்டரில் கௌதம். உங்க இருவருக்கும் ஜோடியா இப்ப உள்ள ஹீரோயின்கள்ல யார் சரியா இருப்பாங்க? என்றோம்.

யோசிக்காமல் டக்கென்று சொன்னார், "அதுதான் கஷ்டம். இப்ப எனக்கு 18 வயசு ஆகுது. அப்ப ஹீரோயினை ஸ்கூல்ல போய்த்தான் தேடணும் என்றவர், யெஸ் ப்ரோ, சந்திர மௌலியில நடிக்கிறது என் எல்டர் பிரதர் என்று கௌதமைக் கட்டியணைத்துக்கொண்டு சிரிக்கிறார்.

உங்க அப்பா நவரசத் திலகம். நீங்க நவரசநாயகன்? அப்படி 'நவரச'த்தில் தொடங்குறமாதிரி கௌதமுக்கு என்ன டைட்டில் கொடுக்கலாம்" என்றால் "அந்தப் பட்டம் வேணாமே" என்கிறார். ஆமாம், அதை வெச்சுப்ப எனக்கே கூச்சமா இருக்கும். அந்தக் காலத்தில் அவங்க வெச்சுக் கிட்டாங்க. தவிர எனக்கு வெச்சது அப்ப வேறொருத்தருக்கு இருந்த பட்டம்.

அதைத்திருடி எனக்கு வெச்ச மாதிரி இருந்தது. எனக்கு வெறும் கார்த்திக் போதும். இந்த டைட்டில் வேண்டாம். அதை மக்கள் முடிவு பண்ணட்டும் என்கிறார். அதை வழிமொழிந்த கௌதம், ஆமாம், கௌதம் என் பெயர். என் டைட்டில் கார்த்திக். அது போதும் என்று பவ்யம் காட்டுகிறார்.





# தண்டனை வழங்கப்படாமையே தேர்தல் பின்னடைவுக்கு காரணம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான அதிகாரப் போராட்டமானது இருவரையும் மிகவும் மோசமாகப் பாதித்துள்ளதுடன் இவ் விருவரினதும் நீண்டகால அரசியல் மூலோபாயங்களின் வரையறைகளையும் வெளிப்படுத்தியுள்ளதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்விரு தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற அதிகாரப் போட்டியானது சிங்கள- பௌத்த இனவாதம் நாட்டில் தலைவிரித்தாடுவதற்கும் நாட்டில் வன்முறைகள் ஏற்படுவதற்குமான போலித்தனமான வெற்றியைக் கொடுத்துள்ளது.

எனினும், பெப்ரவரி 10 அன்று நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய அரசாங்கத்தில் நிலவும் ஒற்றுமையின்மை வெளிப்படுத்தப்பட்டமை மக்கள் இலகுவாக மறந்துவிட முடியாது. இத்தேர்தல் பெறுபேறைத் தொடர்ந்து, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை விட தனது அரசாங்கமானது ஊழல் மிக்கதாக உள்ளதாக மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார்.

இதற்கு மாறாக, மைத்திரிபால சிறிசேனவை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதற்கு முயற்சித்த ஐக்கிய தேசியக் கட்சியின் இளையோர்களை ரணில் அமைதிப்படுத்தியிருந்தார். ரணிலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஆதரவளித்திருந்தார். இதனால் நிலைமை சுமுகமாகியது.

ஜனநாயக நாடான இலங்கையின் தலைவிதியானது 341 உள்ளூராட்சி சபைகளால் மட்டும் தீர்மானிக்கப்படமாட்டாது. இதற்கும் அப்பால் 2020இல் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலிலேயே நாட்டின் தலைவிதி தீர்மானிக்கப்படும் என்பதே உண்மையாகும்.

ஜனநாயகம் நிலைநாட்டப்படாது, அரசியல் சாசனத்தில் மாற்றம் கொண்டுவரப்படாவிட்டால் 2020 ஜனவரியில் இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தல் மூலம் புதிய ஜனாதிபதி பதவியேற்க வேண்டும். அத்துடன் பெப்ரவரி 2020இல் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் ஆர்வம் காட்டமாட்டார் என்பதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் மகிந்தவின் பெரும்பான்மை ஆதரவாளர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ நிறுத்தப்படுவார் என நம்புகின்றனர்.

இதேவேளையில், மறுபுறத்தே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு ரணில் மற்றும் மைத்திரியிடம் அவர்களது ஆதரவாளர்கள் அழுத்தம் கொடுக்கலாம். இரண்டாம் தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது மைத்திரிபால சிறிசேன அறிவித்திருப்பினும் கூட, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக மைத்திரியே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் எனப் பலரும் நம்புகின்றனர்.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறானது தற்போது ஆட்சியிலுள்ள தேசிய அரசாங்கம் தொடர்பான நம்பிக்கையை சிதறடித்துள்ளதுடன் பல்வேறு முரண்பாடுகளையும் தோற்றுவித்துள்ளது.

முன்னைய ஆட்சியில் ஊழல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்கத் தவறியமையே தற்போது நடந்து முடிந்த தேர்தலில் பின்னடைவு ஏற்பட்டமைக்கான காரணம் என உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னர் ரணில் விக்கிரமசிங்கவால் கூட்டப்பட்ட முதலாவது ஊடக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சட்ட ஒழுங்கைக் கடைப்பிடிக்கத் தவறியமை, வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை, நாட்டில் வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டமை போன்றன ஐ.தே.க அரசாங்கத்திற்கான வாக்குகளைக் குறைத்துள்ளதாகவும் குறிப்பாக சட்ட ஒழுங்கு நிலைநாட்டத் தவறியமையே இதற்கான முக்கிய காரணம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

நாட்டில் சட்ட ஒழுங்கு நிலைநாட்டப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டை முன்னாள் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க ஏற்றுக்கொண்டதுடன் இதற்காக தான் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யவும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

எனினும், ஜனாதிபதியின் அழுத்தத்தின் காரணமாகவே ஊழல் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தண்டனை வழங்கவில்லை என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஜனாதிபதியின் தலையீடின்றி, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஏனைய குற்றவாளிகளை முன்னாள் சட்ட மற்றும் ஒழுங்கு அமைச்சர் மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பாதுகாத்திருக்க முடியாது.

கோத்தபாயவைப் பாதுகாக்கும் மைத்திரியின் மூலோபாயமானது தோல்வியடைந்துள்ளது என்பதையே அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறு தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. இருப்பினும், கோத்தபாயவை மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பதாக கூறுவதன் மூலம் மைத்திரிபால சிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த முடியும் என ரணில் நம்புகிறார் எனக் கூறுவது தவறானதாகும்.

கோத்தபாயவை மூன்றாவது வேட்பாளராக பயன்படுத்தாது, ரணில் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்று மைத்திரியை வெற்றி பெற முடியும் என்பது தெளிவாகும். பெப்ரவரி 10 அன்று இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மைத்திரி மற்றும் மகிந்த பெற்ற வாக்குகள் ஐ.தே.க. பெற்ற வாக்குகளை விட குறைவானதாகும்.

பிளவுபட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கடும்போக்கு சிங்கள பௌத்தர்களை ஒன்றிணைப்பதற்கு கோத்தபாயவே பொருத்தமான நபர் என்பதையும் இக்கட்சியின் தலைமைத்துவத்தை ஒருங்கிணைப்பதற்கும் கோத்தபாய தேவை என்பதை மைத்திரியின் விசுவாசிகள் நம்புகின்றனர்.

இவ்வாறு அறிவித்ததன் மூலம், கோத்தபாய கைது செய்யப்படுவதிலிருந்து இவரை மைத்திரி பாதுகாத்துள்ளார்.

இதேவேளையில், ஐ.தே.க. மீது மைத்திரி பழிசுமத்தியுள்ளார். ஆனால் இவரின் இந்த அரசியல் மூலோபாயமானது முற்றிலும் எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தியுள்ளது.

மகிந்த விசுவாசிகளைத் தனக்கு ஆதரவளிக்குமாறு உந்துதல் வழங்குவதற்குப் பதிலாக, முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்குமாறும் அவர்களை விட ஐ.தே.க. மிக மோசமான ஊழல்களில் ஈடுபடுவதாகவும் மைத்திரி பரப்புரை செய்துள்ளார்.

ஓகஸ்ட் 2015 பொதுத் தேர்தலில் ஐ.தே.க இழந்த அதேயளவு வாக்குகளை இத்தேர்தலில் மைத்திரியின் கட்சி பெற்றுள்ளது.

ஆகவே மைத்திரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எந்தவொரு வாக்குகளையும் பெற முயற்சிக்கவில்லை என்பதுடன் ஐ.தே.கவின் வாக்கு வங்கியை சிதறடிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என வாதிட முடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிங்கள இனவாத வாக்குகளை மகிந்தவின் புதிய கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார் எனக் கூறமுடியும்.

வழிமூலம் – Ceylon today
மொழியாக்கம் -நிதர்தியபாரதி

# facebook

# ஃபர்ஸ்ட் ரேங்க்



**(சென்றவார தொடர்ச்சி)**

மூளையுமே கேளுடா, கண்டிப்பா உங்கப்பா வங்கித் தருவார். ஏன்னா, நீதான் இதுவரை ஃபர்ஸ்ட் ரேங்க் எடுத்ததே இல்லையே என்று சிரித்தான்.

நெஞ்சுக்குள் சுருக்கென்றாலும் அதுதான் உண்மை. எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் செய், உன் ஃபர்ஸ்ட் ரேங்க்குக்கு நான் பொறுப்பு என்றான். அப்படி என்ன பிரமாதமான வேலை?

'நீ ஓகேனு சொல்லு, அப்புறம் சொல்றேன். வாழ்க்கையின் முதல் ஃபர்ஸ்ட் ரேங்க் மயக்கத்தில் இருந்ததால், நடுராத்திரியில் சுடுகாட்டுக்குப் போகச்சொன்னாலும்போறேண்ணா என்றேன்.

அவ்வளவு பெரிய வேலையெல்லாம் இல்ல. ஒரு பொருளை நான் சொல்ற இடத்திலிருந்து எடுத்து வரணும்" என்று சொல்ல, எனக்கு மூச்சிரைக்க ஆரம்பித்தது. எங்க வீட்டுக்கு நைட் 8 மணிக்கு வா. விபரமாய்ச் சொல்றேன். இது யாருக்கும் தெரியக்கூடாது என்று மெதுவாய், அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டே சொன்னான்.

அவன் போனபிறகு நான் பாத்ரூமிற்கு ஓடினேன். உனக்கு எதுக்குடா ஃபர்ஸ்ட் ரேங்க்? முட்டாள். சோதா பேச்சைக் கேக்காதே" என்று பாத்ரூம் கண்ணாடி சொல்லியது. மாணவர்களின் கரவொலிக்கு மத்தியில் நடந்து சென்று ரேங்க் கார்டை ஆசிரியரிடம் வாங்கி, பெஸ்ட் ஆஃப் லக் டாப்பர்" என்ற சொற்கள் என் செவிப்பறைகளில் விழுந்தாக வேண்டும் என்ற பிடிவாதம் ஒருபுறம் என்னை கடிகாரத்தைக் கண்கொட்டாமல் பார்க்க வைத்தது.

நொடிமுள்ளின் ஒவ்வொரு சுழற்சிக்கும் சைக்கிளும், வீடியோ கேம் செட்டும் தோன்றி மறைந்தன. சில சமயம் கிரிக்கெட் பேட், அதுவும் பாச்சா வைத்திருக்கிற அதே பிரிட்டானியா பேட் சிவப்பு லேபிள், கடிகாரத்தின் கண்ணாடியில் பளபளத்தது. கடைசியில் ஆசைதான் ஜெயித்தது.

ஆர்வமா, பயமா என்று பெயரிட முடியாத உணர்வுடன் என் வீட்டை விட்டுக் கிளம்பினேன். "சோதாகிட்ட டவுட் கேட்டுட்டு வரேன்மா" என்று கொல்லையில் இருந்த அம்மாவிடம் கத்திச் சொல்லிவிட்டு, அவளுக்குக் கேட்டிருக்கும் என்ற நம்பிக்கையோடு புறப்பட்டேன்.

முற்றத்தில் ஐயர் உட்கார்ந்து கொண்டு அரைகுயர் நோட்டைப் பார்த்துக்கொண்டிருந்தார். எதிரில் உட்கார்ந்திருந்தவர் ஐயரையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார். ஏதோ ஜாதக விவகாரம் எனத் தோன்றியது. அவர்கள் வீட்டு டைகர் என்னைப் பார்த்து சம்பிரதாயத்துக்கு ஒரு 'லொள்'ளிட்டு விட்டுப் படுத்துக்கொண்டது. வால் மட்டும் எதற்கோ துடித்துக்கொண்டிருந்தது. பாவம், பொங்கலும் புளியோதரையும் மட்டுமே சாப்பிடும் பிராணி.

வாடா ம்ாப்ள (அது என்ன கணக்கோ தெரியல. ஐயருக்கு நானும் மாப்பிள்ளைதான். என் அப்பாவும் மாப்பிள்ளைதான். கிராமங்களில் ஜாதிகள் உறவுகளைத் தீர்மானிப்பதில்லை) "என்ன இருட்டுக்குள்ள வர்ற, அப்பா ஏதாவது சொல்லிவிட்டாரா?

இல்ல, அண்ணாவப் பார்க்க வந்தேன் மாமா. உள்ளதான் இருக்கான் போ என்று திறந்திருந்த கதவைச் சுட்டிக்காட்டினார். கதவின் காலடியில் அகல்விளக்கு எண்ணெய்க்காகக் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது.

"வாடா ரெடிகுலஸ்... பரவால்லயே கரெக்டா வந்துட்டியே" என்று அறையின் மூலையில் நாற்காலியின் மீது அமர்ந்து எழுதிக் கொண்டிருந்த சோதா அழைத்தான். நான் ஆமாம் என்பதுபோல சமாளித்துச் சிரித்தேன். வந்து என் பக்கத்தில் உட்கார் என்று தன் இடது கையால் நாற்காலியை இரண்டு தட்டு தட்டினான். என் படபடப்பு அதிகமானது. டேபிளின் மீது திறந்திருந்த மை வாசத்தையும் பக்கத்து அறையிலிருந்து வரும் பார்வதி அம்மாளின் சோக இருமலையும் ஒருசேர கவனித்துக்கொண்டிருந்த என்னை, "என்னடா ஒரு மாதிரியா இருக்க" என்ற சோதாவின் குரல் அரசு ஆஸ்பத்திரியில் இருந்து நிகழ்காலத்துக்குக் கொண்டு வந்தது.

ஒண்ணுமில்லையே! சரி, நான் சொன்னதப் பத்தி யோசிச்சுப் பார்த்தியா? பயமா இருக்குண்ணா, அதான் வேண்டாம்னு... என்னது, வேண்டாமா?' என்று கோபமாய்க் கேட்டான்.

அப்போ நீ டியுஷன் போறேன்னு சொல்லிட்டு கிரிக்கெட் விளையாடப் போறதையெல்லாம் உங்கப்பாகிட்ட சொல்லிடவேண்டியதுதான். அவனது அடுத்த அஸ்திரத்தை எடுத்து விட்டான். என் பயத்தை வைத்தே என்னைப் பகடையாக மாற்ற முயன்றான்.

வேண்டாம்ணா, திருடறது பாவம்! திருடறதா யாருடா சொன்னா? உபயோகமில்லாமல் சும்மா இருக்கிற பொருளை நாம பயன்படுத்துறதுல என்ன தப்புங்குற? •

இல்லைதான்... பயப்படாம நான் சொல்றதைக் கவனமா கேளு என்று நான் உள்ளே வந்த வாசலையும், பார்வதி அம்மாளின் இருமல் சத்தத்தையும் கவனித்துவிட்டு மெதுவாய்ப் பேச ஆரம்பித்தான். உனக்கு நம்ம ஊர் லைப்ரரி தெரியும்ல? ம் தெரியுமே...

சமத்துப் பையன் என்று கன்னத்தைக் கிள்ளிவிட்டு, அங்க போய் ஒரு புத்தகத்தை எடுத்துட்டு வரணும் அவ்ளோதான் என்றான். என் மூளை ஞானம் வீட்டில் பாத்ரூம் எங்கே இருக்கும் என்று நினைவுகளில் படிந்திருந்த வீட்டின் புளுபிரின்ட்டை அலசியது.

நிறைய பேர் இருப்பாங்களே, கஷ்டமாச்சே?! ஒருத்தர் ரெண்டு பேர்தான்டா இருப்பாங்க. ஈஸிதான். அப்புறம் என்ன, நீயே போய் எடுத்துக்கிட்டு வரலாம்ல?

உனக்கு ஃபர்ஸ்ட் ரேங்க் வேணுமா, வேண்டாமா? உனக்கு இதெல்லாம் சாதாரண விஷயம்டா, பயப்படாம பண்ணு. பயமில்ல...

அதானே, பயம்னா பைசாக்கு எவ்வளவுனு கேக்குற ஆள் ஆச்சே நீ" என்று சிரித்தான்.

அந்தச் சிரிப்பில் என்னை ஒப்புக்கொள்ள வைத்துவிட்ட பெருமிதம் தெரிந்தது. அது உண்மைதான். நான் தயாராகிவிட்டேன்.

"புது சைக்கிள் வந்தவுடன் எனக்கு ஒரு ரவுண்டு கொடுக்கணும் பாலா. இனிமே கிரிக்கெட் விளையாட சைக்கிளிலேயே போலாம். உன் அப்பாகிட்ட கேட்டு நல்ல பேட் வாங்கிக்கோ . நான் உனக்கு கவர் டிரைவ் ஆட கத்துத்தர்றேன். பாச்சா கிட்ட கூட ஒரு பேட் இருக்கில்ல? என்று என்னை ஓரக்கண்ணால் பார்த்தான். அவனுக்கு என் ஆசைகள் முழுவதுமாய்த் தெரிந்திருந்தது.

மெதுவான குரலில், "வர்ற சனிக்கிழமைதான் சரியான நாள், லைப்ரரி இன்சார்ஜ் சாப்பிடக் கிளம்புறப்போ, படிச்சிட்டு இருக்கவங்களையெல்லாம் கிளம்பச் சொல்லுவாங்க. அதுதான் டைம், நீ தூக்கிடு. "ம்" என்று நேர் கோட்டில் தலையை அசைத்தேன். புத்தகத்தை எப்படி வெளில எடுத்திட்டு வருவ?"

முதுகுக்குப் பின்னாடி வச்சு மறைச்சுக் கொண்டுவர்றேன். சுத்தம். கவனமா பாரு" என்று டேபிளின் மீதிருந்த புத்தகத்தைக் கையிலெடுத்து எழுந்து நின்றான். சட்டையைத் தூக்கி வயிற்றில் சுருட்டியிருந்த வேட்டிக்குள் பாதிப் புத்தகத்தை மறைத்து, சட்டையைக் கீழே இறக்கி விட்டான். உள்ளே புத்தகம் இருப்பதற்கான அடையாளம் சுத்தமாகத் தெரியவில்லை.

**(அடுத்தவாரம் தொடரும்)**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1366

Search for people, places and things | Nagendram Home

### கோகுலன்

வாழ்க்கைத் துணையைத் தேடுவதில் முடிந்துவிடுகிறது பாதி வாழ்க்கை...



குடும்பத்திற்கான பணத்தேடலில் முடிந்து விடுகிறது மீதி வாழ்க்கை...!

### வக்சலன்

வாழ்க்கையில் ஜெயிக்கவில்லை என்று வருந்தாதே



அன்னையின் கருவில் கலையாமல் பிறக்கும் போதே நீ ஜெயித்துவிட்டாய்...!

### உமாசுதன்

பெண்களுக்கு அழகு முக்கியமல்ல... அடக்கம்தான் முக்கியம்...



ஆண்களுக்கு அதிகாரம் முக்கியமல்ல.... அன்புதான் முக்கியம்...!

### பரமேஸ்வரன்

அழகான முகத்தைத் தேடாதே... அது உன் வாழ்வில் ஏமாற்றத்தை உண்டாக்கும்...



அழகான இதயத்தைத் தேடு அது உன் வாழ்வில் ஏற்றத்தை உண்டாக்கும்

### நந்தகுமார்

மற்றவர்களிடம் இருப்பவை எல்லாம் நம்மிடம் இருக்கின்றனவா என்று பார்க்கின்றோமே தவிர



நம்மிடம் இருப்பவை எத்தனை பேரிடம் இல்லை என்பதைப் பார்க்கத் தவறி விடுகின்றோம்...!

### சங்கீதன்

ஒரு பெண்ணை அவளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து



பெண்ணாக மதிக்கும் ஆண்தான் சமுகத்தில் பலராலும் மதிக்கப்படுகிறான்!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 125

## தொடர்ச்சியான மருந்துப் பாவனை இலகுவானதா?



நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், வலிப்பு, நரம்புத்தளர்ச்சி போன்ற நோய்களுக்கு நீண்ட காலம் மருந்து பாவிக்க வேண்டி இருக்கின்றது.

ஆனால் கணிசமான எண்ணிக்கையான நோயாளிகள் மருந்துகளை ஒழுங்காகப் பாவிப்பதில் கவனக் குறைவாக இருக்கின்றனர். இதற்கான முக்கிய காரணங்களாவன.

1) மருந்துகளின் அவசியத்தை உணராமை.

2) நோயாளியின் குடும்ப உறுப்பினர்கள் கவனயீனமாக இருத்தல்.

3) மருந்து பாவிக்கும் முறை பற்றியும், அதன் அவசியம் பற்றி உரிய விளக்கம் அளிக்கப்படாமை.

4) வைத்தியசாலையில் இல்லாத மருந்துகளை வெளியில் வாங்கும் பொழுது அதிக செலவாகின்றமை.

5) பெண்களுக்கு குடும்பச் சுமை அதிகமாக இருத்தல்.

மருந்துகளை ஒழுங்காகப் பாவிக்காமல் விடுவதால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாகும்.

**உதாரணமாக:** நீரிழிவுக்குப் பாவிக்க வேண்டிய மருந்து ஒன்றைப் பாவிக்காமல் விடுவதால் நீரிழிவு கட்டுப்பாட்டுக்கு வருவதில்லை.

நோயைக் கட்டுப்படுத்துவதற்காக வைத்தியர் மருந்துகளின் அளவைக் கூட்ட நேரிடுகிறது. இதனால் நோய் குணமடையாமல் விடுவதோடு மருந்துகளின் பக்க விளைவுகளினால் நோயாளி பாதிக்கப்படுகின்றார். இதைத் தடுப்பதானது நம் அனைவரினதும் கரங்களிலேயே உள்ளது. இதனைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம்?

- பாவிக்கும் மருந்துகளின் அவசியத்தையும், அவை ஒவ்வொன்றையும் என்ன அளவுகளில் பாவிக்க வேண்டும் என்பதையும் வைத்தியரிடம் இருந்து அறிந்து கொள்ள வேண்டும்.
- நோயாளி தானாக இவற்றைச் செய்யமுடியாதவராயின் நோயாளியின் குடும்பத்தினரோ அல்லது உறவினரோ இவற்றைப் பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு வகையான மருந்துகளையும் தனித்தனியே சிறிய போத்தல்களில் போட்டு, போத்தலில் மருந்தின் பெயரையும், பாவிக்கும் அளவையும் குறித்து வைக்க வேண்டும்.

அடுத்த தடவை மருந்தாளரிடம் போத்தல்களைக் கொடுத்து மருந்தைப்பெற்றுக் கொள்ளலாம்.

- வைத்தியசாலையில் இல்லாத மருந்துகளை வெளியில் வாங்கும் போது விலை அதிகமாக இருப்பின் ஒரே தடவையில் நீண்ட காலத்திற்கு மருந்துகளை வாங்காமல் குறுகிய இடைவெளியில் மருந்துகளை வாங்கலாம்.
- ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்திற்கு மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.
- குறித்த ஒரு நோய்க்குப் பல இடங்களில் வைத்தியம் செய்வதைத் தவிர்த்தல் அவசியமானது.





மருந்துகளினால் பக்கவிளைவுகள் உருவாகுமிடத்து தன்னிச்சையாக மருந்துகளைப் பாவிக்காமல் விடுவதை விட, வைத்தியருடன் கலந்தாலோசித்து வேறு மாற்று மருந்துகளைப் பாவிக்கலாம்.

மேற்சொன்ன விடயங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம், மருந்துகள் ஒழுங்கீனமாகப் பாவிப்பதைத் தவிர்க்கலாம். ஒரு நோயாளி மருந்துகளை ஒழுங்காகப் பாவிப்பது நோயாளி, வைத்தியர், மருந்தாளர், தாதியர், முக்கியமாகக் குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரிலும் தங்கியுள்ளது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மருந்துகளைப் பாவிப்பது கடினமான விடயம் என்றால் பிழையாகாது. அது எவ்வளவு கடினமானதோ அவ்வளவும் முக்கியமானதும் ஆகும்.

Dr.S.வருண்பிரசாத்



## பேன் தொல்லையிலிருந்து விடுபட...




மனிதரில் வாழும் இருவகைப் பேன்களில் ஒன்று தலைப்பேன் மற்றையது உடற்பேன் (சீலைப் பேன்). அதாவது தலைப்பகுதியில் வாழும் பேன் தலைப்பேன். இது தலைமயிரின் அடிப்பகுதியில் வாழுகின்றன. மற்றையது உடற்பேன். இது சீலைப்பேன் எனவும் அழைக்கப்படும். இது மனிதர்கள் உடுத்தும் உடைகள், துணிகள், படுக்கை விரிப்புக்கள், தலையணைஉறை போன்றவற்றில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. எனினும் மனித உடலில் தோலைத் துளைத்து குருதியை உறிஞ்சுகின்றன. இவ் இரு வகைப்பேன்களுக்கு உருவ அமைப்பில் அதிக வித்தியாசம் இல்லை.

தலைப்பேன் பெண்களுக்கு அதிக அசௌகரியத்தையும் தொல்லையையும் கொடுக்கின்றன. தலைமயிர் அதிகமாகவும் அடர்த்தியாகவும் இருக்கும் தலைப்பகுதியில் இவைகள் வாழ்வதற்கு வாய்ப்பாக அமைந்து விடுகின்றன. அத்துடன் இப்பேன்களின் ஆறுகால்களிலும் கொழுக்கி போன்ற அமைப்பு காணப்படுவதால் தலைமயிரை இறுகப் பிடித்த வண்ணம் இருக்கின்றன.

ஒருவருக்கு இருக்கும் தலைப்பேன் சீப்பு, றிபன், உடைகள், தலையணை உறை, படுக்கை விரிப்புக்கள் போன்றவற்றை மற்றவர்கள் பாவிக்கும் போதும் நெருக்கமாக வாழும் போதும் இலகுவாக மற்றவருக்குப் பரவிவிடுகின்றன.

தலைப்பேன்கள் வேகமாக முட்டையிடும் "ஈர்" என்று சொல்லப்படும். மேற்படும் முட்டைகளைத் தலைமயிரின் அடிப்பகுதியில் இடுகின்றன.



பொதுவாக மனிதர்களின் காதுகளின் பின்புறத் தலைமயிர் மற்றும் பிடரிப் பகுதித் தலைமயிர்ப் பகுதிகளில் அதிகமாக இடுகின்றன. ஒருபேன் நாள் ஒன்றுக்கு 4-10 வரையிலான முட்டைகளை இடுகின்றன. ஒரு பேனின் வாழ்நாளான 30-50 நாட்களாகும். 300 இற்கு மேற்பட்ட முட்டைகளை இடுகின்றன.



இவ்வாறு இடப்பட்ட முட்டைகள் 4-9 நாட்களுக்குள் குஞ்சுகளாக மாறி அடுத்த 10-15 நாட்களுக்குள் வளர்ந்த பேன்களாக மாறுகின்றன. இவற்றின் வாய்ப் பகுதி மனிதர்களின் தோலைத் துளைத்துக் குருதியைக் குடிக்கக் கூடிய அமைப்பில் காணப்படுகின்றன.

தலைப்பேனை ஒழிப்பதற்குக் குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒரே தடவையில் மருத்துவம் பெறுவது நல்லது. ஏனெனில் இலகுவில் ஒருவரில் இருந்து மற்றவருக்குத் தொற்றிக்கொள்ளக்கூடியது. உடற் சுத்தம் பேணுவது மிக அவசியம். அடிக்கடி ஷாம்பு,சோப் பாவித்து தலை கழுவுபவர்களின் தலைப் பகுதியில் பேன்கள் தொடர்ச்சியாக வாழ்வது கடினம்.

தலைப்பேனுக்கு வைத்தியர் சிபார்சு செய்த மருந்தை (Lotion) இரவில் படுக்கைக்குப் போகும் முன்னர் தலைக்கு எண்ணெய் பூசுவது போல் தலைமயிரின் அடிப் பகுதியில் இருந்து நுனிப்பகுதி வரை பூசி தலையைத் துப்புரவான துணி அல்லது வெள்ளை துப்புரவான துணியால் கண்களுக்கு மேலுள்ள பகுதியைச்சுற்றிக் கட்டுதல் நல்லது.

கண்,முகப்பகுதிகளுக்கு மருந்து பரவுவதைத் தடுப்பதற்கு இது உதவும். பின் காலையில் ஷாம்பு போட்டு தலைப்பகுதியை கழுவுதல் வேண்டும். அல்லது காலையில் மருந்தைப் பூசிய பின்பு 3 மணித்தியாலங்களின் பின் தலையை ஷாம்பு போட்டுக் கழுவலாம்

இந்தச் செயன்முறையை ஒரு முறை மட்டும் செய்தால் போதாது. ஏனெனில் பேனின் முட்டைகள் 4-5 நாட்களின் பின் பொரிக்கத் தொடங்கும். எனவே வாரத்துக்கு இரு தடவைகள் வீதம் நான்கு தடவைகள் செய்வது நல்லது.

தலைப்பேன், சீலைப்பேன் போன்றவற்றை முற்றாக ஒழிக்க பாவித்த உடைகள், தலையணையுறைகள்,படுக்கை விரிப்புக்கள் போன்றவற்றை சுடு நீரில் அவித்து, துவைத்து பின்பு நன்றாக காய விட்டு உபயோகித்தல் நல்லது. அத்துடன் தங்கும் அறைகள் துப்புரவாக வைத்திருத்தல் வேண்டும். மெத்தைகளை நன்றாகச் சூரிய வெளிச்சத்தில் இரு புறமும் காய விட்ட பின்பு பாவித்தல் வேண்டும்.

சுதாகரன் - தாதிய உத்தியோகத்தர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்